# பரிசு மழை!

ராசி

# பரிசு மழை

டாக்டர் ரா. சீனிவாசன்,
எம்.ஏ, எம்.லிட், பிஎச்.டி.

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
சென்னை – 600 030.

முதற் பதிப்பு : டிசம்பர், 1995
ஆசிரியர் : ரா. சீனிவாசன்
தலைப்பு : பரிசு மழை (சிறுகதைத் தொகுப்பு)

**விலை : ரூ. 25.00**

வெளியீடு : அணியகம், 5, செல்லம்மாள் தெரு, ஷெனாய் நகர், சென்னை - 600 030
தொலைபேசி : 61 12 30.

## பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | கம்ப ராமாயணம் | 30.00 |
| 2. | மாபாரதம் | 30.00 |
| 3. | சீவக சிந்தாமணி | 25.00 |
| 4. | திருவிளையாடற்புராணம் | 30.00 |
| 5. | கண்ணனின் திருக்கதை | 20.00 |
| 6. | நளன் தமயந்தி | 20.00 |
| 7. | நவீன தெனாலிராமன் | 15.00 |
| 8. | குப்பை மேடு | 25.00 |
| 9. | படித்தவள் | 25.00 |
| 10. | அணியும் மணியும் | 30.00 |
| 11. | நாலடியார் செய்திகள் | 20.00 |
| 12. | திருக்குறள் செய்திகள் | 40.00 |
| 13. | சங்க இலக்கியத்தில் உவமைகள் | 60.00 |
| 14. | மொழியியல் | 50.00 |
| 15. | திருப்பாவை விளக்கவுரை | 20.00 |
| 16. | திவ்விய பிரபந்த சாரம் | 15.00 |
| 17. | சொல்லின் செல்வன் (நாடகம்) | 25.00 |

V.P.P.யில் பெறலாம், அஞ்சல் செலவு பதிப்பகம் ஏற்கும்.
சங்கப் பலகை மையங்களில் நேரில் கிடைக்கும்.

***ரோஹினி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 14.***

# முன்னுரை

காவியங்களைப் பழைய காலத்தில் எழுதினர்; ஒரு தலைவனை வைத்துப் பல கிளைக் கதைகளை உடன் சேர்த்தனர்; அதையும் சிறுகதைத் தொகுப்பு என்று கூறலாம்.

இன்று காவியங்களை எழுத முடியவில்லையே என்று பலர் சுட்டிக் காட்டி உள்ளனர். அவற்றின் இடத்தைச் சிறுகதைத் தொகுப்புகள் பெற்றுள்ளன. அவை இன்று வாசகர்களை ஈர்க்கின்றன.

வாசகர்கள் தம் சுவைக்கு ஏற்ப ஆசிரியர்களைத் தேடுகின்றனர். வாசிக்கும் ஆர்வம் மிக்கு உள்ளது.

என்னால் சிறுகதைகளை எழுத முடிந்தது; எழுதினேன்; 'பரிசு மழை' என்ற தலைப்பில் வெளியிடுகிறேன்.

இன்று சமுதாயம் பல மாற்றங்களைப் பெற்று வருகிறது; பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றது. கருத்தோட்டம் மாறி வருகிறது. அவற்றைச் சுட்டிக் காட்டினால்தான் இலக்கியம் உயிர்த்துடிப்போடு இயங்கும். மற்றவர்கள் காண்பதுதான் இது. அவர்கள் பேசிக் கொள்பவை இவை.

ஒரு பத்திரிகை நிருபர் செய்யும் வேலையை என் எழுத்துச் செய்து இருக்கிறது. அவர்கள் பேசும் உரையாடல் களை இங்குப் பதித்து உள்ளேன். பத்திரிகை நிருபர்கள் நேரில் சென்று சந்தித்து எழுதுகிறார்கள். இவை சந்திக்காமலேயே எழுதியவை.

# 4

எதுவும் கற்பனையில் இருந்து எழுதப்பட்டது அன்று. கற்பனை துணை செய்து இருக்கிறது. இவை அன்றாட நிகழ்ச்சிகள். நாம் சந்திக்கும் மாந்தர்கள்.

இன்று மாந்தர்களின் எண்ணப் போக்குகளில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவை புதுமை என்று குறிப்பிடப்படுகின்றன. அதனால் என் எழுத்துப் புதுமை பெறுகிறது.

பாரதி எதிலும் புதுமை காண வேண்டும் என்பார். சொற்புதிது, சுவை புதிது வேண்டும் என்பார். செய்திகளும் புதுமை உடையன.

எழுதுவதில் ஒரு தனித்துவம் உள்ளது. அது ஆசிரியனின் தனி முத்திரை. அது எழுத்தின் இயக்கத்திற்குத் துணை நிற்கின்றது. ஏன்? அதுதான் எழுத்தே என்றும் கூறலாம். எதை எழுதுகிறான் என்பதோடு எப்படி எழுதுகிறான் என்பதும் எதிர்பார்க்கப்படுபவது.

'பரிசு மழை' என்ற தலைப்பு அறிமுகம் ஆகிய தலைப்பு. இன்று எதற்கு எடுத்தாலும் பரிசு என்று கூறி விளம்பர உச்சரிப்போடு இந்த நச்சரிப்பும் சேர்ந்து இருக்கிறது.

அந்த அலை வீச்சு எவ்வளவு தரக்குறைவு என்பதைச் சுட்டிக்காட்டக் கதைகள் சிலவற்றில் இந்த உத்தி பயன்படுத்தப்பட்டு உள்ளது. அதுவே முதல் கதையின் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இத்தொகுப்புக்கு வாசகர்களின் வரவேற்பு இதற்குத் தரும் பரிசு மழையாகும்.

**ரா. சீனிவாசன்**

# 1. பரிசு மழை

அவள் சிரிப்பு; அதற்கு ஒரு தனிக் கவர்ச்சி இருந்தது. அது அவள் முகத்துக்கு முன்னுரை எழுதியது போல் இருந்தது. அது அவள் அடக்கத்தில் இருந்தது; கலகலப்பு அல்ல அது; முகை அலர்வது போன்ற நகை; அந்தப் புன்முறுவலுக்குப் புறங் காட்டாதவர் யாரும் இருக்க முடியாது; இந்த உலகத்தையே அதைக் கொண்டு அவள் விலை பேச முடியும் என்ற நினைவு தோன்றும்.

அவள் நகைப்பு அவள் வனப்பைக் கூட்டித் தந்தது. அதுவே அவளுக்கு மூலதனமாகவும் அமைந்தது. சிரிப்புக்கு இப்பொழுது புதிய சந்தை கிடைக்கிறது. புதுப்புதுத் தொலைக்காட்சிகள் நாளொரு வடிவும் பொழுதொரு வண்ணமும் ஆகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அங்கே அவளுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது.

நிகழ்ச்சிகளை நிரல்படுத்த அவள் விரல் அசைவுகள் பயன்பட்டன. நடிப்புத் திறமை அவளிடம் படியாத காரணத்தால் அவள் அந்தத் தொழிலைவிட்டுத் தாவ முடியாமல் 'சர்க்கஸ் மானேஜராகவே' பணி செய்தாள். மற்றவர்களைக் கேள்விகள் கேட்டு விசாரணையில் அவள் நிறுத்தினாள்; பிறக்காத குழந்தைகளும் கேள்விகள் கேட்டு அவளைப் பேச வைத்தனர். அவள் இந்த நிகழ்ச்சிகளில் 'சவுக்கடி சந்திரகாந்தா'வாகச் செயல்பட்டாள்.

விளம்பரக்காரர்கள் அவள் சிரிப்புக்கு விலை கொடுத்தனர். சோப்புப் பெட்டி முதல் சோடா புட்டி வரை அவள் உபயோகப்படுத்தியதாக விளம்பரம் செய்யப் பட்டது. விற்பனைப் பொருளோடு அவளும் வியாபாரப் பொருள் ஆயினாள்.

அவள் சிரிப்புக்காகவே அவன் அவளிடம் காதல் வலை வீசினான்; அவள் அவன் ஈர்ப்புக்கு வார்ப்பாக ஆயினாள்; இருவரும் இணைவதற்கு அந்தச் சிரிப்பு அழகே காரணமாக இருந்தது.

ரசனை மங்க ஆரம்பித்தது; எந்த அழகும் பழகிவிட்டால் மந்தமாகி விடுகிறது என்பது அவன் கண்ட அநுபவமாக இருந்தது. மேலும் அவள் தொழிலே சிரிப்பாக இருந்ததால் அது நடிப்பாக அவளுக்குப்பட்டது. அதில் அவளுக்கு ஒரு அலுப்பு ஏற்பட்டது போல் தோன்றியது.

சிரிப்பதற்குப் புதுமைகள் தேவைப்பட்டன. அழகுகூட நிரந்தரமானது அல்ல; அதற்குமேல் ஒன்று அங்கே குறைவாக இருந்தது. வீட்டில் அவள் மவுனம் கடைப்பிடித்தாள்; அது அவளுக்குத் தேவைப்பட்டது. அவளிடம் எதிர்பார்த்த ஒன்று மறையத் தொடங்கியவுடன் அவன் காதல் உறவு தேய்பிறை ஆகியது; சில்லறைச் செய்திகள் சச்சரவுகளை ஏற்படுத்திக் கொடுத்தன.

வேறு வழியில்லை; அவளுக்குத் தனிமை தேவைப் பட்டது. அறிவுள்ள எந்தப் பெண்ணும் நீடித்து ஒருவனிடம் தொடரமுடியும் என்ற நம்பிக்கை அவளிடம் குறைந்து விட்டது. வாழ்க்கையை அந்தச் சிறிய வரை கோட்டுக்குள் அகப்படுத்திக் கொள்ள அவள் விரும்பவில்லை.

"ஏன் அவன் உறவு?" என்ற நினைவும் எழுந்தது; அதைவிடவும் அவளால் முடியவில்லை. "ஏன் ஒன்றாக இணைய முடியவில்லை?" என்ற சிந்தனைகள் தொடர்ந்தன.

அவள் சிநேகிதிகள் அடிக்கடி வந்து சென்றனர். ஆடவர் இல்லாத வீடு என்பதால் அதிக நேரம் அங்கே செலவிட்டனர்.

"ஏன்'டி உன்னால் அவரோடு வாழமுடியவில்லை?" என்று வினவினர்.

"அவர் என்னிடம் சிரிப்பை எதிர் பார்க்கிறார்; என்னை அவர் எதிர்பார்க்கவில்லை" என்றாள். அதற்குச் சரியான பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை.

மாதங்கள் சென்றன; எதையும் அவள் பிரமாதப் படுத்தவில்லை; திரைநடிகையாக இருந்தால் பேட்டிகள் பிரச்சனையை மிகுதிப் படுத்தி இருக்கும். அந்த அபாயம் அவளுக்கு ஏற்படவில்லை.

எதிர்பாராத அவள் 'முன்னாள் தலைவன்' கதவைத் தட்டினான்; அதாவது அழைப்பு மணியை அழுத்தினான்.

அய்யப்பன் கோயிலுக்குச் செல்லும் பக்தன் வந்து நின்றார். ஒரு துறவி தன் கண் முன்னால் நின்றதைப் பார்த்தாள்; அவளை அறியாமல் மறைந்து கிடந்த சிரிப்பு வெளிப்பட்டு அவனைத் தழுவிக் கொண்டது. அவள் அந்த வீட்டைக் காலி செய்துவிட்டாள்; தனிமைக்கு விடுதலை தந்தாள் என்று பேசப்படுகிறது. இந்த மாற்றத்துக்குக் காரணம்? விடைகளுக்கு நிச்சயம் பரிசு தரலாம்; பரிசு மழை என்று விளம்பரப் படுத்தினால் இதனை ஒரு வினாவாக அமைக்கலாம்.

## 2. சந்திப்புகள்

சந்திப்புகள் அதனால் ஏற்படும் விளைவுகள் பல; அவற்றின் விரிவு இங்குத் தேவை இல்லை.

பூங்கா என்றால் அங்குப் பூக்களைப் பார்க்க முடிவதில்லை. நிழல் தரும் மரங்கள்; ஆரோக்கிய

வாழ்வுக்கு வழி வகுக்கும் நடை பாதைகள்; அவற்றை நிறைவு செய்யும் சுருசுருப்புக்காரர்கள்.

அந்தப் பூங்காவைச் சுற்றி வருபவர் பல திறத்தினர். மருத்துவர் அறிவுரைப்படி எடை குறைப்பதற்காக. நடை பயில்பவர் பலர்; குளிர் சாதனங்களில் உறைபனியாகக் கிடப்பவர்கள் வியர்க்கும் தடங்களாக அந்தப் பூங்காவைப் பயன்படுத்தினர்.

எந்த நோக்கமும் இல்லாமல் ஒரு சிலர் திரிவதும் உண்டு. அவர்களில் ஒருவர் மற்றொருவர் கண்ணில் அகப்பட்டார்; அடுத்தவருக்கும் எந்த வேலைவெட்டி இருந்ததாகத் தெரியவில்லை.

இரு கை ஒடிந்த நாற்காலியை அவர்கள் இருக்கை யாகக் கொண்டனர். பொதுவாக பொதுப் பூங்காக்களில் கை ஒடியாத நாற்காலிகளைக் காண்பது அரிது. கைவைத்துக் கொண்டு பேச முடிவதில்லை.

அவர் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்து இருந்தன. பெரும்பாலும் இப்படிப் பூங்காவில் உட்காருகிற வர்கள் தனிமையைத்தான் நாடி வருகிறார்கள்.

இரண்டுபேர் உட்கார்ந்து இருந்தால் பேசாமல் இருப்பது இந்த நாட்டு வழக்கம் அல்ல; ரயில் வண்டிகளில் ஏறி அமர்ந்தால் ரேஷன் கார்டு விசாரணைகள் நடக்காமல் இருப்பது இல்லை.

"மூத்த பையன் டை கட்டிக் கொண்டு விற்பனை விளம்பரக்காரனாக இருக்கிறான்; அவனுக்கு வேறு நல்ல வேலை கிடைக்கவில்லை" என்றார்.

"டை கட்டிக் கொண்டு" என்று கூறியது மற்றவருக்கு வியப்பைத் தந்தது.

"இப்பொழுது இப்படித்தான்; இளைய வாலிபர்கள் பாண்டும் சட்டையும் அணிந்துகொண்டு சென்சஸ் கணக்கு எடுப்பவர் போல் வீட்டுப் படிகளில் ஏறுவதைப் பார்த்திருக்கலாம். அவர்கள் டை கட்டிக் கொண்டு இருப்பார்கள்" என்று விளக்கம் தந்தார்.

"ஏன் இது?" என்று கேட்டார்.

"இது ஒரு அடையாளம், கருப்பு அங்கவஸ்திரம் அணிந்து வருபவர் சபரிமலை உண்டியல்கள்; கட்சிக்காரர்கள் அவர்களைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. கருப்பும் சிவப்பும் அவர்களைக் காட்டிக் கொடுக்கும். மஞ்சள் புடவை வேட்டி கட்டிக் கொண்டு வந்தால் திருப்பதி என்று சொல்லலாம்; இப்படி எல்லாம் அறிமுக அடையாளங்கள்" என்று விளக்கினார்.

"அடுத்தவன் கவிதைகள் எழுதுவான்; டி.விக்களைச் சுற்றி வருவான்; கேட்டால் சிறகடித்துப் பறக்கிறேன் என்கிறான்" என்றார்.

"ஒரு சில கவிஞர்கள் உச்சாணிக் கிளையைத் தொடுகிறார்கள்; அந்தக் கவர்ச்சி இவாகளுக்கு" என்று மற்றவர் பதில் கூறினார்.

"அடுத்தவள் பெண்; படித்துவிட்டு அஞ்சல் கல்வித் தேர்வுகள் எழுதிக் கொண்டிருக்கிறாள்" என்றார்.

"அது என்ன? அதில் என்ன சிறப்பு?"

"இந்த அஞ்சல்கல்வி நிறுவனங்கள்தான் மணமாகாத பெண்களுக்கு இன்றைய அடைக்கலம். என்ன செய்கிறாய்? என்று கேட்டுப் பாருங்கள்.

"அஞ்சல்வழிக் கல்வி" என்று கூறுவார்கள்" என்றார்.

அவர்கள் ஒருவரும் உறுதியான வாழ்க்கையை எட்டிப் பிடிக்கவில்லை என்பது அவர் பேச்சின் சுருக்கமாக இருந்தது. நெருக்கமாக அப்படி ஒன்றும் அவர்கள் பழகியதில்லை. இருந்தாலும் மற்றவருக்கு அந்த ஆசாமியை மறக்க முடியவில்லை. அந்தப் பூங்காவில் அவர் பார்வை அந்த உருவைத் தேடியது; பிறகு அவரைப் பார்க்க முடியவில்லை.

ஆண்டுகள் மூன்று கடந்தன; பூக்கடை பக்கத்தில் ஒரு சாக்கடை; அதனை ஒட்டி ஒரு டீக்கடை. அங்கே அவர் எதிர்பாரதபடி காணப்பட்டார். விலை குறைவு; அதனால் தெருவோர டீக்கடை அவருக்குப் புகலிடம் தந்திருக்கிறது.

சூடாக டீ குடிக்க வேண்டும்; எங்கே குடித்தாலும் என்ன? டீ ஒன்றுதான்; பில்தான் வேறு; அங்கே இடத்துக்குக் காசு இல்லை; உணவு அகங்களில் அதற்குத் தான் காசு; இந்த வித்தியாசத்தை அறிந்தவர்கள் இருவரும். அதனால் அந்த இடத்தில் அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

"என்ன உங்களைப் பூங்காவில் காண்பது இல்லையே?" என்று ஒரு அம்பு தொடுத்தார்.

"பெரியவன் பெரிய கம்பெனி மேனேஜர் ஆகிவிட்டான் அடுத்தவன் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதி வாரப் பத்திரிகைகளுக்குப் பேட்டிகள் கொடுத்துக் கொண்டு இருக்கிறான்"

"பெண் ஒரு பேரனை எனக்குப் பெற்றுத்தந்து குபேர வாழ்வு வாழ்கிறாள்" என்றார்.

அதற்குமேல் அவர்கள் பேசினார்கள்; அதைப் பற்றி எழுதுவது தேவை இல்லை.

*அந்தப் பெரியவர் ஏன் இப்பொழுது பூங்காவுக்குச் செல்வது இல்லை. இதுதான் வினா! பரிசு மழைக்கு உரிய கேள்வி இது!.*

## 3. அதிர்ச்சி

*ஸ்கூட்டர் என்றாலே அதற்கு இரண்டு சக்கரங்கள் என்பது பெயர். சைக்கிளில் இருவர் செல்வதற்கு ஒரு காலத்தில் அனுமதிக்கப்படுவது இல்லை; அஞ்சி அஞ்சித்தான் பின்னால் ஒருவரை ஏற்றிச் செல்வது அப்பொழுது நிலை; "அடிபட்டுச் சாகட்டும்; அதை ஏன் நாம் தடுப்பது" என்ற தாராளக் கொள்கையில் இருவர் போவதை இன்று தடுப்பது இல்லை. ஸ்கூட்டர் வந்ததும் அதில் தனியொருவர் செல்வது மிகுதியாக இல்லை. ஆபீசுக்குப் போவது என்றால் தனிமை; வெளியே செல்வது என்றால் இருவர் செல்வதுதான் இனிமை; அடைபட்டுக் கிடந்தவர்கள் அதில் தடையின்றி ஏறி வெளியே செல்கின்றனர். இருவர் செல்வதுதான் அதற்கு ஏற்றம் சேர்க்கிறது.*

*காதலர்கள் என்றால் அவர்களை ஸ்கூட்டரில்தான் பார்க்க முடிகிறது. கலியாணம் ஆனதும் மாப்பிள்ளை கேட்கும் முதல் பொருள் ஸ்கூட்டர்தான்; அதை வாங்கித் தரவில்லை என்றால் பெண்ணை அழைத்துச் செல்ல மறுப்பவரும் உளர்; மாப்பிள்ளை என்றால் அவரோடு பிறந்ததுதான் ஸ்கூட்டர் என்று ஆகிவிட்டது. அது கூட இப்பொழுது காருக்கு நிகராகப் போட்டி போட்டுக் கொண்டு விலை உயர்வு அடைந்து விட்டது என்று கேள்வி.*

*அவர்கள் இருவரை ஸ்கூட்டரில் பார்ப்பது வழக்கமாகி விட்டது. அவர்கள் யார்? எங்கிருந்து*

வருவார்கள் என்பது தெரியாது; இதே தெருவில் அவர்களைப் பலமுறை பார்க்க நேர்ந்தது; அவனை இறுகப் பிடித்துக் கொண்டு தனக்குள்ள பிடிப்பைக் காட்டிக் கொள்ள உதவும் வண்டி இதுதான். இருவர் என்பதால் அவர்கள் இந்தத் தெருவில் செல்வதால் கணவன் மனைவியராகத்தான் இருக்கவேண்டும்; அவர்கள் செல்வதில் எந்தப் புதுமையும் இல்லை. என்றாலும் தொடர்ந்து அவர்களைப் பார்ப்பதால் அவர்கள் மற்றவர் மனதில் பதிவினை ஏற்படுத்தினர். தெருவில் தக்காளி விற்பவன் அவனை அடிக்கடி பார்க்க முடிகிறது; இளநீர் வண்டிக்காரன்; வாழைப்பழவண்டி, உப்பு மூட்டை இழுத்துச் செல்பவன், பலூன் விற்பவர் இப்படி எத்தனையோ பேர்; அவர்களில் இந்த ஸ்கூட்டரும் ஒன்று; காரில் சென்றால் அந்த மூட்டை முடிச்சுகளைக் கவனிக்க முடிவதில்லை.

அதே இருவர் கடற்கரைச் சாலையில் பார்த்தால் அவர்களை வேறுவிதமாகவும் பார்க்க நேர்கிறது. அதுவும் மாலைப் பொழுதில் அங்கு மணல் பக்கத்துச் சாலையில் ஒதுக்கி விடுபவரை முடிவு செய்ய வேண்டி நேர்கிறது. அதிகமாக மேல் விழுந்து நடந்தால் அவர்கள் மணத் தம்பதிகள் ஆக ஒத்திகை செய்து கொள்கிறார்கள் என்று நினைக்க நேர்கிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் வந்தால் ஒரு சிலர் குட்டிகளோடு வருவது உண்டு; அதாவது குழந்தை குட்டிகளோடு முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டு வந்து சேர்கின்றனர். ஐஸ்கிரீம், வேர்க்கடலை சுரு சுருப்புப் பெறுகிறது. அந்த உற்சாகமான சூழ்நிலையில் 'பின்சீட்டை' மற்றொருவன் ஸ்கூட்டரில் பார்க்க நேர்ந்தது. அவளைப் பற்றிய அபிப்பிராயம் மாறத் தொடங்கியது; அதே அனுபவம். மற்றோர் முறையும் காணப்பட்டது.

அந்தப் பிடிப்பின் கணவரை மற்றொருவர் 'ட்ரைவின்' அந்த இடத்தில் நேருக்குநேர் காணநேர்ந்தது. இது சன் டி.வி.யில் ஞாயிறு ஒன்பது மணிக்கு நடத்தும் நிகழ்ச்சி அல்ல; எதிர்பாராத சந்திப்பு; முன்பின் பேசியது இல்லை. ஒரே மேஜை நாற்காலிகள் காலியாக இருந்தன. அதனால் அடுத்து அடுத்து அமர நேர்ந்தது; அந்த உணவக 'சர்வர்' ஒரே பில்லை இருவருக்கும் சேர்த்துத் தவறாகக் கொடுத்து விட்டான்; அதைப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மற்றவருக்கு அவரிடம் பேசவேண்டும்; நட்புறவு கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

"நான் தருகிறேன்; கொடுங்கள்" என்றார்.

"முன்பின் பழக்கம் இல்லை; நீங்கள் தருவது சரி அல்ல; அவனை வேறு 'பில்' போடச் சொல்லலாம்" என்றார் முதல்வர்.

"உங்களை எனக்குத் தெரியும்; உங்களை ஸ்கூட்டரில் பலமுறை பார்த்திருக்கிறேன்" என்றார் இவர்.

அவர் மறுத்து விட்டார்; 'பில்' வரும் வரை காத்திருக்க நேர்ந்தது.

அவரைப் பழி வாங்க வேண்டும் என்ற முனைப்பு ஏற்பட்டது; பிறர் வருந்துவதும் சிலருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதை 'வருத்தி மகிழ்வு காணல்' என்று உளநூலார் கூறுவர்.

"உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன்; அதிர்ச்சி அடைய மாட்டீர்கள்" என்ற பீடிகையுடன் தொடர்ந்தார்.

அவர் மனநிலையை மற்றவர் அறிந்து கொண்டார்; ஏதோ குறும்பு அதில் அமைந்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார்.

“நான் சொல்லும் பதிலைக் கேட்டு நீங்களும் அதிர்ச்சி அடையக் கூடாது” என்று அவர் பதிலுக்கு ஒரு அடி கொடுத்தார்.

“இவருக்குச் சரியான பாடம் கற்றுக் கொடுப்பது” என்று மற்றவர் முடிவுக்கு வந்தார்.

“உம் மனைவியை மற்றொருவர் பின்னால் ஸ்கூட்டரில் கடற்கரையில் பார்த்தேன்” என்றார்.

“அவள் என்மனைவி அல்ல; அவர் மனைவி; என் ஸ்கூட்டரில் பார்த்து இருப்பீர்” என்று பதில் சொன்னார்.

இவர் முகம் கறுத்துவிட்டது. அதற்குமேல் இருவரும் பேசாமல் தனித்தனியே அவரவர் ஸ்கூட்டரில் ஏறிச் சென்றனர்.

இரண்டு பில்களுக்கு ‘டிப்ஸ்’ தனித்தனி சர்வருக்குக் கிடைத்தது.

இவர்அந்தச் செய்தியைச் சொன்னது சரிதானா? உண்மையில் அவள் யாருடைய மனைவி? இந்த வினாக் களுக்கு விடை தேடி வைப்பது நல்லது.

## 4. சீற்றம்

அவள் தன் பிறந்த வீட்டுக்கு ஏழாவது; அவள் ‘ஏழாவது’ என்று அவளுடைய வகுப்பை அவள் தாயார் அடிக்கடி சுட்டிக் காட்டி வருவாள்; ஆறாவது பிறந்தால் ஆனைகட்டி வாழ்வான் என்று ஆண்பிள்ளைக்குக்

கொள்வார்; ஏழாவது பெண் பிறந்தால் அதிர்ஷ்டமளிக்கும் என்று கூறுவார்கள்; எட்டாவது பிறக்காமல் அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்டார்கள் என்று கேள்வி.

அந்தக் குடும்பத்தின் ஏழ்மைக்கு அவள் ஏழாவது துணையாகியது. வறுமைக்குக் குழந்தைகளே காரணம் என்று கூற முடியாது. ஆறுபேர் சாப்பிடுவது ஏழாவதுக்குப் பங்கிட்டுத் தரப்படுகிறது; அவ்வளவுதான்; அதற்குள் முதலாவது முன்னுக்கு வந்து விடுவதால் இந்த ஏழாவது சுமையாகப் படவில்லை; என்றாலும் ஏழும் பெற்ற பிறகு தான் அளவான குடும்பம் வளமான வாழ்வுக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை தோன்றியது. இந்தப் பெண்ணுக்குக் குழந்தை பெற்றுக் கொள்வதைவிட பாவமான செயல் வேறு ஒன்று இருக்க முடியாது என்ற ஆழமான கருத்துப் பதிவு ஆகிவிட்டது.

இவளைக் கட்டிக் கொடுக்க வீட்டில் பொன்கட்டி இல்லை; என்றாலும் வட்டிக்கு வாங்கிக் கடைத் தேறி வைக்க முடிந்தது. பணம் இல்லை என்பதால் மணம் இல்லை என்று யாரும் தள்ளிப் போடுவது இல்லை. இந்தக் கூட்டுமணம் இலவச மணங்கள் அந்தக் காலத்தில் இருந்திருந்தால் அவர்கள் பயன்படுத்தி இருப்பார்கள்; வந்தவன் நொந்து போன குடும்பத்துக்கு எந்தத் தொல்லையும் தரவில்லை; பார்த்தான்; அவனுக்குப் பிடித்து விட்டது. கட்டிய சேலையோடு வந்தால்போதும் என்றான்; அவள் மாற்றுச் சேலைகளோடுதான் அவனோடு சென்றாள்.

பழைய ஒரு வீடு; அது பழையது; அதனால் குடிக்கூலி குறைவு. பழைய வீட்டில் இவர்கள் புதுக்குடித்தனம் சென்றார்கள். வீடு குடிக்கூலி விடுகிறவர்களுக்கு ஜனத்

தொகைக் கணக்கு அந்த வகையில் இவர்கள் சாதகமாக இருந்தனர். அதிக எண்ணிக்கை இருந்தால் அதற்காக வருகிறவர்கள் கூடுதல் தொகை ஏதும் தரப்போவது இல்லை. குறைவாக இருந்தால் கூச்சல் மிச்சம்; தண்ணீர் அது முக்கியமான பிரச்சனை. சிலசமயம் கியூவில் நிற்க வேண்டி இருக்கும்; அது வேதனையான விஷயம். எல்லாருக்கும் சேர்த்து ஒரே பொது குளியல் அறை; பொது என்றால் ஒருவர் முடித்த பிறகுதான் அடுத்தவருக்கு அங்கு இடம். வீட்டைப் படைத்தவர்களுக்கு இவர்களை மிகவும் பிடித்துவிட்டது. மாதம் குடிக்கூலி ஒழுங்காக வரும்; அவனுக்கு நிரந்தரமான வேலை; புதுமணம் செய்து கொண்டவர்கள்; வெளியே அதிகம் தலைகாட்ட மாட்டார்கள். பிறர் ஜோலிக்கு வரமாட்டார்கள். தனியாக இருக்கும் போது கூடமாட அவள் வந்து உதவி செய்வாள்; பார்த்தால் நல்ல பெண்ணாகவும் இருந்தாள். அந்த வீட்டுக்கு உரியவர்களுக்கு அவர்களை மிகவும் பிடித்து இருந்தது; அவர்கள் இருப்பது தெரிவது இல்லை; அவன் வருவது போவது தெரியவில்லை; இப்படி அவர்களைப்பற்றிய நற்சான்று இதழ்கள்.

ஆண்டுகள் ஐந்து கழிந்தன; என்றாலும் அவர்களை அதிகம் கூட்டிக் கொடுக்கச் சொல்ல முடியவில்லை; புதிய வசதிகளை வீட்டார் ஏதும் செய்து தரவில்லை; மேலும் அது பழைய வீடு; குழந்தைகள் இல்லாத வீடு; வீட்டை அவர்கள் சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தார்கள்; அடிக்கடி சுண்ணாம்பு அடிக்கும் வேலையும் இல்லை.

ஆற்றொழுக்காக அவர்கள் அங்கு வாழ்க்கை அமைந்திருந்தது; அவர்கள் குழந்தை பெறாமலேயே இருந்தார்கள்; அது அவர்கள் சொந்தப் பிரச்சனை; அதனால் அவர்கள் வருத்தம் தெரிவித்ததாகத்

தெரியவில்லை ஆனால் மற்றவர்களுக்கு விமரிசனங்கள் செய்யாமல் இருக்க முடியவில்லை; அதிகம் பெற்றவர்கள் அவர்களைக் கண்டு பொறாமைப் பட்டுப் பேசினார்கள்; கிழடுகள் சிலர் அவளை மலடி என்றும் கேட்டும் கேளாமலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையாளும் தடுப்புச் சாதனங்கள் என்ன என்று கேட்டு அறிய ஆவல் கொண்டவர்களும் உண்டு; தவறு செய்யும் கன்னிப் பெண்கள் சிலர் எப்படி அவர்கள் தப்பித்துக் கொண்டு வருகின்றனர் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தனர்; ஆனால் அவர்கள் எப்படிக் கேட்க முடியும்? "உனக்கு ஏன் அதற்கு?" என்று திருப்பிக் கேட்டு விட்டால் பதில் சொல்ல முடியாது. கன்னிப் பெண் என்றால் அவள் தவறுகளே செய்ய மாட்டாள்; அவர்களுக்கு அந்த உரிமை கிடையாது எதையும் தெரிந்து கொள்ள.

இந்த வகையில் அந்த வீடு தனித்துவம் கொண்டதாக விளங்கியது. குழந்தை இல்லை என்றால் மற்றொரு கெடுதலும் உடன் சேர்கிறது. எப்பொழுதும் வீட்டை அவர்கள் சுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள். ஒரு சிறு குப்பை விழுந்தாலும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடிவது இல்லை. அஞ்சலி படத்தில் வருவதுபோலக் குழந்தைகளை அவர்கள் சேர்ப்பது இல்லை சுவரில் கிறுக்கி விடுவார்கள் என்ற அச்சம்; அதைவிட அங்குவந்து கூட்டல் கழித்தல் கணக்குப் போட்டுவிடுவார்கள். இவள் பலபேருடன் பிறந்தவள்தான்; மற்றவர்கள் இவளுக்குச் சேவை செய்து இருக்கிறாள்; இவள் செய்து பழக்கம் இல்லை.

இவர்கள் இருமையைப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்த வீட்டுக்கார அம்மாவுக்கே ஒரு பிரச்சனை

உதயம் ஆகியது. அவர்கள் பேர்த்தி அந்த வீடு மிகவும் சுத்தமாக இருந்ததால் ஒதுங்குவதற்கு அந்த வீட்டைத் தேர்ந்து எடுத்தாள். அது சுகாதார வசதியைத் தேடி இருக்கிறது; அவ்வளவுதான்.

அதை அகற்றுவதற்கு வீட்டுப் பெரிய அம்மாவை வந்து கூப்பிட நேர்ந்தது.

"ஏன்'டி அம்மா! நீதான் எடுத்துப் போடக் கூடாதா? நீ குழந்தை பெறாதவள்; உனக்கு இந்த அருமை எங்கே தெரியப் போகிறது? என் பேர்த்தியைக் கடிந்து கொண்டாயாமே?"

"ஒவ்வொன்றுக்கும் ஒரு இடம் இருக்கிறது; இது அதற்கு ஏற்ற இடம் இல்லை; அதற்கு உரிய இடம் உள்ளது" என்று சுட்டிக் காட்டினாள்.

"இதற்குத்தான் குழந்தை இல்லாத குடும்பத்தை வைக்கக் கூடாது" என்று மாற்றிப் பேசினார்.

"இது ஒரு வீடா? லாட்ஜ் மாதிரி இருக்கிறது; குழந்தைகள் வர போக இருந்தால்தானே அது வீடு; பெரிய தவறு செய்து விட்டேன்'' என்று வியாக்யானம் செய்தார்கள்.

"வரும்போது குழந்தை இல்லை; அதனால் வீட்டை விடுகிறேன் என்று கூறினீர். இப்பொழுது உங்களுக்காக நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது. வரட்டும் அவரிடம் சொல்கிறேன்" என்று ரோஷமாகக் கூறினாள்.

அங்கே ஒரு பூகம்பம் ஏற்படவில்லை. சிறு அதிர்ச்சிதான்; அதை அவள் பூகம்பமாக எடுத்துக் கொண்டாள் என்று தெரிகிறது.

அவன் வீடு வந்து சேர்ந்தான்; அவன் உட்காரவும் அவள் பொறுத்து இருக்கவில்லை.

"எனக்குக் குழந்தை வேண்டும்" என்றாள்.

"என்னை இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறாய்; பெற்றுக் கொள்ளலாம்; பொறு; அது நம்மால் முடியும்" என்று அமைதியாகப் பேசினான்.

"இதுவரை தேவை இல்லை என்றுதான் நினைத்தேன். அது அவசியம் என்பதை உணர்கிறேன் அந்த வீட்டுக்கார அம்மா சொன்னதற்காக வருத்தப்படவில்லை. அவர்கள் மற்றவர்கள் நினைப்பதைத்தான் சொல்லி இருக்கிறார்கள்; குழந்தை இல்லை என்பதால் நமக்கு இங்கு இடம் தந்தார்கள்; அதே காரணத்துக்காக நம்மைக் கடிந்து பேசி விட்டார்கள்; அக்கம் பக்கத்தவர் அவர்கள் நம்மை மதிக்க மாட்டேன் என்கிறார்கள். நாம் இதுவரை நமக்காக வாழ்ந்தோம்; இனிமேல் இந்த நாலுபேருக்காக வாழ வேண்டி இருக்கிறது. அதற்காக நாம் மாறத்தான் வேண்டும்" என்று எழுந்த சீற்றத்தை ஆற்றுப்படுத்தினாள்.

அடுத்து சில மணி நேரங்களில் ஐந்து குழந்தைகளைக் கொண்டுவந்து நிறுத்தினான்.

'ஒரு குழந்தை போதும்" என்றாள்.

"பெற்றால்தான் அவர்கள் பிள்ளைகள் என்பது இல்லை; வளர்த்தாலும் பிள்ளைகள்தான்."

"குழந்தை பெறாதபோது உன்னால் மற்ற குழந்தைகளிடம் அன்பு காட்ட முடியவில்லை; எல்லாக் குழந்தைகளும் நம் குழந்தைகளே என்ற மனோபாவம், வளரவில்லை; வளர்த்துக் கொள்ளவில்லை. அதற்கு இது தண்டனை" என்றான்.

அவன் சொல்வது சரியா? அந்தக் குடும்பத்துக்கு ஒரு குழந்தை தேவை என்ற முடிவு சரிதானா? அவள் கொண்ட சீற்றம் நியாயந்தானா! இந்த வினாக்களுக்கு விடை காண முயல்வோமாக.

## 5. குறை எங்கே உள்ளது?

அமெரிக்கா குடியேறிய நாடு. அங்கு வாழும் இந்தியர்கள் சங்கங்கள் அமைத்துக் கொண்டு தங்கள் கலாச்சாரங்களைக் காத்து வருகின்றனர். பழமையில் இருந்து விடுபட்டுப் புதுமையில் கால் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மண் புதிது; என்றாலும் அவர்கள் பிறந்த தேசம் அதன் பெருமையை அவர்கள் மறக்காமல் இருக்க இந்தச் சங்கங்கள் உதவுகின்றன.

ஒவ்வொரு மொழி பேசும் இந்தியர்கள் அவர்கள் பழைய மொழியை மறப்பது இல்லை; தமிழர்கள் தமிழ்ச் சங்கங்கள் வைத்து இருக்கின்றனர். தெலுங்கர்கள் மற்றைய மொழி பேசுவோர் இந்தியக் கலைச் சங்கங்கள் என்று சங்கங்கள் வைத்துக் கலாச்சாரக் குழுவுகளுக்கு அழைப்பு அனுப்புகின்றனர்.

தமிழ்ச் சங்கத்திலிருந்து திரைப்படக் குழுவுக்கு அழைப்பு ஒன்று வந்தது; அதைச் சற்று விரிவு படுத்தி அரசியல் தலைவர் ஒருவருக்கு அழைப்பு அனுப்பி இருந்தனர்.

அங்கு அவர்கள் செல்வச் செழிப்பைக் கண்டனர்; அங்கே திறமைசாலிகள் மதிக்கப் படுகின்றனர்; திறமை எங்கு இருந்தாலும் அதை ஏற்று அழைப்புத் தருகின்றனர். அறிவுத் துறையில் இன்று உலகத்தின் முன்னோடியாக

விளங்குகிறது. அங்கே வறுமைக் கோடு என்பது எங்கும் கிழித்து வைக்கப்படவில்லை. கண்ணியமான வாழ்க்கையை அங்குக் காணமுடிந்தது. தேவைகளைப் பெருக்கிக் கொள்வதும் அவற்றை நிறைவேற்றுவதும் அவர்கள் போக்காக இருந்தது.

உன்னத நிலையில் இருந்த தன்னந் தனிச் செல்வர் ஒருவரைக் காண முடிந்தது; அரசியல் தலைவர், அவர் வீட்டு விருந்தினராக அழைக்கப் பட்டார். உண்ட பிறகு உறவாடும் கட்டம் வந்தது. என்ன பேசுவது என்று அவர்க்கு எண்ணம் உதயமாகவில்லை.

"உங்களைப் போன்ற படித்த அறிவாளிகள் நம் நாட்டுக்குச் சேவை செய்யாமல் இங்குவந்து இந்த நாட்டைச் செழிக்க உதவுகிறீர்; நாட்டுப் பற்றும் தேவை; இது வருந்தத் தக்கது" என்று ஒரு சில வார்த்தைகளை உதிர்த்தார்.

"நாஙகள் இன்று இந்த உன்னத நிலைக்குவந்ததற்கு நம் நாட்டுக்கு மிகவும் கடமைப்பட்டு இருக்கிறோம்; எங்கள் இழப்பு உங்களுக்குப் பெரிது அல்ல; இன்றும் புதிய தலை முறை தோன்றி வளர்கிறது; அவர்கள் எந்த அளவிலும் அறிவு குறைந்தவர்கள் இல்லை; அவர்களை வெளியேறச் செய்யாமல் காப்பாற்றுங்கள்" என்றார்.

"உங்களை மட்டும் யார் வெளியேற்றியது? நீங்கள் அவசரப்பட்டு வந்துவிட்டீர்கள்" என்றார்.

"அதற்காக வருத்தப்படவில்லை; எங்களுக்கு நன்மை தான் செய்தார்கள்; எங்களை அங்கு ஏற்று வாய்ப்பு அளித்திருந்தால் நாங்கள் நம் நாட்டுக்குப் பணி செய்யும் வாய்ப்பைப் பெற்று இருப்போம். நாங்கள் உயர வேண்டும்

என்ற நல்லெண்ணத்தால் எங்களை அவர்கள் மறுத்து விட்டார்கள்” என்றார்.

“விளங்கும்படி கூற முடியுமா?”

“நம் நாட்டு அரசியல் சூழ்நிலை சாதிகள் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று ஆகிவிட்டது. அதை எதிர்க்க முடியாது, அது நம் நாட்டுச் சூழ்நிலை.”

“நீங்கள் பிற்பட்ட வகுப்புதானே? உங்களுக்கு உரிமை மறுக்கப்பட்டு இருக்காதே”

“இங்கு இதைப்பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது; நாட்டுப்பற்று நம் குறைகளை எடுத்துப் பேசுவதைத் தடுக்கிறது; குறைகள் இருக்கின்றன; அவற்றை நீக்கப்பாடு படவேண்டும்” என்றார் அவர்.

அந்தக்குறைகள் யாவை? அரசியல் வாதியைச் சிந்திக்க வைத்தன.

## 6. அவனுடைய தேவை

தன் மகனின் தேவை மூன்று சக்கர உருளை. அது அவனுக்குத் தேவைப்பட்டது. எதிர் வீட்டுப் பையன் இந்தத் தூண்டுதலுக்குக் காரணமாக அமைந்ததுதான் புதிய வண்டி; சிறுதேர் உருட்டியது பழைய கதை. நடைவண்டி அதன்பின் நின்று தள்ளுவான்; தொய்வு இல்லாமல் நடக்க அது உதவியது. நடப்பதை விட சைக்கிள் கற்றுக் கொள்வது அவனுக்கு அவசியம் எனப்பட்டது. அழுதான்; வாங்கிக் கொடுத்து விட்டனர்.

அவன் அதில் ஏறிச் செல்லவில்லை; தள்ளிச் சென்றான்; ஆரம்ப நிலை; வாங்கிய புதிது; வீட்டை விட்டு வெளியே செல்ல காம்பவுண்டு தடுத்தது. மீறிச் செல்ல அவனுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. யாராவது அவனைக் கவனித்துக் கொண்டே இருந்தனர். அவசரப் பட்டு அவன் வெளியுலகம் செல்லாமல் தடை போட்டு இருந்தனர்.

முற்றத்திலேயே அவன் சுற்றிச் சுற்றி வந்தான்; விட்ட இடத்திலே கதையைத் தொடர்வது போல அவன் அந்த வண்டியை அங்கங்கே விட்டுச் செல்வான்; மறுபடியும் வந்து தொடர்வான்; அதை யாராவது எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள் என்ற எண்ணமே அவனுக்குத் தோன்றியது இல்லை; பத்திரிகைகளை அவன் படிப்பது இல்லை; அதனால் அவன் வீண் அவநம்பிக்கைகளைக் கொள்ளவில்லை.

திருடன் என்பவன் கதையில்தான் வருவான்; நேரில் வருவான் என்பது அவனுக்குத் தெரியாது. இருட்டியதும் பேய் வரும் என்று தெரியும். நன்றாக இருட்டியபிறகு எல்லாரும் தூங்கிய பிறகு வீட்டுக்குக் கன்னம் வைத்துத் திருடுவார்கள் என்று கதை படித்து அதைச் சொல்லக் கேட்டு இருக்கிறான்.

பகலிலேயே அந்த சைக்கிள் களவு போய்விட்டது. அதைப்பற்றி அவர்கள் கவலைப்பட வில்லை. திருடு போய் விட்டது என்று யாரும் சொல்லவில்லை; சுரம் வரும்; போகும்; திருடும் அப்படித்தான்; யாராவது ஏதாவது எடுத்துக் கொண்டுதான் போவார்கள் அதைத் தடுக்க முடியாது.

இவர்கள் சைக்கிளை உள்ளே எடுத்து வைத்திருக்க வேண்டும். அது அவர்கள் தவறு முந்நூறு ரூபாய்; அது ஒரு பெரிய இழப்பு இல்லை.

"புதிதாக வாங்கித் தருகிறேன்" என்றார். அவனைப் பெற்றெடுத்த பெருந்தகை.

"முடியாது; அதுதான் வேண்டும்" என்று அடம் பிடித்தான். அவன் கொள்கை வீரனாகச் செயல்பட்டான்.

என்ன செய்வது? 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்' என்பது பழமொழி இவன் இரண்டும் அல்ல; ஆனால் கொண்டது விடவில்லை. அவர்களுக்கு சைக்கிள் போனது பெரிதாகப் படவில்லை; இவனை எப்படிச் சமாதானம் செய்வது என்பதுதான் பிரச்சனை.

அந்த சைக்களுக்குப் புதிதாக உரிமை கொண்டவன். இவர்கள் வீடு தேடி வந்தான்.

"இதுதானே உங்கள் சைக்கிள்?" என்றான்.

"எங்கே கிடைத்தது?"

"கிடைக்கவில்லை; விலைக்கு வாங்கினேன்?"

"இது எங்களது; பையன் விட்டுக் கொண்டிருந்தான்; யாரோ கொண்டு போய் விட்டார்கள்"

"அவன்தான் எனக்கு விற்றான்; நான் வாங்கிக் கொண்டு வந்தேன். முப்பது ரூபாய்க்கு வாங்கி இருக்கிறேன்"

"மேலே போட்டுத் தருகிறோம்; எங்களுக்குக் கொடுத்து விடு"

"அதுவே போதும்; அதற்குமேல் தேவை இல்லை" என்றான்.

அவன் பெருந்தன்மை இவர்களைக் கவர்ந்தது.

"இதை ஏன் இங்கேயே விற்கிறாய்? வேறு இடத்தில் தந்தால் அதிக விலை கிடைக்குமே"

"நான் விரும்பியவளையே மணந்து கொண்டு வாழ்கிறேன்; அது என் பிடிவாதம்; அதில் வெற்றி பெற்றிருக்கிறேன்.

குழந்தைகளும் பிடிவாதக்காரர்கள்; அவர் விரும்பிய தைப் பெறுவதில் மனநிறைவு பெறுகிறார்கள்.

அந்தப் பிஞ்சு உள்ளம் எனக்குப் புரிகிறது.

அது இந்த வீட்டில் எடுக்கப்பட்டது" என்று விற்றவன் கூறினான். அவனுக்கு முப்பதுக்குமேல் கொடுத்தால் மறுத்து விட்டான்.

"அதையேதான் நான் பின்பற்றுகிறேன்" என்றான்.

"ஏன் முப்பது? அந்தத் தொகைக்குக் காரணம்?"

"அது என் தேவை; அதுதான் எனக்கு இப்பொழுது தேவை; ஒரு நாள் சாப்பாட்டுக்கு; என் தொழிலில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றான்.

அவன் விசித்திரமான போக்கு இவர்களைக் கவர்ந்தது. கேட்டதைக் கொடுத்துவிட்டு அந்த சைக்கிளைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு ஒரு சந்தேகம். அவனே திருடி இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டனர்; என்றாலும் அவன் கண்ணியத்தை அவர்களால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை; சிலர் அவசரப்பட்டார்கள் அவனைப் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று.

அவன் அவர்கள் பிடியில் அகப்படவில்லை; பிடிக்க முடியாமல் போய்விட்டது.

மறுநாள் வந்தான். அவன் கையில் எதுவும் இல்லை.

பொருள் அவன் வசம் இல்லை அவனைத் திருடன் என்று கூறமுடியாது.

சைக்கிள் காவல் நிலையத்திற்குப் போகவேண்டும்; அதுவரை அந்தப் பையன் அழாமல் இருக்கமாட்டான்.

"எனக்கு முப்பது ரூபாய்தேவை; எனக்கு இன்று எந்தத் தொழிலும் கிடைக்கவில்லை" என்றான்.

இவன் தேவை முப்பது; அதற்காகத்தான் அதைத் திருடி இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

அவர்களுக்கு மனம் வந்து முப்பது ரூபாய் கொடுக்க விருப்பம் இல்லை; மறுத்து விட்டனர்.

அவன் அதைத் திருடினானா? அந்தச் சந்தேகம் தீரவில்லை. இதைத் தீர்ப்பது வாசகரின் சிந்தனைக்கு விடப்படுகிறது.

## 7. கண்ணாடி

மூக்கில் மாட்டுவது அதனைக் கண்ணாடி என்கின்றனர். கண்ணில் ஆடுவது என்பதால் அதற்கு அந்தப் பெயர் வந்தது என்கின்றனர் சிலர்; 'ஆடி' என்றால் முகம் பார்க்கும் கண்ணாடி என்பது பொருள். முகம் பார்க்கும் ஆடி கண்ணாடி; பார்வைக்குப் போடப்படுவதும் அந்தப் பொருளுக்கு உரிய சொல்லால் குறிப்பிடப் படுகிறது. கண் என்ற சொல்லுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பு இல்லை.

அவன் மூக்கில் மாட்டி இருந்தாலும் அது கண்ணாடி என்று வழங்கப்படுகிறது. எழுத்தாளர்கள் நாற்பதைக் கடந்தால் கண்ணாடி மாட்டிக் கொள்ளாமல் இருக்க

முடியாது. கண்ணாடி போட்டுக் கொண்டு இல்லை என்றால் அவன் எழுத்தாளியும் அல்ல; அவன் தலைவிதி; எழுதித் தொலைய வேண்டி இருக்கிறது; சிலர் தவறான தொழிலில் காலை வைத்து விட்டுப் பின் எடுக்க முடியாமல் அதிலேயே அவதிப் படுவதுதான் உலக இயல்பு.

இவன் எழுத்தில் மயங்கி ஒருத்தி இவனை மணந்து கொண்டாள். அவள் கண்டது எதுவும் இல்லை என்று இப்பொழுது வருத்தப் படுகிறாள். கவலைப்பட்டு என்ன பயன்? காலையில் காஃபி சூடாகக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு இருக்கிறாள்.

நேரம் போனது அவனுக்குத் தெரியவில்லை; அவனுக்குத் தெரியவில்லை அந்த காஃபிக்குத் தெரிந்து இருக்கிறது. அது ஆறிவிட்டது.

அதை வாயில் வைத்தான்; சுவைத்தது; ஆனால் சூடு இல்லை; அதன் மணம் எழவில்லை.

அவன் அவள் கணவன்; அதனால் அதிகாரமாகக் கேட்டான்.

"இந்தக் காஃபி யார் குடிப்பார்கள்? சில் என்று இருக்கிறதே!" என்று கத்தினான்.

"இது ஆறிவிட்டது; எதையும் சூட்டோடு குடிக்க வேண்டும்" என்றாள்.

அவன் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

"என்ன தேடுகிறீர்கள்?"

"கண்ணாடி" என்றான்.

"எழுதும் போது பேனா தெரிவதில்லை. இது தெரியுமா?" என்றாள்.

"நீ வரும்போது எந்தக் குறையும் தெரிவதில்லை; நீ இல்லாவிட்டால் எல்லாமே குறையாக இருக்கிறது" என்று தணிந்து பேசினான்.

"கண்ணாடியும் அப்படித்தான்; அது கண்ணில் இருக்கும்போது அது தெரிவதில்லை" என்றாள்.

அவள் ஒப்புமை அவனுக்கு வியப்பைத் தந்தது.

"உன்னைப் பாராட்டுகிறேன்" என்றான்.

"என்னைப் பாராட்டிப் பயன் இல்லை. இது வள்ளுவர் குறள்" என்றாள்.

"இதை நான் படித்ததே இல்லையே" என்றான்.

"திருக்குறளும் படிக்காவிட்டால் நீர் எப்படி எழுத முடியும்?" என்று கேட்டாள்.

"அதைப் படித்து விடுவதால் வேறு எதையும் எழுத முடிவதில்லை." என்றான்.

"உங்கள் கற்பனை வளத்துக்கு நீங்கள் அதைப்படித்து இருக்கவேண்டும்" என்றாள்

"கண்ணாடி அணிந்திருந்தால் அதுதெரிவதில்லை
அது இல்லை என்றால் அதுதானே தெரியும்"

என்றாள்.

அவர்களது திருக்குறள் யாது? ஆர்வம் எழுகிறது.

தலைவன் இல்லை என்றால் அவன் பிரிந்து இருந்தால் அவன் குறைகள் தலைவிக்குத் தெரிகிறது. அவன் நேரில் வந்து விட்டால்அவன் குறைகளே அவளுக்குத் தென்படுவது இல்லையாம்; கண்ணுக்கு மை எழுதும் போது மை தீட்டும் கோல் தெரிவதில்லை. அதுபோலக்

கொழுநனைக் காணும்போது அவன் தவறுகள் தெரிவ தில்லை. இது வள்ளுவர் தரும் கற்பனை.

குறள் எது? தெரியாவிடில் எண் தந்திருக்கிறோம்; குறளைப் புரட்டித் தெரிந்து கொள்ளலாம். எண்: 1285.

## 8. அம்மா அவள்

பையன் படித்துவிட்டான்; அவன் பெற்றோர்கள் அவனுக்கு மணம் முடித்துவிட்டார்கள். விரலுக்கு மேல் வீக்கத்தை அவர்கள் தேடிக் கொண்டார்கள்; பெண் கொடுத்தவர்கள் அவன் படிப்பு, உயரம், நிறம், அவன் நிழற்படம், உத்தியோகம், அவனுடைய நம்பிக்கையான எதிர்காலம் இவற்றைப் பார்த்துக் குரங்குப் பிடியாக அவனைப் பிடித்தார்கள். பலர் பையனுக்குக் கலியாணம் செய்து வைத்து அதில் கிடைக்கிற புதுவாழ்வில் குளிர்காய முடியும் என்ற நம்பிக்கை வைத்துக் கொள்வதும் உண்டு; இதனால் ஏற்படுகின்ற அதிர்அடிப் பிரச்சனைகளில் இவர்கள் ஈடுபடவிரும்பவில்லை. வரன் என்று பேசி இவர்கள் உரம் பெற விரும்பவில்லை. நல்ல மருமகள் அதுவே தரம்; அவனுக்கு அமையும் வரம் என்று மகிழ்ந்தார்கள்.

பெட்டியில் ஏறிய பிறகு நெருக்கடி ஏற்படுவதால் ஏற்படுகின்ற சச்சரவுகள் அவள் புகுந்தபோது ஏற்படவே இல்லை. காரணம் அவன் டெல்லிக்கு மாற்றலாகி விட்டான். மகள் வலது காலும் வைக்கவில்லை; இடது காலும் இங்கு வைக்கவில்லை; நேரே அவள் வீட்டுச் சீதனங்களாக அவன் வீட்டுச் சீமாட்டியாக அங்குச் சென்றாள்.

இவள் சென்ற அதிருஷ்டம்; நன்மைகள் வந்தன; அதற்கு நேர்க்காரணத்தைக் கூறுவது பழக்கம் இல்லை; இவள் சென்றதால்தான் அவனுக்கு அதிருஷ்டம் அடுக்கு மொழியில் வந்தது என்று கூறிக் கொண்டார்கள். புதிய வீடு கட்டினர். அது குடி இருக்க என்பதை விட அவர்கள் கணக்கில் வராத பணத்தைத் திணிக்கும் சாதனமாக ஆக்கினர்.

தாஜ்மகால் ஒருகாலத்தில் அதிசயமாக இருந்தது; ஏழு அதிசயங்களில் ஒன்று என்று புத்தகங்களில் எழுதி வைத்தனர். அது இன்று தோற்று விடும் என்ற அளவுக்கு இன்று கருப்புப் பணம் கட்டிடங்களை வெள்ளைப் படுத்துகிறது. அந்த அளவுக்கு இதனை உயர்த்திக் கூற முடியாது என்றாலும் அவன் கட்டிய வீடு கண்ணைக் கவர்ந்தது; எல்லாம் சலவைக் கற்கள்; வீடு கல்லைக் கொண்டு கட்டப்படவில்லை; காகித நோட்டுகளை வைத்துக் கட்டப்பட்டது என்று சொல்லும்படி அது அந்த வீட்டுக்கு உயர்வு தந்தது.

தாயின் உள்ளம் அதைக் கண்டு மகிழ்ந்திருக்க வேண்டும்; பணத்தை அவன் வீணாக்குகிறான் என்ற நினைப்புக்கு இடம் கொடுத்தாள். அவளுக்கே அவளை அறியாமல் ஒரு சிறு பொறாமை என்றால் அது தவறாகாது. தன் வீடு சென்னையில் உள்ளது; அது முப்பது வருஷங் களுக்கு முன் கட்டியது; தரையைக் கூட வழுக்க வைக்க முடியவில்லை. அவர்களைப் போலவே அந்த வீடும் மூத்து விட்டது. வயதானால் எல்லாம் பழைமை பெறுவது இயற்கை; அதைப் புதுப்பிக்கலாம்; அது அவர்களுக்குத் தேவை இல்லை.

வாய்தவறி அவள் வார்த்தைகளில் மிகை ஏற்பட்டு விட்டது; "காசை மிச்சப் படுத்தி இருக்கலாம் ஆடம்பரச்

செலவுகளைக் குறைத்து இருக்கலாம்" என்று அறிவுரை கூறினாள்.

அவனுடைய சூழ்நிலை அந்த அம்மாவுக்கு விளங்கவில்லை. அவள் நச்சரிப்புத் தாங்க முடியவில்லை.

"அம்மா! வாயை மூடிக் கொண்டிரு; விருந்தாளி போல் இருந்து விட்டுப்போ" என்று கூறினான்.

அவள் டில்லியில் சில நாள் தங்கிவிட்டு ஆக்கிரா போவது; முடிந்தால் காஷ்மீர் பிரச்சனையில் கால் வைப்பது; அங்கிருந்து ஒரு நீண்ட பயணம்; காசிக்குப் பறந்து காசு செலவு செய்வது என்று எல்லாம் திட்டங்களை வைத்திருந்தாள்.

அவளால் அந்த வீட்டில் இரண்டு நாளுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை; தான் அன்னியமாகி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டு விட்டது.

"வாங்க! நம்ம ஊருக்குப் போகலாம்" என்று தன் உடன் வாழ்ந்து வரும் தோழர் அவள் கணவரை அழைத்தாள்.

"குளிர் சாதன அறையில் சுகத்தைக் கண்ட அவர் அதைவிட்டு வர மனம் வரவில்லை; என்றாலும் அவர் மனைவி சொல்லைத் தட்டாத நல்ல பிள்ளையாக வாழ்ந்தவர்.

மறுபடியும் தம் தாயகம் வந்து சேர்ந்தனர்; பழைய வாழ்க்கை; சலனமில்லாத கட்டிடம்; பழைய டி.வி. சிவாஜி, ரஜினி, பிரபுதேவா இந்தமாதிரி சூழ்நிலைகளில் அவர்கள் நிம்மதி காப்பற்றப்பட்டது.

விடுமுறைக்கு மகன் தன் மலரும் நினைவுகளுக்கு வந்து சேர்ந்தான்; அவள் அந்த வீட்டுக்கு வரவில்லை.

அவள் செல்வக் குடியில் பிறந்தவள்; செருக்கோடு வாழ்ந்தவள்; தமிழை மறந்து இந்தியில் பேசுகிறாள்; தமிழ்ப் படங்களை அவளால் இங்கு வந்து பார்த்துக் கொண்டு இருக்கும் சூழ்நிலை அவளால் ஏற்க முடியவில்லை. அந்தச் சில நாளில் அவள் தன் தாயின் மடியில் தவழ்ந்து விளையாட விரும்பினாள். அவள் உரிமையில் அவன் தலையிடுவதை அவள் விரும்புவதில்லை; புதிய உலகம்; அதன் போக்குகளை அறிந்தவளாக விளங்கினாள் அவனுக்குப் பழைய சேற்றில் புரளத் தன் உரிமையைத் தேடினான்; அதன் சுகம் தனி.

அவன் மட்டும் வந்தான். "ஏன்டா அவளை அழைத்து வரவில்லை?" என்றாள் அவன் தாய்.

"அவளால் இங்கு இருக்க முடியாது. அவளைச் சிரமப்படுத்தத் தேவை இல்லை" என்றான்.

மறுப்பு எதுவும் சொல்லாமல் அவள் பொறுப்பு அவளைத் தடுத்தது.

அவன் சமையல் அறைக்குச் சென்றான்; வறுத்து வைத்த வறுவல்கள், பொறித்து வைத்த அப்பளங்கள், எடுத்து வைத்த சுவைகள் அவனை இழுத்தன; அவனே அவற்றை எடுத்துச் சுவைத்தான்; ஒன்று இரண்டு வாயில் போட்டான்.

"ஏன்'டா நான் போட மாட்டேனா? என்னடா அவசரம்?" என்று கூறிவிட்டாள்.

அவனுக்குச் சுறுக்கென்று தைத்தது. "என்னம்மா நான் விருந்தாளியா?" என்று கேட்டான்.

அவன் குற்ற உணர்வு அவனை வருத்தியது; அவன் தொடர்ந்து பேசவில்லை. எதையும் விவாதிக்கவில்லை.

தோழர் உள்ளே வந்தார். "என்னடா சாப்பிட வரவில்லையா?" என்று கூப்பிட்டார்.

அவன் பேசாமல் வந்து இலைமுன் உட்கார்ந்தான்.

விருந்தாளிபோல் சாப்பிட்டு விட்டு எழுந்தான்; உற்சாகம் சிறிது தணிந்தவனாகக் காணப்பட்டான்.

# 9. படிப்பு முடியட்டும்

மூத்தவள் அவளைப் பெண் பார்க்க வந்தனர்; அப்படி ஒன்றும் அதிகம் வயதாகவில்லை. இளையவளை நோக்க இவள் மூத்தவள் ஆகிவிட்டாள். அவ்வளவுதான்; வேறு ஒன்றும் இல்லை.

மூப்பு இளமை என்பன ஒருவரை வைத்து மற்றவர் களைக் குறிப்பிடும் சொற்கள் ஆகிவிட்டன. இயல்பாகவும் மூப்பு வருவது உண்டு; அப்படி இவள் மூத்தவள் அல்ல.

மாப்பிள்ளை அவனுக்கு முழுவதும் பிடித்து விட்டது. தலையில் இருந்து கால்வரை பிடித்துவிட்டது; உருவும் திருவும் அவன் அறிவுக்கு அறிமுகம் ஆயின. மறுப்பு எதுவும் சொல்வதற்கு இல்லை. சுண்டைக்காய் வெண்டைக்காய் விவகாரங்கள் பெரியவர்கள் ஏற்கனவே பேசி முடித்தனர்.

வார்த்தை தரவேண்டிய கடைசி கட்டத்துக்கு வந்து நின்றார்கள். சுயம்வர காண்டம் சுபமாக முடிந்தது. பெண் வீட்டார் காத்திருந்தனர் அவர்கள் வாய் அசைவுக்கு; துணிந்து சொல்ல முடியாமல் தணிந்து சென்றனர்.

"என்னடா சொல்கிறாய்?" என்று அவன் பெற்றோர்கள் கேட்டனர்.

"வீட்டுக்குப் போய்ப் பேசலாம்" என்றான்.

பையன் அவரப்படவில்லை; அறிவாளி என்று மதிக்கப்பட்டான்.

“தாவணி அணிந்திருந்தாளே அந்தப் பேரணி யார்?” என்று கேட்டான்.

“அவள் வீட்டில் அவளுக்குப் பின்னால் பிறந்தவள்; தங்கை” என்றனர்.

“என்ன செய்து கொண்டிருக்கிறாள்?” என்றான்.

“படித்துக் கொண்டிருக்கிறாள்” என்றனர்.

அவன் அவசரப்படவில்லை; அவன் அறிவாளி என்பதை நிதானத்தில் காட்டினான்.

“என்னடா யோசிக்கிறாய்?” என்று மறுபடியும் அவன் அப்பா கேட்கிறார்.

“படிப்பு முடியட்டுமே என்ன அவசரம்?” என்றான்.

இவன் எதற்கும் அவசரப்படுவது இல்லை; தன் படிப்பு முடியட்டும் என்று கூறியதாக அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

உண்மை எது? வாசகர்கள்தாம் முடிவு செய்ய வேண்டும்.

## 10. சமநிலை

அறுபதை எட்டிப் பிடித்தார்; என்றாலும் ஆசைகள் அவரைவிட்டு விலகவில்லை. முதல் மனைவி அவரை விட்டு விலகி விட்டாள்; காச நோய்; காசு செலவு செய்தும் பாசபந்தங்களை நீக்கி அவள் அவரிடமிருந்து விலகி விடைபெற்றாள். அவருக்கு மனைவி தேவைப்பட்டாள்.

புதிய கார் வாங்குவதில் தவறு இல்லை என்பது அவர் அபிப்பிராயம்.

அவருக்குக் காசு இருந்தது; நிலபுலன் சொத்துக்கள் அவரைத் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்தன. அவர் மனைவியை மறக்க வேண்டி இருந்தது; அவள் நினைவு அவரை வாட்டத் தொடங்கியது. "தனக்குப் பின்னால் அவரை யார் கவனிக்கப் போகிறார்கள்?" என்ற ஏக்கம் மனைவிக்கு இருந்தது. அந்தக் கடைசி ஆசையை நிறைவேற்ற மணப்பது தேவை என்று பட்டது.

இருக்கும்போது மனம் ஒருத்தியை நாடுவதுதான் தவறு; இல்லாதபோது இவர் என்ன செய்தால் என்ன? செத்தவளை அது பாதிக்கப்போவது இல்லை; தட்டிக் கேட்க ஆள் இல்லை. தலைவர்கள் சிலர் இந்தத் துறையில் அவருக்கு வழிகாட்டியாகவும் இருந்தார்கள். தவறு இல்லை என்ற அவர்கள் முடிவு அவருக்கு வழி காட்டியது.

சொத்துக்காக ஒரு சிலர் சொந்தம் கொண்டாடினார்கள். அவர்கள் இவர் மருத்துவ அறிக்கைகளை நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். சில அடிப்படை நோய்கள் அதற்கு ஆதாரமாக விளங்கின; பிரச்சனைகள் இல்லாத வாழ்வில் சுகம் கிடைப்பது இல்லை; வருகிறவர்களுக்கும் இவர், "எனக்கு வேறு ஒன்றும் இல்லை; சர்க்கரை ஒன்றுதான்; எப்பொழுதாவது இரத்தக் கொதிப்பு வரும்; கொலஸ்டால் இருக்கிறது என்று கூறுகிறார்கள் அவ்வளவு தான்" என்பார்; அவர் பிரமாதப்படுத்தாமல் வயதின் இயற்கூறுகள் என்று அமைதியாக ஏற்றுக் கொண்டார்.

அவரைக் கேட்டால் "நோய் உள்ளவர்தான் ஒருத்தியை மணக்க வேண்டும்" என்று சொல்லிவந்தார். "கால் கை பிடிக்க யார் உதவுவார்கள்? கூப்பிட்ட குரலுக்கு

ஆள் தேவை; கொள்ளி போடப்புள்ளை என்றாலும் அள்ளி எடுக்க ஓர் அருந்ததி தேவை" என்பதை அறிவித்தார்.

அவர் சொந்தத்தில் ஒரு பெண் முப்பத்தி ஐந்தைக் கடந்து விட்டாள்; அவள் கடக்கவில்லை. அது கடந்து விட்டது. அவள் அவருக்குத் தேவைப்பட்டாள்; அவள் ஒரு வேளை சோற்றுக்கே தாளம் போடுவதாக 'இசை ஞானிகள்' கூறி வந்தனர். அவளுக்குத் தங்கைகள் இருவர். இவளால் தடைபட்டுக் கிடந்தனர். அப்பா எந்த வேலையும் இல்லாமல் வேட்டி கட்டிக் கொண்டு திரிந்தார். எப்பொழுதும் சலவை வேட்டிதான் அவர் கட்டுவது.

மானமுள்ள குடும்பம்; மற்றவர்களைக் கையேந்தி நிற்க மாட்டார்கள்; மானம் அது கெடுவதற்கு முன் அணை போட வேண்டியுள்ளது. மூத்தவளைக் கட்டிக் கொடுத்து விட்டால் மற்றவர்களைக் கரை ஏற்ற முடியும்; ஒருவரைத் தள்ளி மற்றவர்களைக் காப்பாற்றலாம் என்று முடிவுக்கு வந்தனர்.

"அநியாயமாக அவளைப் பலி கொடுப்பது தவறு" என்று நியாயம் அறிந்தவர்கள் அழகாகப் பேசினார்கள். தீர்ப்புகளை வழங்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை, அபிப்பிராயங்கள் கூற யாருக்கும் உரிமை உள்ளது.

அவளைக் கேட்டார்கள்; அவள் அவரை மணப்பதற்கு முழுச் சம்மதம் என்று தெரிவித்தாள்.

'யோசித்துத்தான் சொல்கிறாயா?'

அந்தச் சிவகாமி சிதம்பரனாரை மணக்க இசைவு தந்தாள்.

"மணம் என்பது சிறந்த சேவையாகக் கொள்கிறேன்; அவருடைய மனைவி இறந்துவிட்டாள்; குழந்தைகள்

யாரும் இல்லை; இருந்தாலும் அவர்கள் கவனிக்கப் போவது இல்லை. அவர் என்னிடம் எதிர்பார்ப்பதை என்னால் தர முடியும். அதனால் அவருக்கும் நன்மை; இந்தக் குடும்பமும் உயரும்" என்றாள்.

"அவள் இளமை பாழாகிறது" என்று வாலிபர்கள் சிலர் வருத்தப்பட்டனர்.

அவள் அந்த வீட்டில் அடியெடுத்து வைத்தாள்; மண அதிர்ச்சி அவரை அசைத்துவிட்டது; அடங்கிக் கிடந்த நோய்கள் ஆவேசம் கொண்டு எழுந்தன. மருத்துவ இல்லத்தில் அவர் சேர்க்கப்பட்டு இவள் ஆதரவோடு தங்கி இருந்தார். அக்கு தொக்கு இல்லாமல் அவர் அவதிப்பட வில்லை. சிகிச்சைகள் மாறிமாறி அளிக்கப்பட்டன; அவற்றால் பலன் இல்லை என்று வழக்கம் போல் கூறி விட்டனர்.

அந்த வீடு ஒரு மாற்றத்தைக் கண்டது; அவள் மறுபடியும் முதிர் கன்னி ஆனாள்; அவள் இளமை பாழாகியது; ஆனால் அதைப்பற்றி யாரும் விமரிசனம் செய்யவில்லை. அவள் மனம் எந்த மாற்றமும் பெறவில்லை; 'சமநிலை' என்ற நிலை அவளிடம் காணப்பட்டது. அவள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருந்தாள் என்று சொல்கிறார்கள்.

## 11. சொன்னால் சொன்னதுதான்

அவள் அந்த வீட்டுக்கு ஒரே ஆள். வாக்குச் சாவடியும் அவளை ஒன்றாகவே வைத்துச் சீட்டு வழங்கியது; ஏனைய பெயர்கள் அழிக்கப்பட்டன; அவர்கள் எல்லாம் அங்கு இருந்தவர்கள்தாம்; திரைகடல் ஓடித்

திரவியம் தேட அவர்கள் திசைகள் தோறும் பரவிச் சென்று விட்டனர். ரேஷன் கார்டிலும் வேறு யாரையும் அவள் உடன் சேர்த்து எழுதவில்லை. அஞ்சல் தொடர்புகள் அவ்வப்பொழுது விட்டு விட்டு ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

அவள் தனிமை அழித்துப் பொருள் ஈட்டும் அன்றாடம் திருடர்கள் கண்ணைக் கவர்ந்தது. மூடிய கதவு ஊடல் கொண்ட பழைய இலக்கியக் காதலிகள் வீட்டுக் கதவு போல் மூடிக்கிடந்தது; அவர்கள்தாம் கதவை மூடி வைப்பார்கள் என்று படித்திருக்கிறோம்; போருக்குச் சென்றுவந்த வீரன் திரும்பிவந்தால் அவனை வரவேற்க அழகிய கதவுகளைத் திறந்தார்கள் என்று பரணி நூல்கள் பாடுகின்றன. இன்று கள்ளத் தொழிலாளர்கள் கதவு தட்டுகிறார்கள். அவசரப்பட்டுத் திறந்துவிட்டால் ஆபத்துகள் ஆயத்தம் ஆகி விடுகின்றன.

கோயில் கதவு திறக்கப்பட்டது; அந்தத் தெய்வங்கள் முரண் பிடிப்பது இல்லை; அதனால் அவற்றைச் சிதைப்பது இல்லை; நகைகளை மட்டும் கழற்றிக் கொண்டு அபிஷேகம் செய்ய அவிழ்த்துவிட்டுச் செல்கின்றனர் தெய்வங்கள் சிலைகள்; அவர்களுக்கு எந்த ஊறும் நிகழ்வது இல்லை. அவர்களுக்கு தெய்வமும் பூசாரியும் ஒன்றுதான்; நட்பு பகை தெய்வங்கள் பாராட்டுவது இல்லை.

இருப்பதைச் சுருட்டிக் கொண்டார்கள்; பறிப்பதைப் பறித்துக் கொண்டார்கள்; அறுப்பதை அறுத்துக் கொண்டார்கள்; அசையக் கூடாது என்று நிழற்படம் எடுப்பவர்கள் போல் ஆணையிட்டார்கள்.

“சிரிக்கலாமா?” என்று கேட்டாள்.

“அசையக் கூடாது” என்று அச்சுறுத்தினார்கள்.

"கத்தப் போகிறேன்" என்றாள்.

"சத்தம் போடக் கூடாது" என்று மிரட்டினார்கள்.

"சத்தம் போடாமல் எப்படிக் கத்த முடியும்? அந்த வித்தை யாருக்குமே தெரியாது" என்றாள்.

"கீச் மூச்சு என்று பேசக் கூடாது. நாங்கள் இந்த இடத்தைவிட்டுப் போகும் வரை யாரையும் அழைக்கக் கூடாது."

"போனில் பேசுகிறேன்" என்றாள்.

"அந்தச் சிரமம் உனக்கு வேண்டியது இல்லை; அது ஏற்கனவே கெட்டுதான் இருக்கிறது; அந்த உதவியை அவர்களே செய்து வைத்திருக்கிறார்கள்" என்றார்கள்.

"நாய் உங்களை விடாது" என்றாள்.

"அது விசுவாசம் உள்ளது; நிறைய பிஸ்கத்துகள் போட்டு இருக்கிறோம்" என்றார்கள்.

"கத்தாமல் இருக்க முடியாது; கட்டு அவிழ்த்து விடுங்கள்" என்றாள்.

"உயிர்மேல் ஆசை இருந்தால் நீ கத்தக் கூடாது" என்றார்கள்.

"உயிர்மேல் ஆசை துளியளவும் கிடையாது. பற்றுதலை எல்லாம் நீங்கள் நீக்கி விட்டீர்கள்; இனி பட்டினி கிடந்து சாவதுதான் முடியும்; அதைவிட நீங்கள் கொலை செய்தால் உங்களுக்குப் புண்ணியம் சேரும்" என்றாள்.

அவள் வேண்டுகோளை அவர்கள் நிராகரித்து விட்டனர்.

"கொலை செய்வதற்கு எங்களுக்கு யாராவது பணம் கொடுக்க வேண்டும்; அப்பொழுதுதான் செய்வோம். உன்னைக் கொல்வதால் எங்களுக்கு எந்த லாபமும் இல்லை" என்றார்கள்.

"நீங்கள் உயிர் பிழைக்க இந்த இடத்தை விட்டுப் போக என்னைக் கொன்றுதான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் கத்துவேன்" என்றாள்.

"தயவு செய்து கத்த வேண்டாம்; பாதிப் பொருளை விட்டுச் செல்கிறோம்; பாதி உனக்கு; பாதி எங்களுக்கு" என்றார்கள்.

ஒப்பந்தத்திற்கு அவள் சம்மதம் தெரிவித்தாள்.

உயிர்மேல் அவளுக்கு ஆசை வந்தது; கத்துவதை நிறுத்தினாள் அவர்களும் சத்தம் செய்யாமல் அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

மறுநாள் காவல் நிலையம் பத்திரிகை நிருபர்கள் அவளைப் பேட்டி கண்டனர்.

"எப்படி உயிர் தப்பினாய்?" என்று கேட்டனர்.

"கத்தாமல் இருந்தால் பாதி தந்து விடுவதாகச் சொன்னார்கள்; இது சின்ன விஷயம்; ஒப்புக் கொண்டேன்; அவர்கள் என்னை விட்டு விட்டார்கள்" என்றாள்.

'அவர்களை அடையாளம் காட்ட முடியுமா?'

"காட்டிக் கொடுக்கும் பழக்கம் எனக்கு இல்லை; சொன்னால் சொன்னதுதான்" என்றாள்.

# 12. அவள் சாகவில்லை

அந்த இளம்பெண்ணை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது; ஆனால் அவள் யாரையும் கவனிப்பதாக இல்லை; கவனித்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் அவளுக்கு வாங்கித் தரப்பட்ட புதிய மகளிர் சைக்கிள். அதற்குக் குறுக்குத் தண்டு இருப்பது இல்லை. சைக்கிளில் கூட ஆண் பெண் என்ற பேதம் காட்டப் படுகிறது: அது ஏன் அவர்களுக்கு அப்படி? சேலை சிக்கிக் கொள்கிறது என்பதனால் என்று சொல்கிறார்கள். புதிய தலைமுறைக்கு இந்த வேறுபாடு தேவை இருக்காது என்று நினைக்க வேண்டி இருக்கிறது.

அவள் சுருசுருப்பு அவள் சைக்கிள் விடும் பரபரப்பில் காணப்பட்டது. அவள் கண்முன் எதுவும் தெரிவதில்லை என்று சொல்லி வந்தார்கள். அது அன்றைய விபத்தில் தெரியவந்தது.

அந்த அதிர்ச்சி மிக்க செய்தி அவள் சுற்றுப்புறத்தை அதிரவைத்தது; கதறி அழுதனர்; ஆனால் அது தொடரவில்லை. காரணம்; அது தையல் கடைக்குச் சென்றது; அவர்கள் தைத்து மூடி எடுத்து வந்து சேர்த்தனர். முதலில் அறுவை நடத்தி அதன் காரணத்தைப் பதிவு செய்யும் மருத்துவப் பகுதியைத்தான் குறிப்பிட வேண்டியுள்ளது. நிச்சயம் அவர்களுக்குத் தெரியும் சாட்சிகள் உள்ளனர்; மோதிய வண்டி அதனைப் போலீசார் கைப்பற்றி உள்ளனர்; அவனே ஒப்புக் கொள்கிறான், அந்தப் பெண் வந்து அதில் மோதிக் கொண்டாள் என்று. இதற்கு மேலும் அறுவை நடக்கிறது. அதைப்பற்றி நாம் கூறுவதற்கு இல்லை; அது தைத்து முடிந்து வரும் வரை அவர்கள் அழுகையை நிறுத்தி வைத்தனர்.

அவள் படித்த பள்ளியில் இருந்து அதற்கு உரிய பேர் ஊர்தியில் ஒரே மாதிரி உடையுடுத்திய ஒத்த வயதினர் மவுன அஞ்சலி செலுத்தினர்; அவர்களோடு இயங்கித் திரிந்தவள்; இன்று உறங்கிக் கிடக்கிறாள்; அவள் இறந்து விட்டாள் என்று கூறமாட்டார்கள்; அவளைப் பார்த்துதான் 'உறங்குவது போலும் சாக்காடு' என்று வள்ளுவர் எழுதியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லத் தோன்றுகிறது; ஒரே நாள்; அதனால்தான் அவள் தூங்குவது போல இருந்தது. அவள் இனி எழுந்திருக்க மாட்டாள் என்று நினைக்கும்போதுதான் அவள் இறந்து விட்டாள் என்று சொல்லத் தோன்றுகிறது. அவள் இறந்து விட்டாள்.

அதன் பிறகு "அவள் அப்பா யார்? அம்மா யார்?" என்று தெரிந்தது. அந்த ஆராய்ச்சி எழுந்தது; பதினைந்து ஆண்டுகள் வளர்த்து ஆளாக்கிய அருமைச் செல்வி அரைமணி நேரத்தில் கண்மூடினாள் என்றால் அந்த அதிர்ச்சி பெரிது; ஆழமானது; அழுதால் தீர்வது அன்று.

ஆண்டாண்டு அழுது புரண்டது அந்தக் காலம், அதிர்ச்சிகள் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகும்போது எதுவும் மெல்ல ஆறத்தான் செய்கிறது. அவர்கள் மோன அழுகை அவர்களோடு நின்றது.

அவர்கள் அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டார்கள்; நாள் செல்லச் செல்ல அந்த மாதிரி ஒரு பெண் இருந்தாள் என்று கூட யாரும் பேசிப் பார்க்க முடியவில்லை. மகளிர் வண்டிகள் ஏதாவது யாராவது ஊர்ந்து சென்றால் அவர்கள் அவளை நினைவுப்படுத்தினர்.

ஆண்டுகள் மூன்று கடந்தன; அவள் மாண்ட நினைவும் மறந்துவிட்டது.

அன்று எதிர்பாராமல் அவள் தம்பியைக் காண நேர்ந்தது. அதே நிறம்; அதே சாயல்; அதே மாதிரி தோற்றம்; அவள் மிகவும் சுருசுருப்பாக இருந்தாள்; இவன் மந்தமாக இருப்பான். இதுதான் வித்தியாசம்.

"எங்கே போகிறாய்?" என்று பேச்சுக் கொடுக்கப் பட்டது.

"டியூஷனுக்கு" என்றான்.

மற்றும் சில ஏபி சிடி வீஷயங்களில் பேச்சுக் கொடுத்துப் பேசப்பட்டது.

அவன் தாய் மொழி சிந்தி; அவன் பயில்வது இந்தி; பிறரோடு பேசுவது தமிழ்; அதில் சிதைந்த சிந்திச் சொற்கள் அவள் சிவந்த வாயை நினைப்பூட்டின. அவன் சொற்களில் இன்றைக்கும் அவள் எதிர்ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறாள்.

## 13. அமரத்துவம்

தொடர்ந்து தொலைக்காட்சியில் நடிக்க விரும்பினார்; நடுவில் ஆள் இல்லாமல் இருந்தார். இடைவெளிக்குப் பிறகு அவர் நடிப்பை நடைபாதையாகக் கொண்டார். பழைய பட உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"நடிக்க வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டனர்.

"காதல் காட்சிகளில் நடித்துவிட்ட நீர் இப்பொழுது அழுகைக் காட்சிகளில் அவலப்படுவது சரி என்று படவில்லை" என்றனர்.

அவர்க்கு அது விளங்கவில்லை.

"அப்பா வேஷங்களில் நடிக்கிறீர்; அதில் அழுகையைத் தானே காட்ட வேண்டி இருக்கிறது" என்று அறிவுறுத்தினர். "முதுமைப் பாத்திரமே அழுகையின் க்ஷேத்திரம்" என்பது அவர்கள் கருத்தாக இருந்தது.

"கதைகள் அப்படி, நாம் என்ன செய்யமுடியும்?" என்றார் நடிகர்.

"காதல் மன்னனாக நடித்த நீர் இன்று இந்த முதுமைக் காட்சிகளில் வருவது உங்கள் இமேஜைக் கெடுக்கிறது" என்றார்கள்.

"என்னுடைய முழு இமேஜே இப்பொழுதுதான் உணர்த்த முடிகிறது; வாழ்க்கை என்பது இளமையும் அழுகையும் கொண்டது; இந்த முழுமையைக் காட்டுகிறேன்" என்றார்.

"பழைய படங்களின் மதிப்புக் குறைகிறதே" என்றனர்.

"பழமை மறையத்தான் செய்யும்; காதல் காட்சிக்குப் புதியவர்கள் தோன்றுகிறார்கள்; அவர்கள் நிச்சயம் என்னை வெல்வார்கள்; அவர்களோடு போட்டி போட முடியும் என்று நான் நினைக்கவில்லை; காதலர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்; அவர்கள் என்னோடு இந்த முதுமைக் காட்சிகளில் போட்டி போட முடியாது; அதற்கு நாங்கள்தாம் தகுதி உடையவர்கள்" என்றார்.

"இருந்தாலும் உங்களைப் பார்த்தால் உங்கள்மீது இரக்க உணர்வுதான் தோன்றும். 'தோன்றில் புகழுடன் தோன்றுக' என்ற குறட்பா அதை எண்ணிப்பாருங்கள். இகழும்படி உங்கள் தோற்றம் அமையக் கூடாது" என்று குறளுக்குப் புதுவிளக்கம் தந்தனர்.

"கதைகள் மாறலாம்; தோற்றங்கள் மாறலாம்; நடிப்பு மாறாது; அது அமரத்துவம் வாய்ந்தது. அன்று என்னைக் 'காதல் மன்னன்' என்று கூறியது என்னைப் பற்றி அல்ல; காதல் காட்சிகளில் நான் சிறப்பாக நடித்து இருக்கிறேன் என்றுதான் பாராட்டினார்கள்; அந்தப் பாராட்டு நடிப்புக்கே அன்றி என் வடிவுக்கு அன்று; இன்று என்னை ஒரு முதியவர் அறிஞர் என்று கூறலாம்; அதுவும் என் நடிப்புக்குத்தான், நடிப்பு அமரத்துவம் வாய்ந்தது. முதுமையில் நடிக்க வெட்கப்படத் தேவை இல்லை. அன்றும் நான் நடிகன்; இன்றும் நடிகன்" என்றார்.

# 14. தலை குனிவு

அவர் ஒரு தமிழ்ப் பேராசிரியர். தமிழ் ஆசிரியர் என்றால் மேடைப்பேச்சு அவர் உடன்பிறப்பு ஆகிறது; அவரிடம் பொருட் செல்வம் இல்லை. ஆனால் 'சொல்லின் செல்வன்' என்று பாராட்டப் பெற்றார். அதை வைத்துக் கொண்டு 'பட்ஜட்' அவரால் தயாரிக்க முடியவில்லை என்பது அவர் மனைவி அவர் மீது காட்டும் குற்றச் சாட்டு.

அவர் என்ன சம்பாதித்தார்? என்ன சாதித்தார் என்று எதிர்க் கட்சியில் இருந்து தோர்வுக் கணைகள் எழும். அவர் தம் சாதனைகளை அடுக்கிச் சொல்வது எதிர்க்கட்சிக்கு வேதனையாகவே இருக்கும். "போதும் உங்கள் பெருமை" என்று அடக்கு முறையைப் பலமுறை அவர் மனைவி கையாள்வது வழக்கம்.

இன்று அவர் ஓய்வு பெற்று இருக்கிறார்; அதனால் அவருக்குச் சாய்வு நாற்காலி ஆதரவு தந்தது.

யாராவது பழைய மாணவர் இவரைச் சந்திப்பார்கள்; அடங்கிக் கிடக்கும் பழம் பெருமை துள்ளி எழுந்து விளையாடும்; அதைத் தூண்டிவிட வருபவர் சுடர் விளக்காகத் திகழ்வர்;

வந்தவர் கேட்கும் முதல் கேள்வி "என்னைத் தெரிகிறதா?" என்பது.

"சுருள்முடி அருள் வரதன்" என்பதை அவர் அறிந்து கொண்டார். அவனுக்கு இப்பொழுது வழுக்கைத் தலையாகி விட்டது.

"சார்! அன்று இலக்கணத்தில் பூஜ்யம் வாங்குவானே இன்று அவன் இராஜ்யம் ஆளுகிறான்" என்றான்.

மந்திரி மதனகோபாலை அவன் குறிப்பிட்டான். "பெருமைப்படுகிறேன்" என்றார்.

"கோணங்கி கோவிந்தசாமி தெரியுமா? அவன் இன்று தமிழ்ப்பட ரேலங்கியாகி விட்டான்" என்றான்.

"அவன் அன்றே அதுக்குத்தான் லாயக்கு என்று தீர்மானித்தேன்; குரங்குப் பையல்" என்று பாராட்டினார்.

"கட்-அவுட் கந்தசாமி தெரியுமா? அடிக்கடி 'கிளாஸ்கட்' செய்வானே இன்று அவன் 'நாக்அவுட்' மல்வீரனாகத் திகழ்கிறான்" என்றான்.

"அவனுக்கு அதுதான் 'அவுட்லெட்'; முன்னுக்கு வந்திருக்கிறான்" என்றார்.

"கிறுக்கெழுத்து குமரவேல் தெரியுமா அவன் இன்று ஓவியப் புகழ் சித்திரக்காரன் ஆகிவிட்டான்" என்றான்.

"அந்தக் கிறுக்கன் அதற்குத்தான் லாயக்கு என்று அன்றே முடிவு செய்தேன்" என்றார்.

"எதுகைமோனை வைத்துக் கவிதை என்று எழுதிப் பரிசு பெறுவானே அவன் இன்று கவி அரசு ஆகிவிட்டான்" என்றான்.

"அவார்டுகள் வாங்கி இருக்கிறான் என்று பத்திரிகையில் படித்தேன்; மிக்க மகிழ்ச்சி" என்றார்.

"அன்று சிநேகிதர்களுக்கு ஓசியில் டிஃபன் காப்பி வாங்கித் தருவானே இன்று அவன் கொடை வள்ளல் வடமலை என்று புகழப்படுகிறான்" என்றான்.

"நீங்கள் அன்று வகுப்பில் பாடம் நடத்தியது இன்றும் நினைவுக்கு வருகிறது. சிலவரிகள் மறக்கவே முடியவில்லை" என்றான்.

பெருமையில் தலை குனிந்தார்; "வீணாகப் புகழ்கிறாய்" என்று நாகரிகமாகப் பேசினார்.

"அந்த வரிகளைச் சொல்கிறேன் கேளுங்கள்" என்றான். "கச்சணிந்த அவள் தோற்றம் கண்டு துஷ்யந்தன் இச்சை கொண்டான்" என்று ஒப்புவித்தான்.

இப்பொழுதும் அவர் தலை குனிந்தார். ஏன் என்று தெரியவில்லை.

## 15. பொய் அழகானது

அவன் படித்தது பொறியியல்; அவனுக்கு இப்பொழுது படியாதது மணவியல்; அவனுக்காகக் காத்திருந்த கரங்கள் சாத்திரச் சுவடிகளைத் தேடின; கோத்திரங்கள் ஆராயப்பட்டன:

தரகர்கள் அவன் வீட்டில் அணிவகுத்து நின்றனர். படங்களைக் காட்டி நங்கையர்க்கு அங்கு இடங்களைத்

தேடினர். பட்டங்களைக் கூற அவன் அவற்றிற்கு இட்டப்படவில்லை என்று தெரிந்தது.

"படித்த பெண்ணே வேண்டாம்" என்பது அவன் வடித்த கட்டளையாக இருந்தது. அது படிவதாக இல்லை.

"காலம் கெட்டு விட்டது; படிக்காத பெண்ணே கிடைக்காது" என்று அவர்கள் கைவிரித்தனர்.

அதிகம் படிக்காதவளாக இருந்தால் போதும்; எந்த அருந்ததியையும் தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தான்.

தரகனின் மிஷன் கமிஷன்; படிக்காதவளைப் படித்தவளாகக் காட்ட இயலாது; படித்தவளை அவள் எடையைக் குறைத்துக் காட்ட முடியும் என்று எண்ணி ஒருத்தியைக் காட்டி முடித்தான்.

மணமேடை ஏறிய அவள் சடங்குகளைக் கடந்து அவன் மனைவி ஆயினாள்.

தனித்து அவர்கள் சந்தித்த இரவு முதல் இரவு; இனித்த பேச்சுகளைப் பேசி உள்ளம் கலக்க அவர்கள் உரையாடினர்.

அதற்கு முன் அவள் அதற்கு ஓர் அணை போட்டாள்; அது தலை அணை அல்ல; கல்லணை அல்ல; சொல்லணை.

"நான் ஓர் உண்மை சொல்லப் போகிறேன்; என்னை ஏற்றுக்கொள்ள முடியுமா" என்று வினவினாள்.

அவன் அதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டான்.

"காதலன் ஒருவன் பெயரை அவள் சொல்லப் போகிறாள்; அந்தப் பாதகனை மன்னிப்பது" என்று அந்தச் சாதனைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான்.

"நான் படித்தவள்; பட்டம் வாங்கி இருக்கிறேன்; இந்த மெய்யை அவன் தரகன் உங்களுக்குக் கூறவில்லை" என்றாள்.

"பொய் அழகானது; மெய்யை மறைத்தது அதைவிட அழகானது" என்பதை உணர்ந்தான்.

"படிப்புத் தடையாக இல்லை; துடிப்பு அவன் பிடிவாதத்தை வென்று விட்டது.

கவிதைக்கு மட்டும் அல்ல;

கலியாணத்துக்கும் அது அழகு; எது? பொய் என்பதே; இருவரும் ஒப்புக் கொண்டனர்.

## 16. தத்துவ விசாரணை

"தாமரை மேல் நீர்த்துளி" போல வாழ வேண்டும்" பொறுப்புள்ள பதவியில் இருந்தவர் அறிவிப்புத் தந்தார்; அவர் அந்தக் கூற்றில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

அவர் நம் கண்ணோட்டத்துக்கு ஆளானார்; அவர் புறக் கடமைகளைச் செம்மையாக முடித்தார், அவர் அகவாழ்வு எப்படி? இவர் சொற்படி அவர்மனைவி கீழ்ப் படிந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நேரில் பேசுவது இல்லை; தொலைபேசி அவர்களுக்குத் தேவைப் பட்டது. மற்றவர்களிடம் சொல்லித் தம் கருத்துகளைப் பரிமாறிக்

கொண்டனர். அவர் வாழ்க்கை அங்குத் தாமரை இலைமேல் நீர்த்துளியாகத்தான் இருந்தது.

மடம் ஒன்று; அது ஒரு மகனைச் சடங்கின்படி சுவீகாரம் செய்து கொண்டது. பூமி சாத்திரம் அவர் படிக்க வில்லை; சாமி சாத்திரங்களைக் கரைத்துக் குடித்து அதையே சில சமயம் ஏன் பல சமயம் பிரச்சாரம் செய்வார். 'பற்று அறுதல்' என்பதைப் பற்றிப் பேசிப் பிறரை அறுப்பதே அவர் தொழிலாக இருந்தது. உள்ளுக்குள் ஓர் ஆசை; அர்த்தநாரீசுவரர் ஆகவேண்டும் என்ற ஆவல்: அவர் வாழ்வில் அது கைகூடவில்லை; விபூதியும் குங்குமமும் அவரைத் தடுத்து நிறுத்தின; வாழ்க்கையின் மறுபக்கம் அவர் புரட்டிப் பார்த்ததே இல்லை. அவர் வாழ்வு நிறைவு பெறவில்லை என்ற ஏக்கம் அவர் சிரிக்காத சிந்தனைகளில் வெளிப்பட்டது

உழைத்து அதற்குச் சரியான ஊதியம் கிடைக்காததால் அலுத்துக் குடியைத் தேடும் குடிமகன் அவன் குடிசையில் வாழ்பவன்; அவன் பக்திப் பரவசம் அடைவது அந்த மதுபானத்தில்தான். அவன் பிள்ளைகள் எதிர்காலத்துக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்வதற்குச் சிறுதிருடு என்பதைக் கைத் தொழிலாகக் கொள்கிறார்கள். அவர்கள் எந்த நன்மை மீதும் பற்றும் பாசமும் கொண்டவர்களாக விளங்கவில்லை. நீதிகள் அவர்களுக்குச் சுமைகளாகப்பட்டன. 'தாய் மீது பாசம்' என்பது அவர்கள் காட்டவில்லை. அவளுக்குக் கொள்ளி போடும்போது மட்டும் அதை வெளிப்படுத்தினர் பிற்காலத்தில்.

செல்வம் கொழித்தது; பன்னீர் செல்வம் அவர் பெயர்; அவர் குளிப்பது தண்ணீர்தான். பனிநீரால் அவர் குளிக்க முடியும் என்பது அந்தப் பெயர் அறிவித்தது; அந்த வீட்டில் ஒவ்வொருவரின் பிறந்த நாளும் டைரிகளில்

பதிவாயின. பாசத்துக்குப் பிள்ளைகள் போதாது என்பதால் நாய்களும் அங்குக் கட்டி வைக்கப்பட்டன. வாழ்வு தாமரை இலைமேல் உள்ள நீர் அல்ல; நீர்மேல் தாமரை; நீரின் அளவு அது உயர்ந்து இருந்தது; பற்று அற்ற நிலை என்பது அங்குச் சற்றும் தலை காட்ட வில்லை.

"இந்தத் தத்துவம் வறுமை நாட்டின் பெருமை; அதனின்று தப்பித்துக் கொள்ள கண்ட மருந்து; தப்பித்துக் கொள்ளும் தத்துவம்" என்று அறிஞர் சிலர் கூறுகின்றனர். "வேர்கள் தேவை; அவை இல்லை என்றால் மரம் தழைக்காது; பாசபந்தங்கள் அவசியம்" என்கின்றனர். எது உண்மை? எது நன்மை? சிந்தித்துப் பதில் தரத்தக்கது

# 17. எழுத்து ஒரு விமரிசனம்

கவியரசு ஒருவரின் கவிதைகள் அதைப்பற்றிப் பட்டி மன்றம் விவாதம் நடத்தியது. பழைய திரைப்படப் பாடல்கள் கருத்துகள் நிரம்பியவை; இன்று அவை வெறும் ஓசைகள் என்று பேசப்பட்டன.

"இன்றைய திரைப்படங்களில் கருத்தே இல்லை; கருத்து ஒரு சுமை; அதை விடுவதால்தான் படங்களுக்கு வெற்றி" என்று ஒரு சிலர் எடுத்துக் காட்டினர்.

"திரைப்படம் என்பது ஓசைகளும் அசைவுகளுமே; அதற்குமேல் சென்றால் அவை தோல்வி பெறுகின்றன" என்பது ஒரு சிலர் தெரிவித்த வாதமாகவும் இருந்தது.

ஒரு எழுத்தாளர் அந்தப் பட்டிமன்றப் பேச்சில் கலந்து கொண்டார்; தான் இரண்டாயிரம் கதைகள் எழுதி இருப்பதாகவும், அப்படி எழுதியும் வாழ்க்கையில்

முன்னுக்கு வரவில்லை. சொந்தமாகத் தனக்கு ஒரு வீடும் இல்லை; ஏன்?" என்று ஒரு வினாவை எழுப்பினார்.

"மக்கள் நிறையப் பார்க்க, படிக்க விரும்புகிறார்கள்; கருத்துச் சுமையாக இருப்பதை அவர்கள் விரும்புவது இல்லை" என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது.

"எது நல்லது; எது வேண்டும் என்பது விவாதம்; திரைப்பட ரசிகர்கள் கருத்துகளைச் சுமையாகக் கருதுகிறார்கள் என்பது தெரிவிக்கப்பட்டது. இதனை எழுத்துக்கும் ஒரு விமரிசனமாகக் கொள்ள முடியுமா? சிந்திக்கத் தக்கது.

## 18. ரசனை

டெல்லி துரிதவண்டி; அதில் இடையில் ஏறியவர் இருவர். எத்தனையோ பேர் ஏறுகிறார்கள் இறங்குகிறார்கள். அவர்களில் இவர்கள் இருவர். இவர்கள் எதிரும் புதிருமாக உட்காருகின்றனர். அவர்கள் பொழுது போக்கை இழுத்துப் பிடித்தவர்கள் சிலர். அவர்கள் இங்கே இடம் பிடிக்கிறார்கள். குழந்தைகள் சூழ ஏறுகின்ற குடும்பம்; வழியெல்லாம் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டு படிப்பதைப் போல இந்தக் குழந்தைகள் ஏதாவது மாறி மாறித் தின்று கொண்டே இருந்தன. தின்பது தவிர அந்தக் குழந்தைகளும் அவர்களின் போஷகர்களான பெரியவர் களும் வேறு ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு அது பொழுது போக்காக இருந்தது; சுவை அவர்களுக்கு; சுமை அந்த வண்டிப் பேரறைக்கு; குப்பைகளைப் பெருக்கியது.

மத்தியதர வயது எட்டிப் பிடிக்காத முப்பதுகள் சிலர் அச்சுச் சிறுமையையும்* பக்கப் பெருமையையும் கொண்ட ஆங்கிலக் கதைகளைத் துப்பறிந்து கொண்டிருந்தனர். கொலை அதைப் பற்றிய துப்பு; அதற்குப் பக்கம் ஐந்நூறு. இது அவர்களை அழுத்தி வைத்தது. அக்கம் பக்கம் அசையாமல் படித்தனர். பத்திரிகைகள் கைமாறின.

சுய மரியாதைக் கட்சிக்காரர்கள் சிலர் பிச்சை எடுப்பது இழிவு என்பதைக் காட்டும் வகையில் அங்குச் சிதறிக் கிடந்த குப்பைகளை அகற்றித் தரையைச் சீர் செய்தனர். அவர்கள் ஊனமுற்ற மானஸ்தர்கள் என்பது அவர்கள் ஊர்ந்து சென்ற இயக்கங்கள் காட்டின. அவர்கள் உழைத்துச் சம்பாதித்தார்கள்.

இந்தப் பல்சுவைப்பகுதிகளில் மனம் தராமல் இருவரில் ஒருவர் பார்வை மட்டும் காதல் சுவையில் ஈடு பட்டது; அதாவது காதல் காட்சியில் ஈடுபட்டது; அதாவது காதல் இருவர் கருத்து ஒருமித்துக் கருத்துகள் பேசிக் கொண்டிருந்த உரையாடலில் ஈடுபட்டார். அந்த இளைஞர்கள் புதிய தம்பதிகள் எனத் தெரிந்தது. பிறரோடு ஆங்கிலத்தில் தொடர்பு கொண்டனர். அவர்கள் இருவரும் தம் தாய்மொழியில் உறவு கொண்டனர். இவர் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு இருந்தார். சுட்டுப் போட்டாலும் அதில் எட்டுச் சொற்களுக்குக் கூட பொருள் தெரியாது. பின் அவர் என்னதான் ரசிக்கிறார்? மற்றவருக்கு வியப்பாக இருந்தது.

ஏறக்குறைய மூன்று மணி நேரம் இந்தத் திரைப்படம் ஓடியது; ஓடும் ரயில் ஓய்வு கொள்ள செண்ட்ரல் நிலையம் வந்து சேர்ந்தது. உடனே எங்கும் பரபரப்பு; திரைக் கொட்டகை விட்டு வெளியேறும் கூட்டத்தினர் ஆயினர். ஏறும்போது காட்டும் முரட்டுத்தனம்; நெரிசல்

இடிபாடுகள் இறங்கும்போது காணப்படவில்லை. மற்றவர்களுக்கு வழிவிட்டு அவரவர் இறங்கிச் சென்றனர். நாகரிகச் செயலாகப்பட்டது.

பார்வையாளரை மற்றவர் விசாரித்தார். "நீலத்திரைக் கடலில் நீ என்ன கண்டிட்டாய்?" என்றார். "ஓலமிட்ட ரயில் அசைவில் ஒரே முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று தெரிவித்தார்.

"கம்பர் ஒரு கருத்துக் கூறுகிறார் அதைப்பற்றி நீ என்ன கூறுகிறாய்?" என்று பேச்சைத் திசை திருப்பினார்.

"மஞ்சரார்க்கும், மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றுதான் என்கிறார் கம்பர். அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று தொடர்ந்தார்.

"மஞ்சர் என்றால் என்ன? அதற்கு விடை கூறு முதலில்" என்றார் மற்றவர்.

"அதாவது மைந்தர்க்கும், மங்கையர்க்கும் மனம் என்பது ஒன்றுதான் என்று கூறுகிறார். அதைப்பற்றி நீ என்ன கருதுகிறாய்?"

"உண்மைதான்; மனம் என்பது ஒன்றுதான்" என்றார் மற்றவர்.

"ரசனை?"

"கொஞ்சம் மாறுபடும்" என்றார்.

"என்னை மன்னித்து விடு" என்றார்.

"ஏன்? என்ன செய்தாய்?"

"அவள் சிரிக்கும் போதெல்லாம் கன்னத்தில் குழிகள் ஏற்பட்டன, அவற்றிற்காகக் காத்து நின்றேன்" என்றார்.

"அடப்பாவி இது உனக்குத் தகாது" என்றார் மற்றவர்.

இருவரும் ஐம்பதைக் கடந்தவர்கள்.

# 19. தேர்வு

இது தொழில் தேர்வு அல்ல; எழில் தேர்வு; நாணிக் கண் புதைக்கும் கோணலை நிமிர்த்தி நேர்முகம் காணல் இது.

காரமும் இனிப்பும் எதேச்சாதிகாரமாக வைக்கப் பட்டன; அவர்கள் அவற்றை ஆக்கிரமித்தனர்.

வீட்டுத் தலைவன் முன்மொழிந்தார்; தரகர் வழி மொழிந்தார்; பேச்சுத் தொடங்கியது.

"பாட்டு வருமா?" என்று கேள்வி எழுப்பவில்லை. காலம் மாறிவிட்டது; ரசனைகள் மாறிவிட்டன. அதை அங்குவந்துதான் கேட்க வேண்டும் என்ற நிலை இல்லை.

"ஆட வருமா?" என்று கேட்கத் தேவை இல்லை. ஏன் என்றால் கொஞ்சம் ஆடத் தெரிந்தாலே கால்ஷீட்டுத்தேடி அவர்கள் கால்கள் சென்றுவிடுகின்றன. அவர்கள் திருமணம் கேள்விக் குறிகள் ஆகி விடுகின்றன.

அவள் உயரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்; நிறத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள்; அகலத்தை மட்டும் அவர்கள் ஆராய முற்படவில்லை. கல்வி ஆழத்தை ஆராயத் தொடங்கினர்.

கேட்பதற்கு முன் அவள் தான் ஒரு கம்ப்யூட்டர் என்பதைத் தெரிவித்து விட்டாள்.

ஒப்புக் கொள்ளப்பட்டது. வடகடலில் இருந்த முளை ஒன்று தென்துருவத்தில் இருந்த வடத்தோடு சேர்ந்தது என்பர். இது கலியாணத்தைப் பற்றிய பழங்காலத்துக் கவிதையின் சித்திரம்.

முதல் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது; ஒருவரை ஒருவர் தாமே அறிமுகம் செய்து கொள்ளும் முதல் இரவு அது;

பெண்ணின் அழகைப் பாராட்டாமல் எந்தப் புருஷனும் இருக்க மாட்டான்.

சிலப்பதிகாரம் இதற்குச் சிறப்பிடம் தருகிறது.

“மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே!” என்று பாராட்டியதாக அதில் கூறப்படுகிறது.

“என்னை உங்களுக்குப் பிடித்து இருக்கிறதா?” என்று அவன் தொடுவதற்கு முன் இவள் கேட்டு விட்டாள்.

“பிடித்து இருக்கிறது உன் கம்ப்யூட்டர் படிப்பு; அது எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது” என்றான்.

அழகைப் பாராட்டுவான் என்று எதிர்பார்த்தாள்; அது தேவை என்ற அறிகுறியே அவனிடம் காண முடியவில்லை. அவள் பெண்ணாகப் படவில்லை; கம்ப்யூட்டர் இயக்கியாகப் பட்டாள்.

அவள் சோர்வு அடையவில்லை; அதனால் வருத்தப் படவுமில்லை.

“இன்று கம்ப்யூட்டர் படித்தால் எங்கும் வேலை கிடைக்கிறது, கவலையே இல்லை” என்று தன் பாராட்டுதலை முடித்தான்.

வாழ்க்கைத் துணை நலம் என்று வள்ளுவர் கூறியதில் இது இடம் பெறவில்லை.

இன்று மதிப்பீடு மாறிவருகிறது; இது கம்ப்யூட்டர் யுகம்; பெண் இன்று பணம் சம்பாதிக்கும் கம்ப்யூட்டர் ஆகிவருகிறாள் என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

## 20. பேட்டி

திரைப்படத்தில் அவள் காலடி வைத்தாள்; அவ்வளவு தான்; வீட்டு அழைப்பு மணி அலரத் தொடங்கியது.

"யார் அது?"

"ரிப்போர்ட்டர்"

"நாங்கள் எந்தப் போர்ட்டரையும் அழைக்க வில்லையே"

"நீங்கள் நகைச்சுவையாகப் பேசுகிறீர்" என்று கூறி அவளை மகிழ வைத்தான்.

குற்றவாளிக் கூண்டில் அவள் நிறுத்தப்பட்டாள்; விசாரணை தொடங்கியது.

"நீங்கள் விரும்பி இந்தத் துறைக்கு வந்தீரா; மற்றவர்கள் விரும்பி உங்களை அழைத்தார்களா?"

தன்னை அறிமுகப்படுத்திய 'பாரதிராஜாவை' அவள் பெயரிட்டுக் கூறவில்லை.

"இதற்கு அழைப்புத் தேவை இல்லை, வாய்ப்பு; அது சிலருக்குக் கிடைக்கின்றது; பலருக்குக் கிடைப்பது இல்லை" என்றாள்.

'இந்தத் துறைக்கு வந்ததற்காக எப்பொழுதாவது வருத்தப்பட்டது உண்டா?'

"நீர் பேட்டி கேட்கத் தகுதி இல்லை என்பதைக் காட்டிவிட்டீர்; உங்களை இந்தத் தொழிலுக்கு அனுப்பினார்களே அவர்களை நினைத்து வருத்தப் படுகிறேன்" என்றாள்.

"நீங்கள் உண்மையில் அறிவாளி; எதிரியை நன்கு மடக்கி விடுகிறீர்" என்று அவளைக் குளிர வைத்தான்.

"ரசிகர் மன்றங்கள் வைத்தால் அவர்களுக்கு உம் ஆதரவு கிடைக்குமா?"

"எங்களுக்கு அவர்கள் பட்ம் வைக்கிறார்கள் அதுதான் பார்த்திருக்கிறோம்; மன்றங்கள் வைத்துப் பார்ததது இல்லை; அவை நடிகர்களுக்குதான், நடிகை களுக்கு அல்ல" என்று சுட்டிக்காட்டினாள். இது புதுமையாக இருந்தது.

"நடிகர்கள் அரசியலில் இறங்குவதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"இது புளித்துவிட்ட பழைய கேள்வி; இதைக் கேட்டு நாங்கள் அலுத்து விட்டோம்" என்றாள்.

"உங்களுக்குத் திருமணம் செய்து கொள்வது பற்றி ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா?"

"ஐந்தாண்டுத் திட்டம் உள்ளது" அதற்குள் அவன் அவசரப்பட்டுப் பேசினான்.

"இந்த ஐந்தாண்டுகளில் எத்தனை விவாகரத்து களுக்கு இடம் தரப் போகிறீர்கள்; இந்தச் சாதனையின் எண்ணிக்கை எதுவாக இருக்கும்" என்று கேட்டு விட்டான்.

"ஐந்தாண்டு என்பது என் நடிப்பைப் பற்றியது; அதற்குள் அவசரப்பட்டு விட்டீர். திருமணம் பத்தாண்டுத்

திட்டம்; அதற்குள்ளும் நிறைவேறுமா என்று உறுதியாகக் கூறமுடியாது"

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அதற்கு மேலும் படங்கள் கிடைத்தால் திருமணம் தள்ளிப் போட வேண்டி வரும்"

"நீங்கள் நடிப்புக்கு முதலிடம் தருவீர்களா; திருமணத்துக்கு முதலிடம் தருவீர்களா?"

"எனக்கு இந்தத்துறை கொடுக்கும் இடத்தைப் பொறுத்தது; தேவைப்படும் போது அப்பொழுது ஒரு மடையன் கிடைக்காமல் போகமாட்டான்" என்றாள்.

"அவன் உங்களை எது கருதி மணம் செய்து கொள்வான் என்று கருதுகிறீர்கள்."

"காதலித்துக் கலியாணம் செய்து கொள்வான்"

"உங்களையா?"

"இல்லை; நான் சேர்த்து வைத்திருக்கும் பணத்தை; வீட்டை; மற்றும் உள்ள வசதியான வாழ்க்கையை"

"அதில் உங்களுக்கு மனநிறைவு ஏற்படுமா?"

"அவனுக்கு மனநிறைவு நிச்சயமாக ஏற்படும்; அதுபோதும்" என்று முடித்தாள்.

## 21. நேரம் பொன்னானது

எதுகை மோனைகளை அடுக்கிச் செங்கல் கட்டிடம் கட்டினார்; அவற்றோடு இசைக்காரர்கள் சப்த ஜாலங்களைப் போட்டவுடன் அவர் திரைப்படக் கவிஞர் ஆகிவிட்டார்; மானுடம் பாடுவதை விடுத்து மயக்கம் தரும்

ஓசைகளை உண்டாக்கினார்; இந்த மக்கள் அந்தக் கிறக்கத்தில் அவரைக் கவிஞர் என்று உயர்த்திவிட்டனர்.

அவர் விருதுகள் பெற்ற வித்தகரும் ஆயினார். இந்த ரசிகர்கள் அவரைப் பார்த்துப் பேச ஆவல் கொள்கின்றனர்; வீட்டுமுன் காவல் பலமுள்ளதாக உள்ளது; நாய்க்குப் பதிலாகத் தடுப்பதற்கு ஒரு பிரிய அணுக்கர் (P.A.) செயல்பட்டார். அவர் அனுமதி பெற்றே கவிஞரை அணுகிவந்தனர். கேட்டால் “நேரம் பொன்னானது” என்று அவர் கூறுகிறார்; நேரத்தை அவர் பொன்னாக்கினார். காட்சிக்கு அரியர் என்ற மாட்சியைப் பெறுகிறார். அவரைப் பார்க்கவே முடியாது என்கின்றனர்.

மற்றொரு பேராசிரியர்; அலங்காரப் பேச்சாளர். அவர் சொற்பொழிவுகளுக்கு அழைக்கப்பட்டார். டி.விக்கள் பெருகுவதற்கு முன் அவர் கொடுத்ததை வழிப் பயணச் செலவுக்கு என்று பெற்றுத் தமிழ்த் தொண்டு செய்து வந்தார். இப்பொழுது அவர் ‘ரேட்டு’ அதிகமாகி விட்டது. வீட்டு முகப்பு அறையில் “நேரம் பொன்னாது; ‘ஐந்து நிமிஷம்” என்று எழுதிவைத்துள்ளார்.

வக்கீல் ஒருவர் அவரிடம் பேசினால் பக்கத்தில் மீட்டர் வைத்திருக்கிறார்; நிமிஷத்துக்கு இவ்வளவு என்று அது தொலைபேசிப் பொறிபோல் கணக்குக் காட்டுகிறது; அவர் நீதி மன்றத்தில் நின்றால் பத்தாயிரம்; பேசினால் லட்சங்கள்; உட்கார்ந்தால் அதற்கும் காசு; காசேதான் தொழிலடா என்பது அவர் சித்தாந்தமாக இருக்கிறது.

மருத்துவரிடம் சென்றால் தொட்டால் தொள் ளாயிரம்; வெட்டினால் தொண்ணூறாயிரம்; அவர் பொன்விழா கொண்டாடுவது இல்லை. வைரவிழாவே நடத்துகிறார்.

அரசியல் வாதி; அவர் தேர்தலுக்கு முன் தெருவோரம் கூட்டங்கள் நடத்தினார்; இன்று கடலோரம் காட்சி தருகிறார்; அவரைப்பார்ப்பது எளியது அல்ல என்று பேசுகிறார்கள்; அதைப்பற்றி எழுதத் தேவைஇல்லை; பத்திரிகைகள் விமரிசிக்கின்றன. சோழியன் குடுமி சும்மா ஆடுவது இல்லை என்று சொல்கிறார்கள்.

இவர்கள் அனைவரையும் பார்த்து விட்டு இந்தப் புத்தக உற்பத்தியாளர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது.

அவர் நேரம் பொன்போன்றது என்று பலகை போட்டு மாட்டி இருந்தார்.

சமுதாயப் பிரச்சனைகளை அவர் எழுதிவந்ததால் அவர் சமூகப் பிரச்னையோடு செயல்படுவார் என்று எதிர்பார்த்து இவர் சென்றார்.

"உங்களிடம் பேசும் நேரத்தில் ஒரு பக்கம் எழுதி இருப்பேன்; தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டார்.

அவரும் தன் எழுத்தைப் பொன் ஆக்கிக் கொண் டிருந்தார். தலையெழுத்து என்று சென்றவர் திரும்பி வந்தார்.

யார்தான் நேரத்தைக் காசாக்காமல், இருக்கிறார்கள் என்று தேடிப் பார்த்தார்.

டி.வி. முன் அதைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து ஒரு காரியம் ஆக வேண்டி இருந்தது.

"கொஞ்சம் வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"நேரம் பொன்னானது: டி.வி. பார்த்துக் கொண்டு இருக்கிறோம்; எங்களைத் தொந்தரவு பண்ணாதீர்" என்று பேசி அனுப்பி விட்டார்.

முதல் இரவு; இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். "நேரம் பொன்னானது; பேசிக் கொண்டே இருந்தால் எப்படி?" என்ற வினாவும் அங்கும் எழுப்பப்பட்டது.

## 22. செய் நன்றி

அவர் ஒரு சட்ட நிபுணர்; நல்லவர்கள் பக்கம் அவர் நின்று வாதாடுவது இல்லை. கேட்டால் "நன்மைக்கு வக்காலத்து வாங்க வேண்டியது இல்லை" என்று கூறினார்.

ஒருவன் கொலை செய்துவிட்டுப் போலிசில் சரண் அடைவதற்குப் பதில் இவரிடம் வந்து அரண் புகுந்தான்.

"எத்தனை கொலை செய்தாய்?" என்றார்.

"ஒரே ஒரு கொலை"

"இவ்வளவுதான் செய்ய முடிந்ததா? அதற்கு வேறு வக்கீலைப்பாரு; ஐந்து கொலைக்குக் குறைவாகச் செய்தால் நான் வாதாடுவது இல்லை" என்றார்.

இப்படித் தீயவர்களுக்கே அவர் வக்கீலாகச் செயல் பட்டார்.

"நீங்கள் தீமைக்கு உடந்தையாக இருக்கலாமா?"

"வைத்தியன் சுகாதாரமான ஆளுக்கு உதவுவது இல்லை; அவன் நோயாளிக்குத்தான் துணைவன்; பால்நோய் வாங்கி வருபவனை அவர்கள் "ஏன் தவறு செய்தாய்?" என்று கேட்பது இல்லை. மருத்துவம் அவர் தொழில், திருத்துவது பள்ளி ஆசிரியர் தொழில்.

தம் உயிரைக் காத்துக் கொள்ள அவர்கள் கொள்ளை அடித்து இவரிடம் வந்து கொட்டினார்கள், ஒரு கொலை செய்தவன் ஐந்து செய்தான் இவர் தனக்கு வாதாட வேண்டும் என்பதற்காக.

பணவசதி இருந்தது; அவர் பிள்ளைகள் படித்தார்கள்; வெளிநாடுகளில் சென்று குடியேறி விட்டார்கள்.

மறைந்ததும் மாட்டி வைத்தபடம் அவர் இருந்த அடையாளத்தைக் காட்டிக் கொண்டு இருந்தது. அவர் துணைவியார் அந்தப் பெரிய வீட்டில் தனியாக இருந்தார். வேலைக்காரர்கள் அவரவர் தம் வேலை செய்து விட்டுத் தத்தம் வீடு திரும்பினர். அவர் மட்டும் அந்த வீட்டில் தனித்து இருந்தார்.

'வீடு புகுந்து திருடுவது' என்பது இப்பொழுதைய கனரகத் தொழிலாகி விட்டது என்று பேசப்படுகிறது. பலரும் மேற்கொள்ளும் போது அது ஒரு ஒப்புக் கொள்ளப்பட்ட தொழிலாகிவிடுகிறது.

''உங்களுக்கு அச்சமாக இல்லையா! தனித்து இருக்கிறீர்களே' என்று கேட்கப்பட்டது.

"கொலையாளிகள்தாம் எனக்குக் காவலாளிகள்; என் கணவரின் கிளைண்டுகள்; அவர்கள் எனக்குப் பாதுகாப்பு. அவர்கள் என்னைக் கவனித்துக் கொள்கிறார்கள். அவர்கள் நன்றியுடையவர்கள்; எங்களை அவர்கள் காப்பாற்று கிறார்கள். எங்கள் வீட்டில் பிறர் புகுந்தாலும் அவர் தடுத்து விடுவார்கள்" என்றார் அந்த அம்மையார்.

"உங்கள் பிள்ளைகள்?"

"அவர்கள் பிழைப்பைத் தேடி வெளிநாடு சென்று விட்டனர்."

"அவர்களுடன் நீங்கள் சென்று இருக்கலாமே"

"தேவை இல்லை; நாயும் எனக்குக் காவல் இருக்கிறது" என்றார் அவர்.

## 23. எது சரி?

பட்டுப் புடவை; துட்டுக் கொடுத்து வாங்கிய நகைகள். மணக்கோலத்தைக் காண இவர்களும் மணக் கோலத்தில் செல்கின்றனர். அவர்கள் உடுத்திய புடவை சலசலப்பை உண்டாக்கியது.

தாலி கட்டியாகிவிட்டது; அதற்குப் பின் அங்கு ஒருவர் கூட இல்லை. அனைவரும் உண்டி குலுக்கச் சென்று விட்டனர். திண்டி முடிந்ததும் வண்டி தேடினர் வீடு திரும்ப.

தானியங்கி வண்டிகள் அங்கே வெளியே இயங்காமல் நின்று கொண்டிருந்தன. போலீசு கூட தகராறு வைத்துக் கொண்டு ஊடல் செய்தார்கள் இந்த ஆட்டோக்காரர்கள். மின்னல் வேகத்தில் ஓடும் வண்டிகள் பக்கம் வாங்கிக் கொண்டு ஒதுங்கி விட்டன.

அந்தப் பக்க நோய்க்காரர்களை இவர் கூப்பிடச் சென்றார்.

"இப்பொழுது வராது" என்று ஒருமித்த குரலில் மறுப்புத் தெரிவித்தனர்.

"எப்பொழுது வரும்?"

“எங்களிடம் மன்னிப்புக் கேட்கும் வரை வண்டியை எடுக்க மாட்டோம்” என்றனர்.

“நாங்கள் ஒரு தவறும் செய்யவில்லையே”

“இது எங்களுக்குள் ஏற்படும் தகராறு; கொடுக்கல் வாங்கல்; நீங்கள் தெரிந்து கொள்ளத் தேவை இல்லை” என்றனர்.

“இன்று எதிர்த்துக் கொள்வோம், நாளைக்குக் கூடிக் கொள்வோம்” என்றனர்.

ஏதோ சமாதானப் பேச்சு நடந்திருக்கிறது.

உடனே வேலை நிறுத்தம் 'புயல் தோன்றி அடங்கிய வேகத்தில் வாப்பஸ் வாங்கப்பட்டது.

“அமிஞ்சிகரைக்கு வரமுடியுமா?”

“முடியாது; அடையாறுதான் போகும்; வரமுடியுமா?”

“வேறு வழியில்லை; அடையாறுக்குப் போய் அங்கிருந்து பஸ் பிடித்து அமிஞ்சிகரைக்குப் போய்விடலாம்” என்று தன் உடன் வந்த வீட்டுக்கார அம்மையாரிடம் கேட்கிறார்; அவருடைய மனைவிதான். சில சமயம் இந்த உறவு வீட்டை வைத்துச் சொல்லப் படுவதும் உண்டு.

அந்த அம்மையார் இவரை வீட்டுக்காரர் என்று குறிப்பிட்டார்; அவர் இவரை வீட்டுக்காரி என்று குறிப்பிட்டார்.

“என்னங்க விளையாடறிங்களா? தாச பிரகாஷ் எங்கே இருக்கிறது; அடையாறு எங்கே இருக்கிறது?”

"என்ன செய்வது அவர் விருப்பப்படிதானே நாம் போக முடியும்".

அடுத்தவரை அணுகினார்.

"ஐம்பது ரூபாய் தர முடியுமா"

"என்னப்பா இது அநியாயமாக இருக்கிறதே"

"வேறு வண்டியைப் பாருங்க"

அடுத்தவரை அணுகினார்.

"அறுபது" என்றார்.

இனி ஏலக்கடையாகி விடும் என்று அஞ்ச வேண்டி இருந்தது.

"வேறு வழியில்லை; பேசாமல் பஸ் பிடித்துப் போய் விடலாம்; மூன்று ரூபாயோடு முடிந்து விடும்" என்கிறார் அவர்.

அந்த அம்மையார் மறுத்து விட்டார்.

சிறிது தூரம் நடந்து சென்றனர். அந்தக் கூட்டத்தோடு தொடர்பு இல்லாத ஒரு ஆட்டோ வேகமாக வந்து கொண்டிருந்தது.

"ஆட்டோ!" என்று குரல் கொடுத்தனர்.

அவர் நிறுத்தினார்; பேரம் பேசவில்லை; கொடியை இறக்கினார்.

வீடு வந்து சேர்ந்தார்கள். 'இருபது' அது காட்டியது. அதற்கு மேல் ஐந்து தந்தார். அவர் மறுத்து விட்டார்; "எங்களை இழிவுபடுத்துகிறீர்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

"பஸ் அதில் போய் இருக்கலாமே" என்றார்.

“போய் இருககலாம்; நீங்கள் வாங்கித் தந்த முகூர்த்த சேலை; இது பட்டுப்புடவை; கசங்கி விடும்” என்றார் அந்த அம்மையார்.

## 24. தியாகிகள்

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் அவர்
வேறு ஒன்றும் கொள்வாரோ?

என்றார் பாரதியார்.

குண்டு அடிபடும் என்று தெரிந்தும் அவர் தன் மார்பைத் திறந்து காட்டியவர்.

புற முதுகு காட்டாத அவர் பேராண்மை கண்டு வெள்ளை நிறத்தவன் அவரை விட்டு வைத்தான்; அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அவர் மார்பு எலும்புகளை அவனால் எண்ணிப் பார்க்க முடிந்தது. அநத எலும்புக் கூட்டை அவன் சுட விரும்பவில்லை. வீர சுதந்திரம் வேண்டி நின்று போராடிய வீரர் அவர்.

அன்று கழற்றிய சட்டை அவர் இன்றும் மாட்டிக் கொள்ளவில்லை.

கேட்டால், “சலவைக்குக் கொடுத்திருக்கிறேன்; வரவில்லை” என்று நகைச்சுவை பட உரையாடுவார்.

அன்று ஒரு கொள்கைக்காகப் போட்டிருந்த கதர் வேட்டி இன்று அவர் உடுத்தும் உடையாக நின்று விட்டது. ‘தியாகிகள் தினம்’ என்று கொண்டாடினார்கள். அங்கே இவரைப் போலவே பல மாஜி வீரர்கள் கூடுவது உண்டு.

இவர் நிலமானியம் கேட்டுப் பெறவில்லை; ஓய்வுக்கு ஊதியம் பெறும் இழிநிலையை அவர் விரும்பவில்லை.

கேட்டால் "வீர சுதந்திரம் விரும்பி நின்றவர் வேறு ஒன்றும் கொள்ள மாட்டார்கள்" என்று கூறி வருகிறார்.

அபூர்வப் பிறவிகள் யாராவது கிடைத்தால் அவர்களை வைத்துப் பேட்டி காண்பது இன்று நடை முறை ஆகிவிட்டது.

"தியாகி என்றால் உங்களைப் போல இருக்க வேண்டும்" என்று பாராட்டினர்.

"எப்படிச் சொல்கிறீர்?"

"சட்டை கூடப் போடாமல் இருக்கிறீரே அதைக் குறிப்பிட்டோம்" என்றனர்.

"இந்த நாட்டில் அதற்கு வழி இல்லாமல் பல பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்" என்று அவர் திருப்பிக் கொடுத்தார்.

"உங்களுக்கு எல்லாம் சிலை வைக்க வேண்டும்" என்றார் பேட்டிக்காரர்.

"சிலைகளாக இருக்கிறார்கள் இந்த நாட்டில் வாழ்பவர்கள் பலர்; புதிய சிலைகள் தேவை இல்லை" என்றார்.

"அவர்கள் எல்லாம் தியாகிகள் ஆக முடியுமா?" என்று கேட்டனர்.

"பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இழந்து வாழ்கிறவர் பலர்; இன்று ஆதிக்கத்தையும் சுரண்டல் களையும் எதிர்க்க முடியாமல் சுதந்திரங்களை இழந்து தவிக்கும் நம் நாட்டு மக்களைத்தான் குறிப்பிடுகிறேன்; அவர்களும் தியாகிகள்தான்; வீர சுதந்திரம் அவர்கள் வேண்டி நிற்கிறார்கள்".

“அன்று கல்கி இந்த தேசத்தைத் ‘தியாக பூமி’ என்று கூறினார்; அந்தச் சொல் நிலைத்து விட்டது; சகல உரிமைகளையும் இழந்து தளை பட்டுக் கிடக்கிறது; அழிவுகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த நாடு தியாக பூமியாகி விட்டது. அவர் கூற்று நிலைத்து விட்டது” என்றார் அவர்

## 25. அறுவை சிகிச்சை

அவள் அழகாக இருந்தது அவளுக்கே வேதனையாக இருந்தது. வீட்டு அறைகளில் அவள் கணவன் வித்தியாசம் காண்பது இல்லை. அவன் காதலன் படத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவனைத் திருத்துவதற்கு என்ன வழி?

அறுவைச் சிகிச்சை நிபுணரிடம் சென்றாள்.

“ஐயா! என் முகத்தில் சிறிது மாற்றம் தேவை; அழகைக் குறைக்க வேண்டும்; முடியுமா?” என்று கேட்டாள். ஒரு பிரபல நடிகையின் மூக்கை அவர் சீர்திருத்தி இருக்கிறார்; பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தது. அவள் அழகு கூடிவிட்டது. அதனால் அதிக படங்களில் நடிக்கிறாள். தான் பேரழகி என்பதால் அவள் கலியாணத்தைத் தள்ளிப் போட்டு வருகிறாள்” என்று பேசிக் கொள்கிறார்கள்.

இது ஒரு புதுவித கோரிக்கையாக இருந்தது.

“அழகைக் கெடுத்தால் என் பெயர் கெட்டு விடும்; முடியாது” என்று கூறி மறுத்துவிட்டார்.

“உன் கணவரை அனுப்பு; அவர் மன நோய்க்குச் சிகிச்சை தருகிறேன்” என்று கூறி அவளை அனுப்பினார்

அவள் கணவருக்குத் தக்க அறிவுரை சொல்லி அனுப்பினார் என்று தெரிகிறது.

அறுவை சிகிச்சை நடைபெறவில்லை. அவள் கணவனின் அறுவைக்குச் சிகிச்சை நடந்தது.

"நீர் மாறாவிட்டால் உன் மனைவியின் முகத்தைக் குரங்கு முகமாக மாற்ற நேரிடும்" என்று அவர் அச்சுறுத்தி அனுப்பினார் என்று தெரிந்தது.

## 26. நூறாவது ஆள்

"சாவது என்பது ஒரு முறைதான்; வீரன் ஒரு முறை சாகிறான்; கோழை செத்துச் செத்து மடிகிறான்" என்பது பழமொழி.

சாவினைச் சந்திக்கும் அழகான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

மருத்துவரிடம் சென்றார்; அப்படிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

நாடி பார்த்து மருத்துவம் சொன்னது பழைய காலம்; தேர்வுகள் பல வைத்து ஆராய்ந்து பின் ஒரு கண்டுபிடிப்பு; அதன்பிறகுதான் தீர்வு.

"என்ன செய்யவேண்டும்?"

"அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்"

"பிழைப்பேனா?"

"நீர் நூறாவது ஆள்"

இவருக்கு அச்சம் உண்டாகி விட்டது. "ஐம்பது பேரைக் கொன்றால் அரை வைத்தியர்; இவர்

முழுவைத்தியர் ஆவதற்குத் தன்னைப் பயன்படுத்த விரும்புகிறார்" என்ற முடிவுக்கு வந்தார்.

"சிகிச்சை செய்து கொள்ளாமல் இருந்தால் என்ன ஆகும்?"

"மெல்ல மெல்லச் சாவினைச் சந்திக்கலாம்"

"அறுத்துக் கொண்டால்"

"அது உன் அதிருஷ்டம்" என்று கூறினார்.

"எப்படியும் சாவது உறுதி; அவர் கையாலேயே சாவது மேல்; தனக்கு விடுதலை கிடைக்கும். அவரும் நூறாவது விழா அழகாக நடத்தலாம்" என்று முடிவு செய்தார்.

சாவைப் பற்றிய சிந்தனைகள் அவரை ஆட் கொண்டன; அவருக்கு ஒரு ஆசை இருந்தது; அவர் ஒரு எழுத்தாளர். 'மரணத்தின் வாசலிலே' என்ற அழகான நாவல் ஒன்று எழுதி வைத்திருந்தார். அதை அச்சிடாமல் போகிறோமே என்ற மனக்கவலை மட்டும் இருந்தது. தனக்குப்பின்னால் யாரும் தன் நூலை அச்சிட மாட்டார்கள்; அந்தக் கவலை மட்டும் அவரை வாட்டியது. நோய் வாய்ப்பட்டதும் எழுந்த கற்பனை அது.

வீடு வாசல் மனைவி மக்கள் நண்பர்கள் அவர்கள் தாமாக விலகி நின்றனர். இவர் பயணத்துக்கு வழிவிட்டு அவரை மருத்துவரிடம் ஒப்புவித்தனர்.

'உறங்குவது போலும் சாக்காடு' என்று அவர் படித்த திருக்குறள்பா அவருக்கு ஆறுதல் தரவில்லை.

இறப்பு என்பது அஞ்சத் தக்கது அல்ல; நோயின் கொடுமையில் இருந்து தப்புவதற்கு அதைவிட வேறு மருந்து கிடையாது. தூக்குக் கைதிக்கு விடுதலை என்றால்

அவன் மகிழ்வு அடைவான்; அதே மனநிலையை இவர் சாகப் போகிறோம் என்பதில் அடைய முடிந்தது. நோயால் துன்பப்பட்டு நாளும் மெலிந்து எலும்புக் கூடாக மாறுவதை விட இந்த விடுதலை மகோன்னதுமானது என்ற முடிவுக்கு வந்தார். "எப்படியும் பிழைக்கப் போவது இல்லை; அவரிடம் இன்று உடம்பை ஒப்படைப்போம்; ஒருவேளை அதிருஷ்டம் இருந்தால் உயிர் பிழைப்போம்; அச்சிடாத நூலை அச்சிட்டு முடிக்கலாம்" என்ற சிறிய ஆசையும் அவரிடம் அமைந்தது.

"ஐயா' சாவு ஒன்றுதான்; உம் கையால் சாவதற்கும் மெல்ல மெல்லச் சாவதற்கும் என்ன வேறுபாடு?"

"சாவதே தெரியாது; துன்பம் இருக்காது. மயக்கம் தருவோம்; அதனின்று மீளத்தேவை இல்லை. ஆனால் ஒன்று; எங்களுக்கு உரிய கட்டணம் தரவேண்டும். மெல்லச் செத்தால் வேதனைமிகுதி; மற்றவர்களுக்குச் சுமை; உன்னை யாரும் பாராட்ட மாட்டார்கள் எப்பொழுது ஒழிவான் என்று எதிர்பார்ப்பார்கள்" என்று விளக்கம் தந்தார்.

கடைசி காலத்தில் அவருக்கு நன்கொடை தந்து தருமம் செய்த புண்ணியமும் சேர்கிறது. அது அவரை ஆதரிப்பதாக இருக்கும். நல்ல பேரோடேயே போய்ச் சேர்வது நல்லது; மற்றவர்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது" என்ற முடிவுக்கு வந்தார்.

ஒரு சிலர் சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல் தொழிலாளிகள் சிலரின் வாழ்வைப் போல வேதனைப் படுவதையும் பார்த்து இருக்கிறார். குற்றுயிரும் குறை உயிருமாக வாழ்வது கொடுமை என்பதை அறிந்தார்.

'ஐயா அடுத்து உம் விருப்பை நிறைவேற்றிக் கொள்" என்று சற்று வெறுப்போடு கூறி விடுதலை பெற்றார்.

ஊசி போடப்பட்டது; மயக்கம் அவரை ஆட் கொண்டது. அவர் அபிப்பிராயம் தருவதற்கு அவர் வாய் பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

கடைசி முறையாக அவர் மனைவி கண்ணீர் விட்டாள்; தாலியைத் தொட்டுக் கண்ணீரில் நனைத்து அதற்கு அபிஷேகம் செய்தாள்; தெய்வத்தை வேண்டினாள். பிள்ளைகள் இரண்டுபேரும் தயாராயினர்.

புகழ்பட வாழ்ந்தார்; அதனால் பூமாலைகளும் காத்து இருந்தன.

மயக்கம் நீங்கியது; மறுபடியும் வாழ்க்கை அவரை அழைத்தது.

மருத்துவர் அவரைப் பாராட்டினார். நீங்கள் பிழைத்துக் கொண்டீர்கள். இனி எந்த பயமும் இல்லை. இதுவரை தொண்ணூற்று ஒன்பது பேருக்குச் செய்து இருக்கிறேன்; அனைவரும் பிழைத்தவரே; யாரும் சாகவில்லை; நீர் நூறாவது ஆள்" என்றார்.

'நூறாவது ஆள்' என்று சொல்லியது நினைவுக்கு வந்தது. அதற்கு உண்மையான பொருளை அறிந்து வெளிப்பட்டார். மரணத்தின் வாசலில் இருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது. அந்த நூல் அச்சிடத் தேவை இல்லை என்று அதைக் கிழித்து விட்டார் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

# 27. பிராய சித்தம்

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சிச் அஞ்சிச் சாவார்
இவர் அஞ்சாத பொருள் இல்லை
இந்த அவனியிலே

என்று எதற்கோ சொன்னான் பாரதி. இந்தப் பெண்ணைப் பெற்றவள் அஞ்சி அஞ்சிச் செத்தாள் தன் பெண்ணை வேலைக்கு அனுப்புவதற்கு.

அவளுக்கு இரண்டு பையன்கள்; ஒரு பெண். பையன்கள் இருவரும் சின்னவர்கள்; இவள்தான் பெரியவள்.

அவள் வீட்டுவேலை செய்து காலத்தை ஓட்டி வந்தாள். பற்றாக்குறை என்பது அவள் ஒட்டுப் போட்ட உடை உணர்த்தியது; வீட்டில் அந்தப்பிள்ளைகளைத் தவிர வேறு எதுவும் சுமையில்லை; தேவைக்குமேல் அவள் புருஷன்தான் இருந்தான்; அவன் குடித்துவிட்டு வேலை செய்யாமல் சுருண்டு கிடப்பான். இவள் ஒருத்தியே மூவரையும் இந்த நாலாம் ஆளையும் சுமந்து வந்தாள்.

சுமை நிரம்பிய வண்டியை அவள் ஒருத்தியே முன் இருந்து இழுத்துச் சென்றாள்; பின்னால் இருந்து யாராவது ஒருவர் தள்ளினால் அந்த வண்டி வேகமாக ஓடா விட்டாலும் நகர்ந்து செல்வதில் சிரமம் இருக்காது.

“உன் பெண் படித்திருக்கிறாளே வேலைக்கு அனுப்பலாமே”

“பயமாக இருக்கிறது; இதுவரை தனியாக அனுப்பியது இல்லை; யார் எப்படி இருப்பார்கள் என்று

சொல்ல முடியாது. மானம் போனால் கோடி கொடுத்தாலும் திரும்பிவராது. அதற்கப்புறம் ஒரு முழம் கயிறுதான" என்று தத்துவம் பேசினாள்.

"அனுப்பு ஒன்றும் ஆகாது" என்று மற்றவர் கூறினார்.

மகளின் தோற்றம் அந்த நம்பிக்கையை அளித்தது; அதனால் இந்த நம்பிக்கையை அளித்தார்.

அவரே ஒரு இடத்திற்கு சிபாரிசு செய்தார்.

அவள்தாயின் நம்பிக்கை வீண்போகவில்லை; அவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

நடக்காதது நடந்து விட்டது என்பது செய்தி.

அவள் தாய் அலறிக் கொண்டு வந்தார்.

ஒரு முழக் கயிறு கேட்பாள் என்று இவர் எதிர்பார்த்தார்.

ஒரு முழம் இல்லை. காசு அவள் தேவையான அளவு வாங்கிக் கொள்வாள் என்று காசு கொடுப்பதற்குத் தயாராக இருந்தார்.

அலறினாள் துடித்தாள்: வெளியே சொன்னால் வெட்கக் கேடு என்று தானே அடங்கி விட்டாள்.

மாதங்கள் சில சென்றன. அந்தப் பெண் என்ன ஆனாள்? விசாரித்தார்.

அந்தப் பெண் அங்கேதான் வேலை செய்து வருகிறாள் என்று தெரிந்தது.

கூச்சலும் குழப்பமும் இருந்தன; பின் என்ன ஆயிற்று? தெரியவில்லை.

அந்தப் பெண் தனியே வந்தாள்; மஞ்சள் கடிதம் தந்தாள்; சில பேர் திவால் ஆகிவிட்டால் நீட்டும் வழக்கு மன்றக் கடிதம் அல்ல. 'திருமண இதழ்'; வெறும் மஞ்சள் கடிதம்தான். அட்டைகள் மட்டைகள் அல்ல; கோயிலில் எளிய முறையில் நடக்க இருக்கிறது என்பது தெரிந்தது.

"எப்படி இது முடிந்தது? கெடுத்தவன்?"

"தொடர்ந்து கெடுக்க ஒப்புக் கொண்டார்" என்று சிரித்துக் கொண்டே அவள் விடை பெற்றாள்.

## 28. சட்டவிவகாரம்

வெட்டு குத்து இல்லாமல் எந்த விவகாரமும் தொடராது. இது ஆளைப் பற்றியது இல்லை; வாழைச் செடியைப் பற்றியது; அதை வெட்டிச் சாய்த்து அவர் வீட்டு முன்னால் அதன் குலை நடுங்கும்படி நிற்கவைத்தார். அது தனியாக இருந்தது. முதலில் அதற்குக் கலியாணம் பண்ணி வைத்துத் தன் இதர வேலைகளைக் கவனித்தார்; இணையாக மற்றொன்றை வாசலில் மற்றொரு பக்கத்தில் நட்டு வைத்தார்; மூங்கில்கள் உடன் நட்டு ஓலைகள் போட்டு மணப்பந்தல் ஆக்கினார். அந்த வீடு அலங்கார வீடு ஆகியது.

அந்த வாழைக் குலைகள் பறிப்பார் கண்ணைக் கவர்ந்தன. மற்றவர்கள் வாலிபர்கள் ஆயினார்கள். கவர்ச்சியால் இழுக்கப்பட்டனர்.

அந்தக் குலைகளுக்கு உரியவர் உள்ளே போகும் வரை காத்திருந்தனர். அதன்பின் சேலை உரிப்பது போல் அதன் பட்டைகளில் கை வைத்தனர்; காய்களை ஒன்றன்

பின் ஒன்றாகப் பறித்தனர். அவர்கள் வழிபறிக் கொள்ளையர் ஆயினர்.

தேவைக்கு மேல் அவர்கள் கைக்கு வந்ததும் அவர்கள் அவற்றை விலைபொருள் ஆக்கினர்.

காயைத் தின்றவர்கள் அதன் சுவையைப் பாராட்டி அந்த வாழைக்கு உரியவரிடம் கூறினர்.

அறுத்தது யார்? பறித்தது யார்? என்று விளங்கவில்லை; அப்பாவி ஒருவர் அகப்பட்டார். அவரைப் பிடித்து அலைக்கழித்தனர்.

இவர்கள் செல்வாக்கு உடையவர்கள்; அதனால் காவல் துறையினர் காலதாமதம் செய்யாமல் தொலை பேசியில் கூப்பிட்ட குரலுக்கு விரைந்து வந்தனர்.

அவனைக் கட்டிப் பிடித்துக் கதறஅடித்தனர். அவன் தான் நிரபராதி என்று கூறிப்பார்த்தான் அவர்கள் கேட்பதாக இல்லை.

அவன் கதறலைக் கண்டு அனுதாபம் தெரிவித்தனர் ஒருவர் இருவர்.

அதிகம் தண்டனை போடாமல் பார்த்துக் கொள்கிறோம்; என்று போலீசுகாரரே சமாதானம் கூறினர்.

'ஏதாவது அபராதம் போடுவார்கள்; எழுபது எண்பது அதுக்குமேல் போகாது" என்று தண்டனையின் அளவையும் கூறினர்.

"நான் குற்றம் செய்யவில்லை" என்று உரக்கக் கத்தினான்.

"நீ திருடி இருக்கிறாயே!" என்றார் காவல் காப்பாளர்.

"சரி ஒப்புக் கொள்கிறேன்; எங்கிருந்து எடுத்தேன்?"

"தெருவில் அவர்கள் கட்டி வைத்தார்கள்; அங்கிருந்து பறித்தாய்."

"அவர்கள் வீட்டில் இருந்து பறிக்கவில்லையே"

"தெருவில் இருந்துதான்; அவர்களுடைய மரம் தான் அது"

"அவர்கள் வெட்டி வெளியே போட்டுவிட்டார்கள்; தெருவிலே போட்டு விட்ட குப்பை; அதை யாரும் பொறுக்க உரிமை உண்டு. இது வெறும் குப்பை; அதுமட்டும் அல்ல; அவர்கள் வீட்டில் அல்ல; தெரு பொது இடம்; அவர்களுக்கு வழக்குத் தொடர உரிமை இல்லை. முதலில் அவர்கள் அந்த மரங்களை வெட்டிச் சாய்த்தார்கள். அது படுகொலை; அதற்குத் தண்டனை தரமுடியும் என்றால் எனக்குத் தரலாம்" என்றான்.

சட்டச் சிக்கலை அவன் ஏற்படுத்தி வைத்தான்.

"வாழை மரங்களை அவை முதிர்ந்து முற்றுப் பெறும் முன் வெட்டுதல் பொருளாதாரச் சேதம்; இன்னும் சில நாள் விட்டு வைத்திருந்தால் காய்கள் முதிர்ந்து அவை தாமாக உதிர்ந்து இருக்கும்; அதனுடைய வாழும் காலம் இன்னும் உள்ளது. அதற்குள் அவற்றின் ஆயுளைக் குறைத்தது அதர்மம்; சட்டப்படி தண்டிக்க முடியாது என்றாலும் வீண் ஆடம்பரங்களுக்கு மரங்களை வெட்டுவது மாபாதகம்" என்று ஒரு சிலர் பேசிக் கொண்டே சென்றனர்.

அந்தப் பையன் "நான் சுப்ரீம் கோர்ட்டுவரை போவேன்" என்று கதறினான்.

அவன் சட்டம் தெரிந்தவனாகத் தெரிவித்துக் கொண்டான்.

"நாளைக்கு வாழ்க்கை எப்படி? என்று கேள்விக்கு உரியவர்கள் எல்லாம் இன்று சுப்ரீம் கோர்ட்டு என்று பேசும் நிலைவந்து விட்டது" என்று ஒரு சிலர் குறிப்புகள் தந்தனர்.

"காலம் அப்படி; எந்த வழக்கும் இன்று மூன்றாம்படி கட்டு ஏறியபிறகுதான் தீர்கிறது. இளைய தலைமுறைகள் புறக்கணிக்கப்படுகின்றன" என்று மற்றவர் இந்தக் காலத்துச் சூழ்நிலையைக் குறிப்பிட்டார்.

காவலர் அவன் கட்டை அவிழ்த்து விட்டனர்; இந்த இக்கட்டில் மாட்டிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை.

"அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது" என்று தீர்ப்புக் கூறிவிட்டுச் செலவு பெற்றுச் சென்றனர்.

## 29. வளர்த்த குறை

அவனுக்கு வயது முப்பது; அவன் தாய்க்கு அதே கவலை; வயது ஆவது ஒரு கவலை என்றால் அது ஆச்சரியப்படத் தக்கதுதான்.

ஏதோ பெண்ணைப் பெற்றுவிட்டு மடியிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதாகப் பொறுப்புள்ள தாய் கூறுவதைக் கேட்டிருக்கிறோம்; தாய் ஒருத்தி இவ்வாறு கூறுவது விசாரணைக்குக் காரணம் ஆக அமைந்தது.

"ஏன் அவன் கலியாணம் பண்ணிக் கொள்ள மறுக்கிறான்?"

"அதுதான் விளங்கவில்லை"

"யாராவது அவனிடம் பேச்சுக் கொடுப்பார்கள்."

"எப்பப்பா எங்களுக்கு இலை போடப் போகிறாய்? என்று கேட்டு விட்டால் அவன் மறுபடியும் அவர்களைச் சந்திக்க மறுக்கிறான். அந்தத் திசையே அவனுக்கு வடக்காகத் தெரிகிறது; வாடைக் காற்றாக அது அவனுக்குத் தோன்றுகிறது."

அந்தப் பையனைப் பற்றி மேலும் சில கேள்விகள் கேட்கப்பட்டன.

"அவன் பிறந்த மேனியனாக இருக்கிறான்; அவனிடம் எந்தப் பழக்கமும் இல்லை" என்றார் அவன் தாய்.

"ஒரு சிகரெட்டுப் பிடிக்க மாட்டான். சினிமா பார்க்க மாட்டான்; எந்தப் பையனோடும் சேர்ந்து திரியமாட்டான்; யாரும் அவனைப் பற்றிக் கெட்டவன் என்று ஒரு சொல் கூறிக் கேட்டது இல்லை."

அவன் தங்கமான குணத்தின் எடை இவ்வாறு விவரிக்கப்பட்டது.

"டி.வி பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டான்."

சந்தோஷம் என்பது என்ன என்றே அவன் கண்டது இல்லை என்று தெரிந்தது.

"சிறுவயதில் இருந்து இப்படித் தானா இருப்பான்?"

"தாய் சொல் தட்டியது இல்லை; கிழித்த கோடுகளைத் தாண்டியது இல்லை; நான் அப்படி வளர்த்து இருக்கிறேன் பெண்களை வளர்த்து வருவது போல அவனை வளர்த்து விட்டேன்" என்றார் அந்தத் தாய்.

குறை தெரிந்தது; ஒருவன் சந்தோஷமாக வாழவும் பழக்கம் தேவை; தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

என்றது அதன் பொருள் தீமைகளுக்கு மட்டும் சுட்டிக் காட்டப் பயன்படுத்தினர்.

"அவனைத் தீய பழக்கங்களிலும் விட்டு இருக்க வேண்டும்; அவனை நீங்கள்தான் கெடுத்துவிட்டீர்" என்று கேட்டுக் கொண்டிருந்தவர் பதில் சொன்னார்.

இன்று நீதி நூல்கள் எவ்வளவு தூரம் மக்களைக் கெடுக்கின்றன என்பதற்கு அவன் வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது.

'நீதிக்குத் தலைவணங்கு' என்று யாரோ ஒரு பாட்டின் வரியை ஒப்புவித்தார்.

"நல்லது கெட்டது இரண்டும் அறிந்தால்தான் ஒருவன் முழுஞானம் உடையவனாக விளங்க முடியும் என்பதைத் தைரியமாகச் சொல்லமுடியுமா?" இது கேள்வி.

"நீங்கள் அவனைக் கட்டுப் பாட்டோடு வளர்த்தீர்கள் இன்று அந்தக் கட்டுப்பாடே ஒரு பிரச்சனை ஆகிவிட்டது" என்று அந்த அம்மையாருக்கு அறிவு கூறினார்.

"நடந்தது நடந்து விட்டது. எப்படி அவனைத் திருத்துவது."

"தாய் திருத்த முடியாது; ஒரு பேய் வந்து மாற்றுவாள்; கவலைப்படாதீர்" என்ற சொல்லி அனுப்பினார்.

## 30 குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

அவர் மலை குலைந்தாலும் நிலை குலையாத மனம் பெற்றிருந்தார். அதற்குக் காரணம் என்ன? எப்படி அவரால் முடிந்தது?

அவர் ஆபீசில் அவருக்கு மிகவும் நல்ல பெயர்; "அவருக்குக் கோபமே வந்து பார்த்தது இல்லை" என்று கூறுகிறார்கள்.

பியூன் காஃபி கொண்டு வந்து வைக்கிறான்; அதை அவன் சரியாக வைக்கவில்லை; அது அவன் கைபட்டுச் சரிந்து விடுகிறது. அது கண்ணாடியால் செய்யப்பட்டது என்று தன்னைக் காட்டிக் கொண்டது.

தட்டு அச்சுத் தொழில் செய்யும் தகையாள் ஒருத்தி அவள் தப்புத் தப்பாக டைப் அடித்துக் கொண்டு வந்து முன் வைத்தாள். மூன்று முறை திருத்தி அனுப்பினார்; நாலாவது முறையே அது சரி என்று ஏற்கப்பட்டது.

அவருடைய மேலதிகாரி இவர்மீது தவறு இல்லை எனினும் இவரைச் சரியாகப் புரிந்து கொள்ளாத சூழ்நிலை.

"நீங்கள் எல்லாம் எதற்கு ஐயா பதவி வகிக்கிறீர்; முட்டாள்தனமாக நடந்து கொள்கிறீர்; நீங்கள் இப்படிச் செய்து இருக்கக் கூடாது. முதலில் இந்த இடத்தைக் காலி செய்; லாயக்கில்லை" என்று கத்துகிறார்.

சிறிது சலனமும் காட்டாமல் அங்குத் தான்செய்தது தவறு இல்லை என்பதைப் பொறுமையாகக் காட்டினார்.

அவர் வெட்கித் தலை குனிந்தார். இவர் பொறுமையைக் கண்டு ஆபீசே அதிசயம் அடைந்தது.

அந்த நிறுவனம் எல்லா வகையிலும் முன்னேறியது; அதற்குக் காரணம் அவர் பொறுமையும் நிதானமும் என்று பாராட்டப்பட்டது.

இவருக்கு இந்தப் பயிற்சி எப்படிக் கிடைத்தது? வியப்பாகவே இருந்தது. அவர் படித்த திருக்குறள் தலைப்பு யாது என்று அறிய ஆவல் பிறந்தது.

அவர் வாழ்க்கைத் துணைநலம்தான் காரணமாக இருக்க வேண்டும் என்ற ஒரு ஐயம் எழுந்தது.

அவர் மற்றவரை வீட்டுக்கு அழைத்து இருந்தார்; அவர் சொந்த விஷயம் அது; ஆபீசு விஷயத்தை அவர் வீட்டில் பேசுவது இல்லை. அதை அவர் தவிர்த்தார்.

அவர் மனைவிதான் என்று தெரிந்தது; குரலில் கடுமை வெளிப்பட்டது.

அவர் பையன் படிக்காமல் இருந்ததால் அந்த அம்மையார் சீறிவிழுந்தார்.

தட்டுமுட்டுகள் எல்லாம் அவளோடு சண்டை போட்டுக் கொண்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தன.

அந்த அம்மையார் இவரோடு பேசுவதே இடியும் மின்னலுமாக இருந்தது.

வேலைக்காரியுடன் ஒரே சண்டை; அவள் குரல் இந்த அம்மையாருக்கு ஈடு கொடுத்தது; இருவரும் ஒருவருக் கொருவர் சளைக்கவில்லை.

அந்த வீடு அமர்க்களப்பட்டது; அவர் எதிர்ப்புச் சிறிது கூட காட்டாமல் அமைதியாக இருந்தது வியப்பைத் தந்தது.

அவர் வெற்றிக்குக் காரணம் விளங்கியது.

## 31. பொழுது போக்கு

அவருக்கு ஒரே ஒரு மனைவி; பிள்ளைகள் எல்லாம் சண்டை போட்டுக் கொண்டு வெளியேறி விட்டனர்;

அதனால் அவருக்குத் துணையாக இருந்தவர் ஒரே ஒரு மனைவிதான்.

அந்த வீடு வெறிச்சிட்டது; ஆரம்பத்தில் அவர்கள் இருவர்தாம் இருந்தனர்; பின்னால் தன் பிள்ளைகள் அவர்கள் போய் விட்ட பிறகு அந்த வீடு தனிமை பெற்றது.

அவர்கள் சண்டைக்குக் காரணம் அதை எழுதிப் பக்கங்களை வீண்படுத்துவது எழுத்து தர்மம் அல்ல; அவர்கள் போய் விட்டார்கள்; இங்கு இருக்கப் பிடிக்கவில்லை; அவ்வளவுதான்.

கண்விழித்துப் பார்த்ததும் அவர் முதலில் யார் முகத்திலும் விழிக்கமாட்டார்; அவர் ஓய்வு பெற்ற அதிகாரி ஆகையால் ஆங்கிலப் பத்திரிகை படிப்பார்; முதலில் புரட்டுவார்; தலைப்புகளைப் பார்ப்பார்; மடித்துவிட்டுச் சூடாகக் காஃபி குடிப்பார்; பத்திரிகைகளைப் புரட்டினாலே கிளர்ச்சிகள், அடிதடிகள்; துப்பாக்கிச் சூடுகள்; பாம்ப் வெடிப்புகள் இவையே அவர் படிப்புகள்.

வீட்டுவேலைக்காரி வீட்டைச் சுத்தமாகப் பெருக்கிவிட்டு எல்லாவற்றையும் துடைத்துவிட்டு அந்த லட்சுமி வெளியேறி விடுவாள், அவள் பெயர் அது.

அதற்கப்புறம் ஒரே துணை; பேச்சுக் கொடுத்தாலே வந்தது வினை; ஓயாத வாதங்கள்; ஒரே சண்டை; அவர்கள் ஆதிக்கக் குரலில் அவரை அடக்க முயற்சிப்பார்; இவருக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததுதான் சண்டை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

பிள்ளைகள் சண்டை போட்டுச் சென்றதற்கு யார் காரணம்? அது குறித்துத்தான் விவாதங்கள் தொடரும்.

"நீ தான் காரணம்; மருமகளை நீ இப்படிச் சொல்லி இருக்கக் கூடாது" என்பார் அவர்.

"நீங்கள் உங்கள் வாயால் அவர்களை வீட்டை விட்டுப் போகலாம் என்று சொல்லி இருக்கக் கூடாது. அவன் உங்கள் வயிற்றுப் பிள்ளை; அவனை இப்படிச் சொல்லி இருக்கக்கூடாது" என்பாள் அவர் துணைவியார்.

"அவன் பெண்டாட்டிப் பேச்சுக் கேட்டு ஆடறான்; சொந்த புத்தி இல்லை" என்று இவர் சுட்டிக் காட்டுவார்.

"எல்லாம் உங்களுக்கு அவசரம்; கொஞ்சம் பொறுத்து இருக்கலாம்" என்று அங்கலாய்ப்பாள் அவள்.

அவர்கள் இருவரும் கருத்து ஒருமித்து உரையாடி யதையே பார்க்க முடியாது.

விவாதங்கள் இருந்தால்தான் சட்டசபைகளே களை கட்டுகிறது. இந்த அம்மையாரும் வெளி நடப்பு நடப்பதாக மிரட்டுவார்கள்; இவரும் அவைத்தலைவர்கள்போல் அவசரப்படுவார்; அந்த அம்மா முகம் தூக்கிக் கொண்டு 'உம்' என்று இருப்பார். காலை அரும்பிப் பகலெல்லாம் போது ஆகி மாலை மலரும் இந்தப் போர்; சதா கூச்சல்தான்; மென்மையே இழந்து விட்ட நிலைமை.

கேட்டால், "இதுதான் எங்களுக்குப் பொழுது போக்கு" என்று நகைச் சுவையாகச் சொல்லி விடுவார்.

இந்த இரைச்சலை மறப்பதற்கு அவர் டி.வியைத் திருப்புகிறார். அதிலும் மாறிமாறிச் சண்டைக் காட்சிகள்; அவற்றைப் பார்ப்பது அவர்களுக்குப் பொழுது போக்காக அமைந்தது. அது அவர்களுக்கு அமைதியைத் தந்தது.

# 32. கூட்டு

அவள் கூட்டுக் குடும்பத்தில் இருந்து தனித்துப் பிரிந்து சுதந்திரமாகச் செயல்பட்டாள். அவள் உரிமையோடு செயல்பட்டாள்; அவர்கள் உரிமையோடு செயல்பட முடிந்தது. கூட்டுக் குடும்பத்தில் ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டது; உப்பு இருவர் போட்டு விட்டனர்; சமையல் அன்று கெட்டு விட்டது. சமையல் அறையே பிரச்சனையின் தொடக்கமாக அமைந்தது; அதுமுதல் 'கூட்டு' என்ற சொல்லே மருமகளுக்குப் பிடிக்கவில்லை; அவள் "தனிக்குடித்தனம்" என்றாள்.

'கூட்டுச் சேராக் கொள்கையே' சிறந்தது என்பது அவள் சித்தாந்தமாக இருந்தது. சமையலிலும் கூட்டு' என்ற சொல்லே அவளுக்குப் பிடிக்காது. அது அவளுக்கு அலுத்து விட்டது.

ஆனால் தினமும் சமையல் செய்யும் முன் கூட்டு யோசனை செய்தே அன்றைய 'மெனுவை' நிர்ணயிப்பாள்; அவனுக்கு எது பிடிக்கும் என்று வந்து கேட்டு அவனை அரிப்பாள். அவன் காலையில் ஆபீசுக்குப் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டு இருப்பான்; ஆபீசு பைல்களை ஒரு முறை புரட்டிப் பார்த்து அடுக்கி வைப்பான்.

இடையிலே இந்தக் கொஞ்சல் நடக்கும் "இன்னைக்கு என்ன செய்வது?" என்று கேட்பாள்.

நோயாளியை விசாரிப்பது போல அந்தக் கேள்வி இருக்கும்.

"எனக்கு எது போட்டாலும் மறுப்புச் சொல்ல மாட்டேன்; கழுத்தை நீட்டிய பிறகு குனிய வேண்டியது தானே" என்பான்.

"நான் சொல்ல வேண்டியதை நீங்கள் சொல்கிறீர்களே உவமை பொருத்தமாக இல்லையே" என்று குத்திக் காட்டுவாள்.

"சாப்பாட்டுக்கு உட்கார்ந்த பிறகு நீ போட்டதைச் சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்."

"அப்புறம் இது சரியாக இல்லை. அது சரியாக இல்லை என்று சொல்லக்கூடாது" என்று ஆணையிட்டுக் கூறினாள்.

"மாற்றம் தேவை; ஒப்புக் கொள்கிறேன்; ஏதாவது மாற்றிச் செய்" என்றார்.

"அது உங்களுக்குப் பிடிக்க வேண்டுமே"

"சரி! நான் சொல்கிறேன் 'கூட்டு' என்றார்.

அந்தச் சொல்லே அவளுக்கு அலெர்ஜியாக இருந்தது; கூட்டுக் குடும்பம் கூடாது; தனித்து இயங்குவது என்று உறுதியோடு வெளியேறியவள் அவள். அந்தச் சொல்லே அவளால் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

"கொள்ளையடிக்கச் சென்றாலும் கூட்டுக் கூடாதுங்க; அது என்றைக்கும் கெடுதி" என்று அறிவுரை கூறினாள்.

கூட்டுக்கும் கொள்ளைக்கும் உள்ள தொடர்பை அவள் சுட்டிக் காட்டினாள்.

டெல்லியில் இருந்து ஒரு மாஜித் தலைவர் உதிர்த்த சொற்கள் நினைவுக்கு வந்தன.

"அரசியலில் யாரோடு வேண்டுமானாலும் கூட்டுச் சேரலாம்" என்று தெரிவித்தார்.

அவள் கூட்டுச் சேர்க்காத கொள்கையில் நிலைத்து நின்றாள்; அவன் கேட்ட 'கூட்டு' அவள் சமைக்கவில்லை.

# 33. ரொட்டித் துண்டு

"சட்டப்படி எதுவும் நடை பெறுவது இல்லை" என்று அவர் கூறிக் கொண்டு இருந்தார்.

சட்ட மீறல் செய்து இவர் சிறைக்குப் போவதற்குத் தயார் ஆகுவது போல இருந்தது அவர் பேச்சு.

சட்டத்துறைக்கும் இந்தச் சட்ட நாதனுக்கும் என்ன தொடர்பு என்று சிந்திக்கத் தூண்டியது. சட்ட நாதன் என்பது அவனுக்கு அவன் பெற்றோர்கள் சிந்தித்து முடிவு செய்து வழங்கிய பெயர் அது.

"போலீசு வேலைக்குப் போக இருக்கிறேன்; அதற்குப் பணம் தேவை?" என்றார்.

"அதற்கு உடற்கட்டுத் தேவை" என்றார் மற்றவர்.

"பணக் கட்டும் தேவைப்படுகிறது" என்று கூறினார்.

"காலம் கெட்டு விட்டது" என்றார் மற்றவர்.

"காலத்தைக் கெடுத்துவிட்டார்கள் என்றார் சட்டநாதன்.

"என்ன செய்யப் போகிறாய்?"

"திருட வேண்டியதுதான்" என்றார்.

"சட்டத்தைக் காக்கச் செல்கிற நீயே சட்ட மீறல் செய்யலாமா?" என்றார்.

"நல்ல காரியத்துக்குப் பொய் சொல்லலாம். அதுபோலத் தான் இதுவும்" என்றார்.

அவர் காவல் நிலையத்தில் சேர்ந்தார். அவர் ஆசை நிறைவேறியது; விலங்கிடும் தொழில் அல்ல; விலங்கு இடப்பட்டு அங்குச் சேர்க்கப்பட்டார்.

# 34. தூவானம் விடவில்லை

அவர் ஒரு கார் வைத்திருந்தார்; விலை குறைவாகக் கிடைக்கிறது என்று அதை விலை கொடுத்து வாங்கினார். அடிக்கடி நின்று விட்டு அது சத்தியாக்கிரகம் செய்தது தள்ளினால்தான் அது நகரும்; பிறகு சீறி எழுந்து பாயும். அது கட்டிய மனைவி போல ஒட்டி உறவாடியது. அது தொல்லை கொடுத்தது; அதை விலக்க இயலவில்லை. பழமை பாராட்ட வேண்டிஇருந்தது.

அதனைக் கடைசியில் அடிமாட்டுக்கு விற்க வேண்டி இருந்தது; யாரோ ஒரு புண்ணியவான் கள்ளக் கடத்தலுக்கு ஏற்றது என்று அந்தப் பாவத் தொழில் செய்வதற்கு வாங்கிக் கொண்டான். போலீசு பிடித்துக் கொண்டால் இழப்பு அதிகம் இல்லை; அதனால் அதை வாங்கி எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

இவர் கார் வைத்திருந்தபோது ஒரு அனுபவம்; அடிக்கடி சாலையில் நின்று சண்டித்தனம் செய்து வந்ததால் அதனைக் காவல் துறை நெறியினர் பார்த்து இருக்கிறார்; அவர் முகவரி தெரிந்து கொண்டு வந்து இவரைக் கவர்னர் ஆக்கினார்; இவர் முன் நின்று சலியூட் அடிப்பார். அவர் தயவு அன்று தேவைப்பட்டது; வரும் போது எல்லாம் பத்து இருபது கொடுப்பது வழக்கம் ஆகி விட்டது.

கட்டிக் கொடுத்த பெண் வீட்டுக்குத் திரும்பாமல் இருந்தால் பெற்றோர்க்கு மகிழ்ச்சி; கடத்திச் சென்றவன் அதை வைத்துக் கொண்டு நன்றாக வாழ்வதாக அறிந்தார். விட்டது தொல்லை என்ற மன நிறைவோடு இருந்தார்.

பத்து வருஷம் ஆகியது; அந்த நினைவே அவரைவிட்டு நீங்கியது; கார் எண்ணும், நிறமும் நினைவில் இல்லை.

அந்தக் காவல் நெறியாளர் வந்து நிற்கிறார். பழைய சலியூட்; கை நீட்டுகிறார். இவரைக் காசு கேட்டு வாட்டுகிறார் அவர் மட்டும் இவரை விடுவதாக இல்லை. அடிக்கடி தொல்லை கொடுக்கிறார். காசிக்குப் போனாலும் கருமம் தொலைவது இல்லை. மழை நின்றாலும் தூவானம் நிற்கவில்லை.

# 35. முகராசி

காலையில் ஏழு மணிக்கு அங்கு உட்காருகிறார்; மேல் துண்டைத் தரையில் விரிக்கிறார்; காசுகள் விழுகின்றன; பத்து மணிக்கு எல்லாம் அந்த இடத்தை விட்டு எழுகிறார். அப்புறம் அவரை அங்குக் காண்பது இல்லை.

அவர் எதிரே மற்றொருவர் அதே நேரத்தில் தன் பையை விரிக்கிறார். வருகிறவர்கள் கால்களைத் தொட்டுத் தொழில் தொடங்குகிறார்; அவர்கள் கிழிந்த செருப்புகளுக்கு ஒட்டுப் போடுகிறார். மங்கியவற்றுக்கு ஒளி ஊட்டி அவர்களை அனுப்பி வைக்கிறார். இவர் அந்த இடத்தை விட்டு எழுவது இரவு ஆறு மணி. ஏறக்குறைய பத்து மணி நேர உழைப்பு.

வருவாய் இருவருக்கும் ஏறக்குறைய ஒன்றுதான்.

ஏன் இந்த வித்தியாசம்?

விசாரித்துப் பார்த்ததில் தெரிகிறது; இருவரும் ஒரே ஊர்தான். அது வந்தவாசி; முன்னவர் முகராசி; பின்னவர் அவர் கைராசி. இதுதான் வேறுபாடு.

விளங்கவில்லையா; முன்னவர் ஒரு தொழுநோயாளி; பின்னவர் செருப்புத் தைக்கும் தொழிலாளி; அது அது அவர்கள் வந்த ராசி என்று முடிவு செய்ய வேண்டி உள்ளது.

# 36. அலுத்துவிட்டது

நங்கையர் கல்லூரி அது; அதிலிருந்து மங்கையர் தம் கையில் புத்தகங்களைத் தாங்கிக் கொண்டு வீடு திரும்பினர். அவர்கள் எந்தக் கதையையும் படைக்கவில்லை. படைக்கலாம்; அது நமக்குத் தெரியாது.

ஒருத்தி மட்டும் அங்கு வந்து நிற்கும் காரில் இறங்கும் இளைஞன் பார்வைக்கு இலக்கு ஆகிறாள்; நம் பேனாவுக்கும் அவள் இலக்கு ஆகி இருந்தாள்.

தினம் மாலையில் அங்கு வந்து நிற்பான். அவள் அக்கினிப் பிரவேசம் செய்யப் போகிறாள் என்று ஜெயகாந்தன் கதை படித்தவர்கள் பேசிக் கொண்டனர். பரிவுணர்ச்சியோடு இந்த ஆசிரியர் அதைத் தீட்டக் காத்திருந்தார்.

வழக்கமாக வருபவன் அன்று வரவில்லை. புதியவன்; புதிய கார் வந்து நின்றது. அவள் அதில் ஏற மறுப்புத் தெரிவிக்கவில்லை.

"அவர் எங்கே?" என்று கேட்டாள்.

"தினமும் நான் வேறு ஒரு கல்லூரி முகப்புக்குச் செல்வேன்; எனக்கு அலுத்துவிட்டது; எனக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது; அவனுக்கும் ஒரு மாற்றம் தேவைப் பட்டது; இடம் மாற்றிக் கொண்டோம்" என்றான்.

அவளிடத்தில் எந்தச் சலனமும் ஏற்படவில்லை. எந்தக் காராக இருந்தால் என்ன? தனக்கு ஏற்றிச் செல்ல எதுவந்தால் என்ன? அதைப் பற்றி அவள் கவலைப்பட்ட தாகத் தெரியவில்லை. "அவள் கை மாறிவிட்டாள்" என்று பேசிக் கொண்டார்கள்; அவள் "கை மாறவில்லை; கார் தான் மாறினாள்". என்று தெரிந்தது.

## 37. விசாரணை

முக்கண் படைத்தவன் சிவபெருமான்; அதனால் அவருக்குப் பெருமை என்று பேசப்படுகிறது.

அவர் மூன்று மனைவியரைப் பெற்று இருந்தார். அது சிறுமை என்று சிலர் விமரிசித்தார்கள்.

ஏன் இவர் மூன்றைச் சேர்த்துக் கொண்டார்? விசாரணை தொடங்கியது. இது இன்றைய பத்திரிகைப் பாணி.

நேரே அவர் வீட்டுக்குப் போனோம்; அவர் தாயாரைச் சந்தித்தோம்.

"உன் மகன் எப்படி?"

"அவன் நம்பியவரைக் கைவிட மாட்டான்; யாரையும் வஞ்சிக்க மாட்டான்; மறுப்பு என்பது அவனிடம் இல்லை; நேர்மை தவறாதவன்" என்று கூறினார்.

அவரையே சந்திப்பது என்று தீர்மானித்தோம்.

"ஏன் நீர் மூவரை மணந்து கொண்டீர்? பிள்ளை இல்லாத குறையா?" என்று நாகரிகமாகக் கேட்டு வைத்தோம்.

"ஆளுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள்; அது அல்ல காரணம்; தொட்டால் ஒட்டிக் கொள்கிறது. பிசின் மாதிரி; "எங்களுக்குப் பதில் சொல்லுங்கள்" என்கிறார்கள்; கை கழுவ முடிவது இல்லை" என்றார்.

பாதிக்கப்பட்டவர்களையே கேட்டு விடுவது என்று மூவரையும் தனித்தனியே சந்தித்தோம். ஒரே மாதிரியான பதில் கிடைத்தது.

அழகும் கவர்ச்சியும் உடைய வாலிபர் அவர்; அறிவும் ஆற்றலும் நிரம்பியவர் அவர்; செல்வமும் இருக்கிறது. பங்கு போட்டுக் கொண்டதில் எந்தத் தவறும் இல்லை. எங்களுக்கு இதில் மனநிறைவே" என்றனர்.

அவர்கள் சொந்த விஷயம்; அதில் தலையிடுவது தவறு என்று நாம் உணர்ந்தோம்.

## 38. முன்னறிவுப்புத் தேவை

அந்த அம்மையார் ஒரு பட்டி மன்றப் பேச்சாளர்; அவரைத் தேடி வந்தவர் சங்கத் தலைவர் ஒருவர்; சங்கீத சபைகள் நடத்தி வந்தார் முன்பு; அவற்றிற்கு இப்பொழுது கூட்டம் சேர்வது இல்லை. தமிழ்க் கூட்டங்களுக்கு நிறைய பேர் திரளுகின்றனர்.

வெட்டிப் பேச்சும் ஒட்டிப் பேச்சும் மேடைகளை நிரப்பின. டி.வியில் பார்த்துவிட்டு முகவரி தேடி அவர் பெயர் வரியை அந்த அம்மையார் வீட்டில் பார்த்து அழைப்பு மணியை அழுத்தினார்.

கண்ணகி சிலைபோல் ஒரு கருத்தம்மா வந்து நின்றார். டி.வியில் பார்த்தவர் இங்கே அவரால்

அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. நிறம் மாறி இருந்தது.

"அமருங்கள் வருகிறேன்" என்றார். டி.வி. பத்திரிகை வாசிப்போர் போல் புதுப்புடவை உடுத்திக் கொண்டு நிறம் மாறிய பூவாக வந்து காட்சி அளித்தார்.

"உங்களைப் பார்க்க வந்தோம்" என்றார் வந்தவர்.

"நீங்கள் என்னைப் பார்ப்பதை விரும்பவில்லை. அதனால்தான் உங்களைச் சரியாக வரவேற்காமல் உள்ளே சென்றேன்" என்றார்.

"விளங்கவில்லையே" என்றார் வந்தவர்.

"கலியாணப் பெண்ணை திடும் என்று வந்து பார்ப்பது இல்லை; அவளுக்கு அவகாசம் தேவைப் படுகிறது. முன்னறிவிப்புத் தேவைப்படுகிறது. இது சம்பிரதாயம்" என்றார்.

யாரையும் பார்ப்பது என்றால் முன்னறிவிப்புத் தேவை என்பதை அவர் அறிந்து கொண்டார்.

## 39. வயது என்பது

அவள் நாட்டியம் கற்றுக் கொண்டிருந்தாள்; சின்ன வயது; அவளை வெளியே சுற்றவிடாமல் பெற்றோர்கள் கையாண்ட முறை இது; அவளுக்கு அது நல்ல உடற் பயிற்சியாகவும் இருந்தது.

கற்றுக் கொள்ளும் போது யாரையும் அனுமதிப்பது இல்லை; காரணம் "அவள் ஆடுவதை மற்றவர்கள் பார்ப்பதை அவள் விரும்புவது இல்லை" என்றார்கள் முன்பு.

அவர்கள் பெற்றோர்கள் இப்பொழுது மறுப்புக் கூறவில்லை.

"நீங்கள் வந்து பார்க்கலாம்; தடை இல்லை" என்று அவள் தாயார் அறிவித்தார்கள்; இவர் பக்கத்து வீட்டுக் காரர்.

"நாட்டியம் யார் கற்றுக் கொடுப்பது? ஆசிரியை யார்?" என்று கேட்டார் இவர்.

"ஆரம்பத்தில் ஒரு அம்மையார் வந்து கொண்டிருந்தார்; நிறுத்தி விட்டோம்."

"இப்பொழுது?"

"தேர்ச்சி பெற்ற ஆசிரியர்; வயது எண்பது; அவர்தான் சொல்லிக் கொடுக்கிறார்; நீங்கள் வந்து பார்க்கலாம்; தடை இல்லை" என்றார் அந்த அம்மையார்.

"வேண்டாம்; பெண் வெட்கப் படுவாள்" என்று சொல்லி இவர் போகாமல் நிறுத்திக் கொண்டார்.

# 40. கொடுத்ததை வாங்கிக் கொண்டார்

பையன் கொழு கொழு என்று இருந்தான். இந்திய சராசரி எடையை விஞ்சி ஊதிய பலூன் போல இருந்தான். மெலிந்தவர்களையே பார்த்துப் பசந்து விட்ட அவர் கண்கள் இவனைப் பார்த்ததும் அவர் பேச்சுப் பசபசத்தது.

"எந்தக் கடையில் அரிசி வாங்குகிறாய்?" என்று கேட்டார்.

"அரிசி வாங்குவது இல்லை; எங்கள் நிலத்தில் விளைகிறது" என்றான்.

"நீ எப்படி இவ்வாறு குண்டு ஆக முடிகிறது?" என்று கேட்டார்.

"உண்டு வளர்த்தது இந்த உடம்பு; நன்றாகச் சாப்பிடுவேன்; சாப்பாட்டுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்; எது கேட்டாலும் எங்கப்பா எனக்கு வாங்கிக் கொடுத்து விடுவார்" என்றான்.

"அவர் என்ன கள்ள நோட்டு அடிக்கிறாரா" என்ற சும்மா கேட்டு வைத்தார்.

பையனுக்கு ஆச்சரியம் ஆகிவிட்டது. "இது எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"தெரிந்துதான் கூறுகிறேன்; தெரியாமல் கேட்பேனா?" என்று தொடர்ந்தார்.

"வேறுயாருக்கும் சொல்லி விடாதீர்; எங்க அப்பாவிடம் சொல்கிறேன்; அவர் வேண்டியது தருவார்; கொடுத்ததை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

"இவருக்குக் குஷியாகி விட்டது; எதிர்பாராத அதிருஷ்டம் அது" என்று மனப்பால் குடித்தார்.

அவர் அப்பா வீட்டுக்கு வந்தார்; வந்ததும் வராததுமாகக் கோள் மூட்டினான்.

"அப்பா! நீங்கள் கொடுப்பதை அவர் வாங்கிக் கொள்வார்" என்றான்.

"அப்படியா" என்று கூறி அவர் அந்த ஆளுக்கு வேண்டியதைக் கொடுத்தார்:

அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டார் என்று தெரிகிறது. ஏன் உடனே அவர் மருத்துவரிடம் சென்று கட்டுகள் போட்டுக் கொண்டு வந்தார் என்பது விளங்க வில்லை.

அவரைச் சென்று விசாரித்தோம்; அவர் சொன்ன பதில் இதுதான்.

"பையனுக்கு உடம்பு கொழுப்பு; அவருக்குப் பணக் கொழுப்பு" என்றார். இவருக்கு "வாய்க் கொழுப்பு" என்று சொல்ல வேண்டி நேர்ந்தது.

## 41. தொழில் நிபுணர்

டாக்டர் அவர் ஸ்டெத்தஸ் கோப்பு மாட்டிக் கொண்டு வந்து ஸ்கூட்டரில் இருந்து இறங்கினார்.

யாரும் அவரை அழைக்கவில்லை; அவரே வந்து விசாரிக்கத் தொடங்கினார்.

இங்கே யாரும் அவரை அழைத்ததாகத் தெரியவில்லை.

"மரம் ஏறுவதற்கு மரம் ஒன்றுக்குப் பத்து ரூபாய்" என்றார்.

"எங்கள் மரம் உயரம் அதிகம் இல்லையே எளிதில் பறிக்கலாமே"

"மட்டையை மாட்டினாலே காசு தரவேண்டும்; உயரம் குள்ளம் அது பற்றி எங்களுக்கு அக்கரை இல்லை" என்றார்.

பக்கத்து வீட்டுக்காரர் இடையிட்டு நமக்காகப் பரிந்து பேசினார்.

"கேரளாவில் மரம் ஏறுவதற்கு இரண்டு ரூபாய்தான்; இது அநியாயம்" என்றார்.

"இரண்டு நிமிஷம் கூட ஆகாது; இதற்கா பத்து ரூபாய்?"

"தொழில் அப்படி?"

"ஸ்கூட்டர் எதற்கு?"

"விரைவில் பல வீடுகளுக்குப் போக வேண்டும்; அண்ணா நகர் முதல் அடையாறு வரை 'கவர்' பண்ண வேண்டும்" என்றார்.

அவரன்றி ஒரு காயும் அசையாது, அவர் தொழில் நிபுணர்; கேட்டதைக் கொடுத்து விட்டோம்.

## 42. பஞ்ச தந்திரக் கதை

அவனுக்கு ஒரு வைப்பாட்டி; அவளுக்கு ஒரு 'பெரிய வீடு' கட்டிக் கொடுத்தான். அதனைச் 'சின்ன வீடு' என்று தவறாக் கூறி வந்தனர்.

அவனை மீட்பது எப்படி? பதிலுக்குப் பதில் என்ற முடிவுக்கு வந்தாள்.

தெருவில் புதுச் செருப்பு இருந்தது; சிகிரெட் துண்டு இருந்தது.

அவள் கணவன் நாகரிகம் உடையவன்; அந்தச் செருப்பு அந்த இடத்தைவிட்டு மறைந்த பிறகு உள்ளே வந்தான்.

"யார் வந்து போனது?"

"உங்களுக்குத் தெரிந்து விட்டதா?"

“இதோ பாரு; என் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகிறாய்; விட்டு விடு; மன்னித்து விடுகிறேன்” என்றான் அவன் .

“உங்களுக்குக் “குரங்கும் தொப்பியும்” கதை தெரியுமா?” என்று கேட்டாள்.

“தெரியும்”

“மரத்தில் ஏறிக் கொண்ட குரங்கு தொப்பியைத் தன் தலையில் மாட்டிக் கொண்டது; அது கீழே போட ஒரு உபாயம்; அது பார்க்கும்படி இந்த வியாபாரி தலையில் ஒரு தொப்பி அணிகிறான்”

“தெரியும்; அந்தத் தொப்பியை வீசிக் கீழே எறிகிறான்; அந்தக் குரங்கும் தொப்பியைக் கீழே தூக்கி எறிகிறது”

“நீங்கள் அணிந்திருக்கும் தொப்பியைக் கீழே போடுங்கள்; நான் தூக்கி எறிந்து விடுகிறேன்” என்றாள்.

அந்தப் பெரிய வீட்டுப் பக்கம் அவன் போவதை நிறுத்திக் கொண்டான்.

“இந்தக் கற்பனையை யார் அவளுக்குக் கற்றுக் கொடுத்தது?”

அவனை வராமல் தடுக்கப் பெரிய வீட்டில் வாழும் சின்ன அம்மாதான். அவர்கள்தான் இந்தக் கற்பனையை இவா மனைவிக்கு உபதேசித்தாள்.

அவன் திருந்திய பிறகு அவனுக்கு அது அவள் அமைத்த சிறுகதை என்பதைத் தெரிவித்தாள்.

கற்பனை பயன் கொடுத்தது.

# 43. வருகைப் பதிவேடு

நண்பர் அவர்; அதனால் தன் மகனின் மணத்துக்கு அழைப்புத் தந்து! இருந்தார்.

தான் சென்றால்தான் அந்த நிகழ்ச்சி நிறைவு பெறும் என்றால்தான் எந்த நிகழ்ச்சிக்கும் இவர் செல்வது வழக்கம்.

கும்பலில் யார் வந்தார்கள் யார் வரவில்லை? எப்படிக் கவனிக்க முடியும்?

"வந்தேன். உங்களைப் பார்க்க முடியவில்லை" என்று சொல்லி விடலாம் என்று போகாமல் இருந்து விட்டார்.

பிறகு அவரால் ஒரு காரியம் ஆக வேண்டி இருந்தது; எப்படி அவர் முகத்தில் விழிப்பது? சமாளித்துக் கொள்ளலாம் என்ற துணிவோடு அவர் வீட்டுக்குச் சென்றார்:

"வாருங்கள்" என்று வரவேற்றார்.

"திருமணத்துக்கு வரவில்லையே?" என்று கேட்டார்.

"நீங்கள் கவனிக்கவில்லை" என்று கூறிச் சமாளித்தார்.

"சாப்பிட்டீர்களா"

"ஓகோ பிரமாதம்" என்று கஷ்டப்பட்டு அந்தப் பொய்யைக் கூறினார்.

இருவரும் சோபாவிற் அமர்ந்தனர். முன் டி.வி. ஓடிக் கொண்டிருந்தது; வி.சி.ஆர் அதில் ஒரு காசெட செருகினார்.

அந்த விருந்தில் பட்டுப்புடவை கட்டிக் கொண்டு வந்தவர்கள் தொட்டுச் சுவைப்பதைக் காட்டினார். அங்கவஸ்திரங்களையும் காட்டினர்; ஜிப்பா அணிந்த ஆள் யாரும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

"நீங்கள் வருகைப் பதிவேடு வைத்திருப்பீர்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கவில்லை" என்றார் அவர்.

## 44. சூடு தணிந்து விட்டது

அவன் 'எடுபிடி' வேலை செய்து உதவுவான்; அவனுக்கு ஒரு "கெடுபிடி" ஏற்பட்டது.

அவன் தங்கைக்கு மணம் நிச்சயம் ஆகிவிட்டது. நாள் நெருங்கிக் கொண்டு இருந்தது. இடம் பிடித்து அட்வான்சு தர வேண்டும்.

கடன் உடன் வாங்கிக் கலியாணம் செய்து தீர வேண்டும்.

சீட்டு எடுக்கலாம் என்றால் அது எட்டாத உயரத்துக்குச் சென்று கொண்டிருந்தது.

சமயத்துக்குப் பணம் கிடைக்கவில்லை; இவனுக்குப் புகலிடமாக இந்த நண்பர்தான் கிடைத்தார்.

வெந்நீரைக் காலில் கொட்டிக் கொண்டதுபோல் துடி துடித்தார்.

"அவசரமாக ஐந்தாயிரம் வேண்டும்; சீட்டு எடுத்துக கொடுத்து விடுகிறேன்" என்றார்.

அவன் நல்லவன்; சமயத்துக்கு உதவுவான்; அவன் அவசரத்துக்கு உதவுவது கடமையாகப்பட்டது. இவர் கொஞ்சம் நல்ல மனிதர்; ஆபத்துக்கு உதவுவது இல்லை பலர்; ஏதாவது சாக்குச் சொல்வார்கள். அந்தப் போக்கு இவருக்குப் பிடிக்கவில்லை; கொடுத்தார்; உதவினார்; அவன் கலியாணமும் ஒருவகையாக நடத்தி முடித்தான். பணமும் திருப்பிக் கொண்டு வந்து தந்து விட்டான்.

"நான் கொடுக்காமல் இருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?" என்று சற்று கர்வத்தோடு கேட்டார்.

"வேறு யாரிடமாவது கேட்டு முடித்து இருப்பேன்" என்று அமைதியாகக் கூறினான்.

## 45. போனில் ஒரு டயலாக்

"ஹல்லோ யார் பேசுவது? டைரக்டர் ஆறுமுகமா?"

"டைரக்டர்; பிரொடியூசர் எல்லாம் நான்தான்"

"உங்கள் பட விவகாரமாகப் பேசவில்லை கடன் விவகாரமாகத்தான் பேசுகிறேன்"

"ஓகோ பொருளாளரா! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்; கொடுத்து விடுகிறேன்"

"படம் என்ன ஆச்சு?"

"கையைச் சுட்டுகிட்டேன்; டிஸ்ட்ரிபியூட்டர் யாரும் வருவதாக இல்லை. மார்க்கட்டு மந்தம்"

"அப்படி ஒன்றும் இல்லை; உங்க படம்தான் ஏதோ குறை"

"ஒரு வருஷத்துக்கு முன்பு ஆரம்பித்தோம்; அப்பொழுது அந்தக் கதைக்கு வரவேற்பு இருந்தது; ஒரு வருஷத்திலே 'ட்ரெண்டே' மாறி விட்டது. இந்த மக்களை நம்பவே முடியறது இல்லை"

"பின் என்னதான் செய்யப் போறீங்க?"

"தேர்தல் வருது, நிற்கலாம் என்று இருக்கிறேன்; எப்படியும் ஒரு மந்திரியாகிவிடலாம்; வாய்ப்பு இருக்கிறது"

"எப்படிச் சொல்கிறீர்"

"சாதி செல்வாக்கு இருக்கிறது. வெற்றி உறுதி; அதுமட்டுமல்ல; எங்க சாதியிலே நான்தான் இந்த வட்டாரத்திலே முதல் பட்டதாரி"

"கட்சியிலே டிக்கட் கிடைக்குமா?"

"அதற்கு நீங்கள் கொஞ்சம் பொருள் கடன் கொடுங்க; எல்லாம் சேர்த்து வட்டியும் அசலும் தந்துவிடுகிறேன்; உங்களுக்குப் பதவிக்கு வந்த பிறகு நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன் எல்லா டெண்டர்களும் உங்களுக்குத்தான்"

"யோசனை பண்ணுங்க! இப்ப கையைச் சுட்டு கிட்டிங்க; நாளைக்கு நீங்க ஜெயிக்கலாம்; ஆனால் வெடி குண்டு விபத்து கத்தி வெட்டு இதற்குத் தப்ப முடியுமா? யோசித்து இறங்குங்க; காலம் அப்படி"

"யோசிக்க வேண்டியதுதான்; நன்றி."

## 46. தொலைபேசியில் ஒரு தொல்லை

மணி அடித்தது.

"ராங் கால்"

"பரவாயில்லைங்க; கால் வீணாகக் கூடாது; அதற்காக ஏதாவது பேசிவிடலாமுங்க"

"சரி! உனக்கு என்ன வேணும்?"

"விளக்கமாச் சொல்லணும்! நீங்க தனியா இருக்கிறீங்களா! கூட யாராவது இருக்காங்களா?"

"உனக்கு எதுக்கு அது எல்லாம்?"

"தெரிஞ்சுக்கணும்; அதுக்கப்புறம்தான் தெளிவாகப் பேச முடியும்"

"நான்தான்; தனியாகத்தான் இருக்கிறேன்"

"நல்லதாப் போச்சு! நான் சரியா ஒன்பது மணிக்கு வர்ரேன்; இரண்டு தடவை அமுக்குவேன்; நான்தான் என்று தெரிஞ்சுக்கலாம்; கதவைத் திறந்து விடுங்க"

"எதுக்கு?"

"அது உங்க வயசைப் பொறுத்தது"

"நாற்பதைக் கடந்தவள்; எனக்கு யாரும் துணை இருக்க மாட்டார்கள்; தனியாத்தான் இருப்பேன்"

"உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்; உள்ளதைச் சுருட்டிக் கொள்வேன்; அவ்வளவுதான்"

"முப்பதுக்குக் குறைவு"

"உங்கள் பொருளுக்கு எந்த ஆபத்தும் வராது; உங்க பொருளுக்கு ஆசைப்பட மாட்டேன்"

"கட்டாயம் வந்து விடு; உனக்காகக் காத்து இருப்பேன்"

இந்த வரவேற்புக் கிடைக்கும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

"வேறு யாரும் அங்கு உன்னோடு இருக்க மாட்டார்களே"

"சொல்ல முடியாது; நீ மூன்றாவது ஆள்; இது போல் போனில் பேசியது"

"அவர்கள் யார்?"

"வந்த பிறகுதான் தெரியும்; உங்களில் யார் வல்லவர்களோ அவர்களுக்குத்தான் வெற்றி"

"இது என்ன சினிமாக் கதையா?"

"இன்று வாழ்க்கை அப்படியாகி விட்டது. இதுபோல் தினம் ஒரு கால் வரும்; இன்று மூன்று அழைப்புகள்."

"எப்படி சமாளிப்பீர்?"

"என் கணவரை டியூட்டிக்குப் போக வேண்டாம் என்று தடுத்துவைப்பேன்."

"அப்படி ஒரு தடியன் வேறு இருக்கிறானா"

"என்ன செய்வது? அது அவர் தொழில்; கையில் தடி வைத்துக் கொண்டுதான் இருப்பார்; சில சமயம் துப்பாக்கியும் வைத்து இருப்பார்?"

"யார் வீடு இது?"

"சப் இன்ஸ்பெக்டர் இராமநாதன் வீடு"

"அதை முதலிலேயே சொல்லி இருக்கக் கூடாதா?"

"சொல்ல விட்டால்தானே"

"ராங்க் நெம்பர்; கீழே வையுங்கள்"

## 47. பாராட்டு

பழந்தமிழ்ப் புலவர் இவர்; அதாவது பழைய தமிழில் நூல் எழுதுவார். சங்கத் தமிழ்மாலையாக அவர் கட்டுரைகள் விளங்கின. அவர் தன்னை 'செஞ்சொற் கவி மழை' என்று அடை கொடுத்துத் தன் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்வார். அந்த அடைமொழி இல்லாமல் அவர் தன் பெயரை அச்சில் வெளியிடுவதே இல்லை. 'கலைமாமணி' என்ற பட்டத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்; அவர் புலமை அவ்வளவு தூரம்

எட்டவில்லை. செயற்கரிய செயல் ஏதாவது செய்ய வேண்டும் என்பது அவர் ஆவல்.

அவர் எழுதி வைத்த ஏட்டை அச்சிட அவர் பொருளாதாரம் இடம் தரவில்லை. பதிப்பகங்கள் அவர் எழுத்தை வெளியிட யாரும் முன்வரவில்லை. "இதை எல்லாம் யார் ஐயா படிக்கிறார்கள்?" என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை தேட அவரை அனுப்பி வைத்தனர்.

அச்சில் தன் எழுத்தைக் காண வேண்டும் என்ற பேராவலில் ஒரு நூல் எழுதினார். முதன் முதலில் கவிதையில் ஒரு காவியம் எழுதினார்; அது ஒரு பழைய புராணத்தின் நகல் போல் காணப்பட்டது. அது தோல்வி அடைந்தது; புதுக் கவிதையில் எழுத வேண்டும் என்று முனைந்தார்; அதற்குப் புதுக் கருத்துகள் தேவைப்பட்டன. சிறந்த கவிஞர்களும் எழுத்தாளர்களுமே புதுக் கருத்து களுக்குத் தவிக்கும் போது இவருக்கு எங்கே கிடைக்கப் போகிறது?

தமிழ் நாட்டின் தேக்க நிலையைக் காட்டும் வகையில் தெய்வநூல்களுக்கு இன்று சந்தை இருக்கிறது என்பதை அறிந்தார்; அரசியல் மாற்றத்துக்கே கடவுள்தான் வந்து காப்பாற்ற வேண்டும் என்ற மனோபாவம் தோன்றிவிட்ட சூழ்நிலையில் இது ஒன்றும் புதுமை இல்லை; இது இந்த நாட்டு அவலநிலை.

தெய்வ நூலே அவருக்குப் புகலிடம் தந்தது. பழந் தமிழில் பழைய செய்திகளை உரை நடையில் எழுதி முடித்தார்.

அச்சிட்டுத் தர ஒரு ஆஸ்தீகக் கொடை வள்ளல் கிடைத்தார்; அவருடைய நிழற்படம் அட்டையில் பின்புறம்

அச்சிட ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது; அவர் தந்த பொருள் கொடையில் நூல் வெளி வந்தது.

பத்திரிகை விமரிசனங்களுக்கு அனுப்பி வைத்தார்.

'புதிய புத்தகம்' என்ற தலைப்பில் பத்திரிகைகள் அறிமுகம் செய்தன.

"தாள் புதிது; அட்டைப்படம் புதிது; கவர்ச்சியாக அச்சிடப்பட்டுள்ளது; இது பாராட்டத் தக்கது; இதைப் போல் நூல்கள் வெளியிடுவதைப் பாராட்டுகிறோம்" என்று எழுதிப் பாராட்டினர்.

அவர் இனி எந்த வரியும் எழுதி அச்சிடுவது இல்லை என்று தீர்மானம் செய்து கொண்டார்.

## 48. ஏக்கம்

ஊனமுற்றோர்க்குச் சலுகைகள் தரப்படுகின்றன. தொலைபேசி "பூத்" பக்கத்தில் கால் ஒடிந்த நடராசர் ஒருவர் பேசுபவரிடம் காசு பறித்துக் கொண்டு இருந்தார்.

அவனுக்கு எப்படி இந்தச் சலுகை கிடைத்தது?

இந்த இளைஞன் மட்டமான மார்க்குகள் வாங்கி எங்கும் போட்டிப் போட முடியாமல் பின் தங்கி நின்றான்; அவனும் தன்னை ஊனமுற்றவர்களில் ஒருவனாக ஏன் இந்தச் சலுகை வாரியங்கள் கருதக் கூடாது என்று ஒருவகையான ஏக்கம் கொண்டான்.

அவனைப் போல் தன் கால் முடமாகி இருந்தாலும் ஒரு இடம் கிடைக்குமே என்று வேடிக்கையாக எண்ணிப் பார்த்தான்; அவன் முடமாவதற்கு அவ்வளவு ஒன்றும்

கஷ்டப்படவில்லை; ஒருவன் ஸ்கூட்டரில் இடித்து அவன் கையை ஒடித்துக் கொடுத்தான்.

அரசு நிறுவனமோ தனியார் நிறுவனமோ தெரியாது; அங்கு விண்ணப்பித்தான்.

நேர் காணல் நடந்தது.

"ஏன்? திறமையும் ஆரோக்கியமும் உள்ளவர் ஆயிரம் பேர் கியூவில் நிற்கிறார்கள். ஒரு கை இழந்த உனக்கு எப்படி இங்கு இருக்கை தரமுடியும்?" என்று கேட்டார்.

எதையும் நியாயப்படுத்துவதற்குக் காரண காரியங்களைக் காட்டமுடியும். சாகப் போக நினைத்தாலும் அதற்கும் அதிருஷ்டம் வேண்டும். எதையும் இந்த உலகில் எளிதில் சாதிக்க முடியாது; நியாயத்தை அடைய ஒரு அநியாயம் தேவைப் படுகிறது; அதை அவன் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

## 49. சமரச ஞானி

'வீட்டைக் கட்டிப் பார்; கலியாணம் செய்து பார்' என்று சொல்லுவார்கள். இரண்டையும் பார்த்தவர் அவர்; வசதியான வாழ்க்கை இருந்தது; அதனால் இவை ஒரு பிரச்சனை இல்லை. பிள்ளைகளுக்கு எல்லாம் கலியாணமும் செய்து வைத்து நிம்மதியாக இருக்கிறார்.

அவர் வீட்டு முகப்பில் அவரைச் சந்திக்கப் பலர் வந்து கொண்டிருந்தனர். அவர் நாலுபேர் மதிக்கவே வாழ்கிறார். அவருக்குப் படங்கள் மாட்ட வேண்டும் என்ற ஆசை; அதற்காக அவர் ஒரு திறப்பு விழா நடத்தத் திட்டமில்லை. இது வீடு; அதனால் அது தேவை இல்லை;

முதலில் எந்தப் படங்களை மாட்டுவது? இதுதான் அவருக்கு எழுந்த பிரச்சனை.

நடிகை நட்சத்திரத்தை மாதிரிக்கு மின்ன வைத்தார்.

"யார் இவர்?"

"புது நடிகை; வடநாட்டில் இருந்து இங்கு வந்து நமக்கு மகிழ்வு அளிக்கிறாள்" என்றார்.

"தமிழ் நடிகைப் படம் மாட்டி வையுங்கள்; அது உங்கள் தன்மான உணர்வுக்கு அறிவிப்பாக இருக்கும்" என்றனர்.

"சரி என்று ஒப்புக் கொண்டார்; தமிழ் நடிகையில் யாரை மாட்டுவது?"

அவரால் இன்னும் முடிவு செய்ய இயலவில்லை. குஷ்பு முன்னால் பேசப்பட்டவள்; அவள் பெயர் அடிபட்டுவது நின்றுவிட்டது; அவளும் தமிழ் நடிகை அல்ல என்று தெரிந்தது.

காந்தியின் படம் மாட்டினார்.

அவர் சிரித்துக் கொண்டே இருந்தார்.

"நீ பொய் சொல்கிறாய்! அதை நீ விட முடியுமா?" என்று கேட்பது போல் இருந்தது.

"முயற்சிக்கிறேன்" என்று அதற்கு அவர் பதில் சொன்னார்.

காமராசர், அண்ணா, பெரியார் இவர்களை மதித்தார்.

மூன்று படங்கள் சுவரை நிரப்பின.

அரசியலில் மக்கள் தலைவர்களாக இருப்பவர்களின் படங்களை மாட்டுவதில் அவருக்குப் பிரச்சனை எழுந்தது.

ஆளும் கட்சிப் படம் மட்டும் மாட்டி வைத்தார்.

“எதிர்க்கட்சிக் காரர்கள் எதிர்ப்புகள் தெரிவித்தனர்; அவர்களும் இவருக்கு வேண்டியவர்கள்; அதனால் அதற்கு மதிப்புத் தந்தார்.

ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவர்கள் படங்களையும் மாட்டி வைத்தார்.

அது வீடாகக் காட்சி தரவில்லை. ஒரு சமூகக் கூடமாகக் காட்சி அளித்தது.

யாரும் அங்கே என்ன படம் இருக்கிறது என்பதைக் கவனிப்பது இல்லை; பழகி விட்டது. தனித்துவம் எதுவும் தெரியவில்லை.

சில இடங்கள் காலியாக வைத்தார்

“யாருக்கு? ஏன்” என்ற கேள்வி பிறந்தது.

“புதிய தலைவர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு” என்றார்.

அவர் தீர்க்க தரிசனம் கண்டு நண்பர்கள் பாராட்டினார்கள்.

“உங்களுக்கு என்ற கொள்கை எதுவும் இல்லையா?”

“யாரையும் பகைத்துக் கொள்ளாததுதான் நம் கொள்கை”.

“தேர்தல் காலங்களில்?”

“கேட்பவர்க்கு நிதி தருவேன்; பேதம் பாராட்டுவது இல்லை”

"வோட்டு"

"அது மட்டும் என் சொந்த விஷயம்; அதை யாருக்கும் வெளிப்படுத்த மாட்டேன்" என்றார்.

## 50. புதிய பரிமாணம்

அவர் தன் மகனுக்கு ஒரு மகளைத் தேடிக் கொண்டு இருந்தார்; மகள் என்றால் தவறாகக் கொள்ள வேண்டாம்; மருமகளைத் தேடினார். அவள் இவர் வீட்டுக்கு வரும்வரை வெறும் மகள்தான்; அதனால்தான் மகள் என்று குறிப்பிட வேண்டியது ஆகிறது.

அவருடைய அளவு கோல்கள் சாதாரண மானவையே; பையனுக்கு படிப்பு இருந்தது; அவன் பட்டம் வாங்கவில்லை; குடும்ப நிறுவனம் ஒன்று இருக்கிறது; அதை அவன் நிர்வகிக்கிறான். திறமைசாலி; புத்திசாலி; தனவான்; குணவான் எல்லாம் இருந்தது.

அவனுக்காக அவர் தேடியது அவனிடம் இல்லாத ஒன்று; அவள் அழகாக இருக்க வேண்டும் என்பது; எல்லாம் இருக்கிறது; பெண் நிறம் இல்லை என்றால் தரம் அன்று என்று தள்ளி வந்தார்.

கடைசியில் அவர் ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்தார்; அவர்களுக்குப் பணம் இல்லை; மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்ள அவர்களிடம் குணம் இருந்தது. அந்தப் பெண்ணுக்கு அவனைப் பிடித்து விட்டது; காரணம் அவளால் அதற்குமேல் காத்திருக்க விருபபம் இல்லை.

அந்தப் பெண் வீடு அவ்வளவாக வசதி உடையவராகத் தென்படவில்லை. அதைப் பற்றி அவர்

விமரிசிக்கவில்லை “இவ்வளவு தாழ்ந்து நாம் போகத் தேவை இல்லை” என்று கூறினார்.

“ஏன் எதைப் பார்த்து இப்படிக் கூறுகிறீர்? கார் இல்லை என்பதாலேயா?”

“அது கூட நாம் வாங்கிக் கொடுத்து விடலாம்; போன் இல்லை; அவர்களோடு பேச்சு வார்த்தை நிகழ்த்த முடியாதே” என்றார்.

“பேச்சு வார்த்தைதான் இப்பொழுதே முடிந்து விடுகிறதே?”

“பின்னால் அவர்களோடு தொடர்பு கொள்ளத் தேவைப்படுமே” என்றார்.

“அவர்கள் எழுதிப் போட்டு இருக்கிறார்கள்! ‘வெயிட்டிங் லிஸ்டில்’ இருக்கிறதாம்; வந்து விடும் என்று சொல்கிறார்கள்”.

“அதுவரை நாமும் காத்திருப்போம்” என்று கூறி விட்டார்.

“அது அவ்வளவு முக்கியமா?” என்று கேட்கப்பட்டது.

“யாராவது கேட்டால் என்ன சொல்வது? போன் கூட இல்லை என்றால் எங்களை மதிக்க மாட்டார்களே” என்று விளக்கம் தந்தார்.

அந்தஸ்த்தின் அளவு கோல் தொலைபேசி என்பதை அவர் பேச்சால் உணர முடிந்தது; இது ஒரு புதிய பரிமாணமாகத் தென்பட்டது.

இந்த நாட்டில் சாதனமாக இருப்பவை எல்லாம் மதிப்பீட்டின் அளவு கோல்களாக அமைந்து வருகின்றன. அவற்றில் இதுவும் ஒன்று என்று தெரிவிக்கப்பட்டது.

# 51. பிரிவினை கூடாது

'மங்கலம் என்ப மனைமாட்சி' என்று அன்று வள்ளுவர் கூறினார்; அந்த அம்மையார் அதற்கு அடையாளமாகப் பூவும் பொட்டுமாகக் காட்சி அளித்தார். அவரோடு மற்றொரு அம்மையார் செல்வது வழக்கம்; அவர் தமக்கு இருக்கும் இயற்கைப் பொலிவைக் கூட்டிக் கொள்ள வண்ணத்துகளும் பூசிக் கொள்ளவில்லை; சுண்ணத்துகளும் தேடிக் கொள்ளவில்லை; பூவை மறந்த பூவையளாகக் காட்சி தந்தாள்; சாலையில் அவர்கள் இரட்டையராகச் சென்று கொண்டிருந்தனர்.

ஓரிருநாள் அந்தப் பூ மாதேவி அவரோடு இல்லை; இந்தப் பூவை மட்டும் சென்று கொண்டிருந்தாள்.

அவர்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்ற தேவை பிறந்தது.

"மணி என்ன?" என்று கேட்டு வைத்தோம்; அவர்கள் கையைப் பார்த்துப் "பத்து" என்றனர்.

"உம் உடன் வருவாரே அந்தப் பூமாதேவி காணப்படவில்லையே" என்று கேட்டு வைத்தோம்.

"பூமாதேவியா? அப்படி யாரும் இல்லையே?"

"பூதேவி" என்றேன்

"சீதேவிதான் தெரியும்; இது என்ன பூதேவி?" என்றாள்.

"பூவும் பொட்டுமாகச் செல்வார்கள் அவர்கள் எங்கே?" என்று கேட்டோம்.

"அவள் கணவருக்கு நேற்று தலைதிவஷம்; அதனால் வரவில்லை"

"உங்களைப் போல அவளும் ஒரு விதவையா?" என்று கேட்டு விட்டோம்.

"நான் விதவை அல்ல; என் கணவர் இருக்கிறார்" என்று பதில் சொன்னாள்.

"பூவும் பொட்டும்?"

அந்தப் பிரிவினை தேவை இல்லை. எல்லாம் பழக்கம் தான் காரணம்; அவருக்கு விட முடியவில்லை; என்னால் இட விருப்பமில்லை; அவ்வளவுதான்" என்றாள் அந்தச் சீதேவி.

## 52. யாருமே சாகக் கூடாது

அவன் எட்டாம் வகுப்பு மாணவன்; சேட்டு வீட்டுப் பையன்; அவன் வீட்டு மொழி இந்தி; பேசும் மொழி தமிழ்; அதில் வட நாட்டுப் பண் கூடி இருந்தது; தமிழ்ச் சொற்களை இந்தி வாக்கியத்தில் வைத்துப் பேசினான். நமக்கு என்பதை 'நம்பள்கு' என்று திரித்துப் பேசினான் இவன் இங்கு வந்து ஐந்து வருஷம் ஆகிறது. என்றாலும் தமிழ் அவனோடு ஒட்ட மறுத்தது. அவன் எப்பொழுதும் சுரு சுருப்பாகப் பேசுவான்.

நல்லதுக்கும் விடுமுறை விடுகிறார்கள். அல்லதுக்கும் விடுமுறை தருகிறார்கள். அவர்கள் பள்ளிக் கூடப் பேர்உந்தி ஒரு சிலரைப் பள்ளத்தில் வீழ்த்தி அள்ளிக் கொடுத்து

விட்டது. மருத்துவ மனையில் அவர்கள் அனுமதிக்கப் பட்டுத் திருத்தம் பெற்று வந்தனர். ஒருவன் மட்டும் மருத்துவத்துக்கு ஒத்துழைக்க மறுத்து விட்டான்.

'எக்சர்ஷன்' சென்ற இடத்திலேயே அவனை 'எக்சகவேட்' செய்து புதைத்து விட்டு அனுதாபச் செய்தி ஒன்று எழுதிக் கல்லில் பொறித்துவிட்டு வந்தனர்.

இந்த சேட்டுப் பையன் அந்தப் பள்ளியில் படிக்கிறான். இறந்து விட்ட பையனின் அவலச் செய்தியைச் சோகம் கூட்டிப் பேசினான்.

"அந்த வீட்டுக்கு அவன் ஒரே பையன்; அவன் அம்மா அப்பா துடிதுடித்துப் போனார்கள்; அந்த வீடு படா சோகம் ஆகிவிட்டது" என்றான்

"நீ செத்து இருக்கலாம்; நீ உங்கள் வீட்டுக்கு எத்தனையாவது பிள்ளை?" என்று கேட்டு வைத்தோம்.

"நான் மூத்த பையன்; எனக்குத் தம்பி தங்கையர் நான்குபேர் இருக்கிறார்கள். என் அப்பா செத்து விட்டால் நான்தான் அவர்களைக் கவனிக்க வேண்டும்; நான் என் வீட்டுக்கு மிகவும் அவசியம்" என்றான்.

"யாருமே சாகக் கூடாது" என்று நாம் அவனுக்குப் பதில் சொன்னோம். "யார் செத்தாலும் துக்கம் துக்கம்தான்" என்றோம்.

## 53. ஓய்வு ஊதியம்

அவர் பத்தாயிரத்துக்கு மேல் வாங்கிக் கொண்டு இருந்தார். ஓய்வு பெற்றதும் அவருக்கு அதில் பாதி அளவு கிடைத்தது. காற்று இருந்த போது தூற்றிக் கொண்டவர்; பற்றாக்குறை என்பது அவரைப் பற்றவில்லை.

வேலை செய்யும் நாட்களில் அவரைப் பாதசாரியாகப் பார்த்தது இல்லை. காரைவிட்டு இறங்கும் போதுதான் அவர் கால்கள் பூமியில் படிந்தன. அதற்கு முன் அவர் தேவலோக வாசிதான்; தேவர்கள் கால்கள் பூமியில் படிவது இல்லை என்று கூறுகிறார்கள்.

இவரை இன்று கடைகளில் கொசுறுவதைப் பார்க்கலாம்; 'பால் பூத்துக்கு' இவர் காலையில் சென்று விடுகிறார். கியூவில் நிற்கும் இடங்களில் எல்லாம் அவர் கியூவில் நிற்கிறார்.

"ஏன் வேலைக்காரன் என்ன ஆனான்?"

"அவனை நிறுத்திவிட்டேன்"

"அவனுக்கு என்ன கொடுத்தீர்கள்?"

"ஐந்நூறு; இப்பொழுது அதனை மிச்சப்படுத்தி விட்டோம்; அந்த வேலைகள் எல்லாம். நானே செய்து விடுகிறேன்" என்று தன் விளக்கம் தந்தார்.

பத்தாயிரம் சம்பாதித்தவர் இன்று ஐந்நூறுக்கு வேலை செய்கிறார்; இது தாழ்வா உயர்வா? தெரியவில்லை.

"எனக்கு வேலை வேண்டும்" என்கிறார்.

இன்று இவர் இதைத்தானா செய்யவேண்டும்? தெரியவில்லை; சிந்தித்துக் கூறுங்கள்.

## 54. அவள் வைத்த தேர்வு

"காதல் எங்கள் வளர்ப்புரிமை" என்று திரைப்படக் கலாச்சாரம் இன்று இளைய தலைமுறைக்கு அறிவுறுத்துகிறது.

'மனித உரிமைகளுள் வாழ்க்கைத் தலைவனைத் தேர்ந்து எடுக்கும் உரிமை எனக்கு உண்டு" என்று பேசுகிறாள் பத்மினி.

"யார் அவளைத் தடுக்க முடியும்?"

கல்வி அந்தப் புதிய உரிமையை அளித்தது; படித்தபின் அவளை அடக்கமாக வீட்டில் முடக்கி வைத்தனர்.

கிடைத்த சந்தர்ப்பங்கள் பலவற்றை அவள் இழந்து விட்டாள்; அந்த வருத்தம் அவளை உறுத்தியது. படிக்கும் போது அந்த விஷயத்துக்கு அவள் முதலிடம் கொடுக்கவில்லை. இந்தப் பரிட்சைகள் எங்கே அவளைக் காதலிக்க விடுகிறது? பாடங்களைப் படித்து மனப் பாடம் பண்ணுவதற்கே நேரம் இல்லை; வலிய வருகிற கால்பந்து ஆட்டக்காரர்களை அவள் ஒதுக்கிவிட்டாள்.

எப்படியோ அந்தப் பழைய தொடர்பு துளிர்க்க ஆரம்பித்தது; வேலை தேடும் படலத்தில் அந்தக் குறும்பனைச் சந்திக்க நேர்ந்தது. அதற்குப் பின் அவனைச் சந்திப்பதற்காகவே இவள் பல வேலை இண்டெர்வியூக்குச் சென்று வந்தாள் வேலை கிடைக்கவில்லை; சிரித்துப் பேசிக் காதலை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

காதலை எப்படி வளர்ப்பது? என்று எந்த நூலும் யாரும் இதுவரை எழுதவில்லை. அது அவர்களுக்குத் தேவை இல்லை. அவர்களே படிப்படியாக வளர்த்துக் கொண்டார்கள்.

முதலில் கண்கள் பேசின; இதழ்கள் பேச அவள் இடம் தரவில்லை.

அவன் அவசரப்பட்டு விட்டான். தொடக்கூடாது என்று அவள் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்; தொட்டாலும் பரவாயில்லை; அவன் அதற்கு என்ற வரையறை செய்யப்பட்ட விளையாட்டை மீறிச் செயல்பட்டான்; அது தவறான விளையாட்டு என்று அவளுக்குப் பட்டது.

கன்னத்தில் ஓங்கி அறை விட்டாள் அவன் எதிர் பார்க்கவில்லை.

ஏசுநாதரின் பொன் மொழி அவனுக்கு உறுதுணையாயிற்று.

அடுத்த கன்னத்தைக் காட்டினான்; அவள் அவனை அணைத்து ஆதரவு தந்தாள் என்று பின் தெரிந்தது.

"ஏன் என்னை அடித்தாய்?" என்று அவள் சோறு ஆக்கிப் போட அதனை உண்ணுகின்ற அன்றாட நிகழ்ச்சிகளில் அவன் கேட்டு வைத்தான்.

"அந்த அறை சரித்திர முக்கியத்துவம் உடையது; உன் பொறுமை என்னைக் கவர்ந்தது; வாழ்க்கையில் பொறுமை மிகவும் தேவை. நான் காலமெல்லாம் சமைத்துப் போட வேண்டும்; கல் இருந்தாலும் சோற்றிலிருந்து எடுத்துப் போட்டுவிட்டு மெல்லும் சூழ்நிலைகள் ஏற்படும். அதற்கு உனக்குத் தகுதி இருக்கிறதா என்று ஆராய்ந்தேன். அந்த ஆராய்ச்சிதான் அது. நீ தேர்வில் வெற்றி பெற்று விட்டாய்" என்ற சிரித்துக் கொண்டே சொன்னாள்; அவர்கள் வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்தது; விரிசல்கள் எழவில்லை.

# 55. சாதனை

“அந்த வீடு திருடனிடம் கொடுத்தால் கூட பத்துக்குக் குறையாது” என்று அதைப் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது.

அதாவது எதையும் தராமல் கொள்ளையடிக்கும் தொழிலாளி அவன்; அவனே பத்து லட்சம் தருவான் என்றால் அதன் மதிப்பு இருபதுக்குக் குறையாது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட மதிப்பீடு.

அவசர நிமித்தமாக அவர் ஐம்பதினாயிரம் கை நீட்டி வாங்கி விட்டார். அப்பொழுது அந்த வீட்டுக்கு அவ்வளவு மதிப்பு இல்லை. எல்லாம் ஒரு வருஷத்திலே அது இருபது லட்சத்துக்கு உயர்ந்து விட்டது. அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க இயலவில்லை. வீட்டை விற்பது என்று முடிவுக்கு வந்தார் ஐந்து லட்சம் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒரு வருஷம் காலம் அளிக்கப்பட்டது.

அக்கிரிமெண்டு காலாவதி ஆகிவிட்டது என்று கூறுகிறார்கள். உரிய காலத்தில் பதிவு செய்யப்படவில்லை. இருவருக்கும் தகராறு என்று கூறுகிறார்கள்.

ஒப்பந்தக்காரன் அந்த வீட்டில் குடிபுகுந்து விட்டான்; அவன் வீடு தனக்கு விற்பனை செய்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினான்.

சட்டசபைக்கு இருவரும் போக நேர்ந்தது. இருபது லட்சத்துக்கு ஆள் கிடைத்தார்கள்; கழுகுகள் அந்த வீட்டைச் சுற்றி வட்டமிட்டன.

வாங்குவதற்கு எல்லோரும் தயாராக இருந்தார்கள்; ஆனால் ஒன்று; அவனைக் காலி செய்து தர வேண்டும். அதற்கும் சட்டப் பிழைப்பாளர்கள் உறுதி தந்தனர்.

அவனைப்பற்றி ஒரு வதந்தி பரவியது; "அவன் இதுவரை ஐந்து கொலைகள்தான் செய்திருக்கிறான்; அதற்கு மேல் போகவில்லை" என்று செய்தி பரவியது.

ஒப்பந்தம் நிறைவேறியது; ஐந்து லட்சத்துக்கே அவனுக்கு விற்க நேர்ந்தது.

அந்தக் கொலையாளியை நாம் பார்க்க வேண்டும் என்று விரும்பினோம். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவரை விசாரித்தோம்.

"நான் இதுவரை ஒரு மூட்டைப் பூச்சியைக் கூட கொன்றது இல்லை; நசுக்கி இருக்கிறேன்; அது தானே செத்து விடும்" என்றான்.

"இந்தச் செய்தி?"

"வதந்தி; அதை நானே கிளப்பி விட்டேன்; அதனால் தான் இந்த வீட்டை வாங்க முடிந்தது; சட்டம் பேசியவர்கள் எல்லாம் விலகி விட்டார்கள்; விற்றவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றினார்" என்று விளக்கம் தந்தான்.

இவன் ஒரு சாதனையாளன் என்று மதிப்பிட முடிந்தது.

## 56. தேவையற்ற தேவை

அவர்கள் அப்பா அவர்களைப் புத்தகக் கண் காட்சிக்கு அழைத்துச் சென்றார்.

மூத்தவன் எட்டாம் வகுப்பு; விடுமுறை; ஆங்கிலப் பள்ளி; அதனால் 'ஸ்டோரி புக்' கேட்டான். இரண்டு புத்தகங்களோடு வீடு திரும்பினர்.

வீட்டை அடைந்ததும் ஒரு அலறல் எழுந்தது.

அது அவன் தங்கை எழுப்பியது. அழுகையை நிறுத்த வில்லை.

“பொம்மை” என்று பொருமி அழுதாள்.

‘நேற்றுதானே வாங்கிக் கொடுத்தேன்; இதற்குள் இன்னொரு பொம்மையா?”

“இரண்டு வேண்டும்”

“என்ன பொம்மை வேண்டும்?”

“ஏதாவது, இரண்டு” என்றாள்.

வேறு வழியில்லை; இரண்டு பொம்மைகளை வாங்கி வந்து தந்தார்; அழுகை நின்றது; சுரம் தணிந்தது. பழைய நிலைக்கு வந்து சேர்ந்தாள்.

“ஏன்’மா இப்படி அழுதாய்? ஏன் இரண்டு பொம்மைகள் கேட்டாய்?” என்று அமைதி திரும்பியதும் கேள்விகள் கேட்கப்பட்டன.

“அண்ணனுக்கு இரண்டு புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார் அப்பா; எனக்கு ஒன்றும் வாங்கித் தரவில்லை”.

“அவன் படிக்கிறான்; படிப்பதற்கு” என்றனர்.

“அதுவும் பொம்மை புத்தகம் தான்; கதைப் புத்தகம்” என்றாள்.

அவளைப் பொறுத்தவரை அது தேவையற்ற தேவை என்பதை உணர்ந்தனர்.

## 57. செய்தி ஒன்றுதான்

காலையில் அவன் கதவின் முன் நின்றான்; நேரம் ஒன்பது இருக்கும்; முள் பன்னிரண்டைத் தொடவில்லை.

தொட்டுக் கொள்ள நெருங்கிக் கொண்டு இருந்தது; அவன் வந்து நிற்கிறான்; கடிகாரம் ஒன்பதைத் தொடுகிறது.

“அடிபட்டு விட்டது; சாலையை அவர் கடந்து கொண்டு இருந்தார்; அதற்குள் கார் வந்து மோதி விட்டது” என்றான்.

கேட்டதும் அந்த அம்மையாருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

“பாவி மனுஷன் பார்த்து நடக்கக் கூடாதா?” என்று அங்கலாய்த்தார்.

“ஆஸ்பத்திரிக்கு உடனே எடுத்துச் சென்றார்கள். தையல் போட்டிருக்கிறார்கள். ஒரே ரத்தம்; நல்ல காலம் உயிர் பிழைத்தது” என்றான்.

இந்த அம்மையாருக்குக் கை ஓடவில்லை; கால் ஓடவில்லை. வெலவெலத்துப் போய்விட்டார்.

“அவர் இன்று வேலைக்கு வரமாட்டார்; அம்மா சொல்லச் சொன்னார்கள்” என்று முடித்தான்.

அப்புறம்தான் தெரிந்தது; செய்தி தன் கணவரைப் பற்றி அல்ல என்பது. டிரைவரைப்பற்றியது; அந்தப் பையன் டிரைவரின் மகன்.

“அடப்பாவி! அதை முதலிலேயே சொல்லித் தொலைத்து இருக்கக் கூடாதா? பயந்தே போய்விட்டேன்” என்று கூறி ஒரு நிலைக்கு வந்து சேர்ந்தார் அந்த அம்மையார்.

விசாரித்ததில் அந்த அம்மையாரின் கணவர் காலையில் நடப்பதற்கு வெளியே சென்றிருந்தார் என்பது தெரிந்தது. ஒன்பது பத்துக்கு அவர் வீடு வந்து சேர்ந்தார்.

இந்த அம்மையார் அவரை ஏற இறங்கப் பார்த்தார்.

கட்டு எதுவும் இல்லை; கட்டுக் குலையாமல் இருந்தார்.

''பயந்து போய்விட்டேன்'' என்றார் அந்த அம்மையார்.

"டிரைவர் பையன் சொன்னான்"

அந்த அம்மையார் சொல்லி முடிப்பதற்கு முன் அவர் சொல்லி முடித்தார்.

"சாலையைக் கடந்தேன்; நல்ல காலம்; கார் மோதி இருக்கும்; மயிர் இழையில் உயிர் பிழைத்தேன்' என்றார்.

"டிரைவரும் மயிர் இழையில்தான் பிழைத்திருக் கிறானாம்; இன்று அவன் வரமாட்டான்" என்று முடித்தார்.

## 58. கெடுபிடிகள்

"ஐயா! நீர்தானா ஈசன்?"

"ஆமாம்"

''உங்களைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறேன்'' இவருக்கு பயம் உண்டாகியது.

தான் யாரையும் அடிக்கச் சொன்னது இல்லை; யாரோ அடித்துக் கொலை செய்து விட்டு இவர் தூண்டியதாகச் சொல்லி இருக்கிறார் என்று யூகித்தார்.

"நான் யாரையும் அடிக்கச் சொன்னதில்லை"

"நீர் சொல்லித்தான் அடிக்க வேண்டும் என்பது இல்லை. அவனவன் அடித்துக் கொண்டுதான் இருக்கிறான்.

கள்ள நோட்டுகள்; அதை யாரும் தடுக்க முடியாது" என்றார்.

கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொண்டார்.

"உங்களுக்கு உங்கள் பேரில் வங்கிக் கணக்கு இருக்கிறதா?" என்பது அடுத்த கேள்வி.

வருமான வரித் துறையார் கேள்வி போல் இருந்தது.

"அதிகம் இல்லை"

"இருக்கிறதா? இல்லையா? கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்" என்று வற்புறுத்தினார்.

நீதிமன்றம் போல் இருந்தது அந்த விசாரணை.

"ரேஷன் கார்டில் உங்கள் பெயர் இருக்கிறதா?"

"இல்லை"

"நீர்தானே குடும்பத்தலைவர்?"

வேறு ஒருவர் இருந்தார்; அவர் பெயர்தான் இருக்கிறது. அவரை 'டைவர்சு' செய்து விட்டார்கள். என்னை இரண்டாம் தாரமாக மணம் செய்து கொண்டிருக்கிறார்; நான் புதிதாகக் குடியேறியவன்; என் பெயர் அதில் இல்லை; இனிமேல்தான் மாற்றிக் கொள்ள வேண்டும்; அதுவரையில் நான் இருக்க வேண்டும்; வேறு ஆள் வந்து விட்டால் மாற்றப் பயன் இருக்காது" என்று எதையும் மறைக்காமல் சொன்னார்.

"இது நடிகையின் வீடா?"

"அப்படி ஒன்றும் இல்லை; இன்று பலரும் அவர்கள் பாதையைப் பின்பற்றுகிறார்கள்" என்றார்.

"சிறு தொழில் பதிவு நிறுவனத்தில் பதிவு செய்து இருக்கிறீர்களா?"

"மணப்பதிவு நிறுவனத்தில் பதிவு செய்து இருக்கிறோம்"

"அது அல்ல; 'ஈசன் நிறுவனம்' என்று ஒரு நிறுவனம் தொடங்கி இருக்கிறீர்களே அது குறித்து ஒரு பதிவு அஞ்சல் வந்திருக்கிறது. அதை உங்களிடம் சேர்க்க வேண்டும்; அஞ்சல் துறை ஆய்வாளர் நான்; முதல் கடிதமாக இருந்தால் விசாரித்துத்தான் தரவேண்டும்"

"ஆரம்பமே இப்படி என்றால் இந்தத் தொழில் நடத்துவதற்கு எத்தனை அதிகாரிகளைச் சந்திக்க வேண்டுமோ இந்தக் கடிதமே வேண்டாம்; திருப்பி அனுப்பி விடுங்கள்" என்றார்.

## 59. மழலைச் சொற்கள்

அவன் மழலைச் சொற்களைக் கேட்பதில் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவனிடம் பேசுவதற்கு இரண்டு சொற்களைத் தேர்ந்து எடுத்தார்; அவை திரைப்படத்தில் இருந்து எடுக்கப் பட்டவை.

போடா என்பது ஒன்று; மடையா என்பது மற்றொன்று. அதை அவர் தனித் தனியாகச் சொல்லிக் கொடுத்தார்; அவன் சேர்த்து ஒரே தொடராகக் கூறினான்.

"போடா! மடையா!" என்றான்.

தான் செய்த தவறை உணர்ந்தார்; வேற புதிய சொற்களைத் தேர்ந்து எடுத்தார்.

"போண்டா வடையா" என்று சொல்லிக் கொடுத்தார்.

அவன் திருப்பிச் சொல்லவில்லை.

"இரண்டும் வேண்டும்' என்று அழத் தொடங்கினான்.

எது சொன்னாலும் ஏதாவது சிக்கல் ஏற்பட்டது.

" 'அம்மா அப்பா' திருப்பிச் சொல்" என்றார்.

"மம்மி டாடி" என்றான். "அம்மா அப்பா சொல்லக் கூடாது; மம்மி டாடி என்றுதான் சொல்ல வேண்டும்; டீச்சர் அப்படித்தான் சொல்லச் சொன்னாரு" என்றான். அவனை அவரால் மாற்ற முடியவில்லை.

அவனுக்கு அவன் தாய் தாய்ப்பால் ஊட்டவில்லை என்று தெரிந்தது; தாயார் புட்டிபால்தான் ஊட்டினார் என்று அறிய முடிந்தது. அவனுடைய பெற்றோர்கள் இந்த இரண்டு சொற்களைக் கேட்டுப் பூரித்துப் போயினர்.

அவனை அந்தப் பள்ளியில் சேர்ப்பதற்குக் கட்டியது இரண்டாயிரம்; அவன் கற்றுக் கொண்டது இரண்டு சொற்கள்.

## 60. நீ ஒரு விவேகி

"கணவன் உயிரைக் காப்பாற்றக் கற்பை விற்றாள் ஒரு காரிகை" இது ஒரு கொடுமையான நிகழ்ச்சி.

அவள் செய்தது நியாயமா? அதற்கு விடை உயிர் பெற்று எழுந்தவன்தான் சொல்ல முடியும். அவன் முடிவு செய்யவேண்டியது இது; கதையின் தொடக்கம் இது.

நம் பையனுக்குத் தமிழ் மொழிதான் தாய் மொழியாக இருக்கிறது. அதனால் அவனுக்கு இலக்கண விளக்கம் தெரிய வேண்டும் என்பது இல்லை.

தமிழ் ஆசிரியர் அவனை ஒரு கேள்வி கேட்டு வைத்தார் வகுப்பில்.

"ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடு யாது?" என்று கேட்டு விட்டார்.

அவன் வீட்டில் வந்து நம்மைத் தொளைக்க ஆரம்பித்தான்.

"அவரையே கேட்டு அறிந்துவா" என்று சொல்லி அனுப்பினோம்.

அவர், "அதைப்பற்றி ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதிக் கொண்டிருக்கிறேன்" என்றார் அன்று.

இன்று இருபது ஆண்டுகள் கழித்து அவர் நம்மைச் சந்திக்கிறார்.

"வேலையை இராஜினாமா செய்து விட்டேன்" என்று தெரிவிக்கிறார்.

ஏதோ மானப்பிரச்சனையாக இருக்கும் என்று அனுமானிக்க நேர்ந்தது.

"என்ன சார்! யாருடனாவது சண்டை போட்டுக் கொண்டீர்களா? என்று கேட்க நேர்ந்தது.

"இல்லை; என் பெண் வயசுக்கு வந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகின்றன" என்றார்.

"என்ன ஆண்டு விழா நடத்த இருக்கிறீர்களா?"

"பெண்ணுக்குக் கலியாண வயது என்ன? சொல்ல முடியுமா?"

*"அது நம் சவுகரியத்தை ஒட்டியது? அவள் சாமார்த்தியத்தையும் சார்ந்தது".*

*"இருபத்தி ஒன்று என்று தானியங்கு வண்டிகளில் எழுதி விளம்பரப்படுத்தி இருக்கிறார்களே தெரியுமா சார்"*

*"அதற்கு முன் மணம் செய்யக் கூடாது; அது சட்டம்"*

*"இப்பொழுது அவளுக்கு 32 ஆகிறது. அதற்கு மேலும் நீடிக்கலாமா?*

*"நீடித்தால் அதுவும் குற்றம்தான், குற்றம்மட்டும் அல்ல; கொடுமையும் கூட".*

*"யார் வந்தாலும் குறைந்தது லட்ச ரூபாய் எதிர்பார்க்கிறார்கள்; நல்ல மாப்பிள்ளை வேண்டுமானால் இது குறைந்த தொகை".*

*"நீ சேர்த்து வைத்திருக்க வேண்டும்"*

*"ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடு குறித்து ஐந்நூறு பக்கம் நூல் ஒன்று வெளியிட்டேன்; அந்தக் கடனையே இன்னும் அடைக்க முடியவில்லை."*

*"பெண் ஒருத்தியைப் பெற்றுவிட்டு இந்த வீண் வேலையில் இறங்கியது தவறு"*

*"இப்பொழுது என்ன செய்வது?"*

*"கலியாணம் முக்கியம்; அதற்காக நீ எதையும் செய்யலாம்; கடன் வாங்கலாம்; திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை".*

*"ஒருத்தி கற்பு முக்கியமா கணவன் முக்கியமா என்று மனப் போராட்டம் நடத்தினாள் கணவனைக் காப்பாற்றினாள்".*

“எதுக்கு இதைச் சொல்கிறாய்?”

“என் உத்தியோகத்தை இராஜினாமா செய்து விட்டேன். கிராடியுட்டி பணம், பென்ஷன் விற்பனைப் பணம் எல்லாம் ஒரு லட்சம் வரும், அதைக் கொண்டு அவளுக்குத் திருமணம் செய்து வைத்தேன்” என்றார்.

இரண்டையுமே என்னால் சீரணம் செய்ய முடியவில்லை.

இப்படி நடக்கக் கூடாது? அப்படி நடக்கிறது: அதைக் கேட்கும் சூழ்நிலைகளை நாம் தவிர்க்க முடியவில்லை.

“நீ இப்பொழுது என்ன செய்ய இருக்கிறாய்?”

“பாதிச் சம்பளம் பென்ஷன் வரும். இது போதும்; இலக்கண நூல் எதுவும் எழுத மாட்டேன்; அச்சிடமாட்டேன். சிக்கனமாக வாழ முடியும்” என்றார்.

“நீ விவேகிதான்” அறிவுடன்தான் செயல்பட்டிருக் கிறாய்; அந்தக் கற்புக்கரசி செயலையும் நம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. கணவனைக் காப்பாற்றினாள்; கற்பைக் காத்துக் கணவனை இழந் திருந்தால் அவள் தன் வாழ்க்கையையும் இழந்திருப்பாள். அவளைக் குறை கூற முடியவில்லை.

அவள் செய்தது நியாயந்தானா? என்று கேள்வி கேட்கவில்லை; தேவைதானா? என்பதுதான் கேள்வி.

யாராவது அவளுக்கு உதவி இருக்கலாம்.

விசாரித்துப் பார்த்ததில் யாரும் உதவிக்கு வரவில்லை, சூழ்நிலை அத்தகையது என்று தெரிகிறது.

இந்த ஆசிரியர் அவர் தவறு செய்ததாகத் தெரியவில்லை; புத்திசாலித்தனமாகத்தான் பட்டது.

## 61. சத்திய சோதனை

"ஏனுங்க 'படம் பார்க்கப் போ'றேன் என்று சொன்னீங்க. போகலைங்களா?"

"படம் பார்க்கிறது இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்; இனிமேல் போகப் போறது இல்லை" என்று அவர் பதில் கூறினார். காரணம் சொல்லவில்லை.

அன்று ஒரு புத்தகம் படித்துக் கொண்டு இருந்தார்; அதில் எழுதப்பட்டு இருந்தது. "காரியம் மட்டும் முக்கியம் இல்லை; அதற்காக எடுக்கும் முயற்சியும் வழியும்கூட அடிப்படை" என்று எழுதி இருந்தது.

அந்த நேரத்தில் அது சரி என்று பட்டது.

மூன்று வருஷத்துக்கு முன்னால் அவர் அவசரமாக ரயில் பயணம் செய்தார். அப்பொழுது இப்பொழுதுபோல் முன் பதிவு செய்தல் ஒழுங்காக அமுலில் இல்லை.

அதற்கு என்று சில ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் இடம் பிடித்து 'டவல்' போட்டுவிட்டு உரிமை கொண்டாடினர். இவர் அவருக்கு அவர்கள் கேட்ட பதிவுத் தொகையைக் கொடுத்துப் பயணம் செய்தார்.

இது நியாயமா என்று யோசனை செய்து கொண்டு இருந்தார்.

இந்தப் புதிய படம்; எங்கும் இந்தப் படம். என்பதே பேச்சு; அதை எப்படியும் பார்ப்பது என்ற ஆவல் அவரைத் தூண்டியது., காசெட்டுகள் இப்பொழுது கெடுபிடியாகி விட்டன; 'கள்ளக் காதல்' தடுக்கப்பட்டு விட்டது.

தியேட்டருக்குச் செல்வது என்று முடிவு செய்தார்; போனவுடன் ரயில் பயணம் செய்ய முடியாது; இரண்டு வாரத்துக்கு முன் பதிவு செய்ய வேண்டி இருந்தது அதுவரை காத்திருக்கலாம். அதற்குள் அந்த ஆர்வம் ஆவியாகப் பறந்துவிடும். எதுவும் சூடாகச் சாப்பிட்டால் தான் சுவை. ஆறின கஞ்சியாக இருந்தாலும் பரவாயில்லை என்று பதிவு செய்யச் சென்றார்.

ஒரு மாதத்துக்குப் பதிவு ஆகிவிட்டது. போர்க்களம் செல்லும் வீரன் திரும்பி வருவது அவன் வீரத்துக்கு இழுக்கு.

அங்கே ஒரு பெண்ணும் ஒரு ஆணும் 'டிக்கட்டு' விற்றுக் கொண்டிருந்தனர். பதினைந்து ரூபாய் டிக்கட்டு முப்பத்தைந்துக்கு என்று சொன்னார்கள். இவருக்கு மனம் வரவில்லை.

நேரே ஒரு 'உங்கள் நண்பர்' என்று 'பாட்ஜ்' குத்திக் கொண்டு சேவை புரிந்த காவலரை அணுகினார்; அவர் காக்கி சட்டை அவரை அடையாளம் காட்டியது.

அவரிடம் சென்று புகார் செய்தார். அவர் முப்பது கொடுத்தால் தான் டிக்கட்டு தருவதாகக் கூறினார்.

வேலியே பயிர் மேய்வதை அறிகிறார். மனம் உடைந்து வீடு திரும்புகிறார்.

மறுபடியும் கணக்குப் போட்டார். ஆட்டோவுக்குத் தரவேண்டும் மறுபடியும் தியேட்டருக்கு வருவதற்கு.

காவல்காரரிடம் முப்பது கொடுத்து வாங்க விரும்ப வில்லை. தீமையின் அளவு ஆராய்ந்து செயல்படுதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவரை முதலாளிடம் அனுப்பியது; அதாவது முதல் ஆள் அவரிடம் அனுப்பியது. முப்பத்தைந்து கொடுத்து விற்பனையாளரிடமே வாங்கினார்.

"எப்பவும் நாங்கள் அவருக்கு மாமூல் ஐந்து தருவோம்" என்று அவர்கள் தம் நிலையை எடுத்து உரைத்தனர்.

இந்த விசாரணையில் இறங்கிக் கொண்டிருந்தால் படம் ஓடிவிடும்; அதை ஓடிப்போய்ப் பிடிக்க வேண்டும். விளம்பர வேதனைகள் முடிவதற்கும் படம் ஆரம்பம் ஆவதற்கும் சரியாக இருந்தது.

"உள்ளே கதை ஓடியது. அந்த ஹீரோ பிளாக் மார்க்கட்டில் டிக்கட்டு விற்கிறான். அவனோடு போட்டி போட்டுக் கொண்டு அவள் அதாவது கதாநாயகி அவனை வம்புக்கு இழுக்கிறாள். எல்லோரும் அவளிடம்தான் டிக்கட்டு வாங்குகிறார்கள். அவளை அவனால் வெல்ல முடியவில்லை. வேறு வழியில்லை. சமாதானம் பேசினான். அதாவது காதல் செய்கிறான். அதைத்தான் அவள் விரும்புவது. இப்படி அந்தக் கதை செல்கிறது.

கதாநாயகனே பிளாக் மார்க்கட்டில் டிக்கட்டு விற்கிறான்; அதனால் அவன் ரசிகர்கள் அதைத் தொழிலாகச் செய்வது தவறு இல்லை என்பது புலப்பட்டது.

பத்திரிகைகளில் அந்தப் படத்துக்கு வசூல் ஆகவில்லை என்று பேட்டி கொடுத்திருந்தார்கள். போட்ட முதலீடும் எடுக்க முடியவில்லை; 'கள்ள காசெட்டுகள்தாம் காரணம்' என்று அறிக்கை விட்டனர்.

அந்த அனுபவத்திற்குப் பிறகு எந்தப் படமும் தியேட்டருக்குச் சென்று பார்ப்பது இல்லை என்று அவர் முடிவுக்கு வந்தார். அதைத்தான் அவர் தன் மனைவியிடம் தெரிவித்தார்.

"அது தானுங்க நானும் படத்துக்கு வருவது இல்லை; டிக்கட்டு பத்து ரூபாய் என்றால் பிளாக்குலே இருபது தர வேண்டி இருக்கிறது" என்று பின் மொழிந்தாள்; தீர்மானம் நிறைவேறியது.

"நீ எங்கே போய் வருகிறாய்?" என்று கேட்டார்.

"கோயிலுக்கு; இன்று விசேஷ நாளுங்க" என்றார் அந்த அம்மையார்.

"என்ன விசேஷம்?"

"உள்ளே தரிசனம் பார்க்க ஏகப்பட்ட 'கியூவு'; போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்"

"எப்படி?"

"உள்ளே குறுக்கு வழியில் அழைத்துப் போக ஐம்பது ரூபாய் கொடுத்தேன்; விட்டுவிட்டார்கள்" என்று தன் வெற்றியை உரைத்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகம் சத்திய சோதனை. மகாத்மா காந்தி எழுதியது.

# 62. விளக்கம்

நேற்றுப் பார்த்தது இன்று இல்லை. அப்படி என்றால் தத்துவம் பேசுவதாக நினைப்பீர்கள். தத்துவமாவது மண்ணாங்கட்டியாவது.

இன்று அப்படித்தான் பலபேர் பேசி வருகிறார்கள். “எப்படித்தான் பணம் இப்படிச் சேர்கிறதோ என்கிறார்கள்.”

இன்று அலாவுதீனும் அற்புத விளக்கும் பழைய கதையாகி விட்டது.

ஆயிரம் என்று பேசியவர்கள். இன்று லட்சம் என்று பேசுகிறார்கள். கோடிக்கு எட்டி விட்டார்கள். எல்லாம் கன அடி அளவில் பேசப்படுகிறது.

இதற்கு முன்னால் அந்தப் பெண்ணைப் பார்த்த போது அவள் அந்தக் காலத்து இலக்கிய வருணனையாக இருந்தாள். அன்று ஒடிவது போலும் இடை இருந்தது. எல்லாம் அளவோடு இருந்து பார்ப்பதற்குக் காட்சியாக இருந்தாள். லட்சணமாக இருக்கிறாள் என்று அவளைப் பற்றிய அட்சரம் பேசப்பட்டது.

அவள் எப்பொழுதும் தனித்துச் செல்வது இல்லை. யாராவது துணையோடுதான் போவாள்; எல்லாம் அவள் வயது பெண்கள்தாம். சீட்டியும் மாட்டியும் அவள் சீமாட்டி அல்ல என்பதைக் காட்டின. முத்து வடம் ஒன்று அவள் கழுத்தில் தொத்திக் கொண்டு இருந்தது. வளையல்கள் கைக்கு ஒன்று இடப்பட்டு இருந்தன. மின்னவில்லை. அதனால் பொன் அல்ல.

எல்லாம் இரண்டு வருஷம்தான். அவள் அங்கம் முத்து ஆகிவிட்டது; 'அங்கம்முத்து' என்று ஒரு சிலர் அவளை அடையாளம் காட்டினர். முன்பு பார்த்ததற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம். அவளா இவள் என்ற தலைப்புக்கு உரிய அங்கம் வகித்தாள். "நிச்சயம் அவள் படத்தைக் காட்டினால் இவள்தான் அவள் என்று சொல்ல மாட்டீர்கள். பந்தயம் வேண்டுமானால் கட்டுகிறேன்" என்று சிலர் பேசக் கேட்க முடிகிறது.

அவளோடு பேச வேண்டும் என்று தோன்றியது.

"எப்படிப் பேசுவது?"

வயசு பெண் அவளிடம் பேசுவது தடை செய்யப்பட்ட ஒன்று.

'வயசு பெண்ணிடம் உனக்கு என்ன பேச்சு?' இந்தப் பல்லவி தடுத்தது.

நம்ம அதிருஷ்டம் ஸ்கூட்டர் காரன் அவளோடு உராயச் செல்கிறான்.

உரசினான்; ஆனால் கோபுரங்கள் சாய்வதில்லை என்பதை எடுத்துக் காட்டினாள். சேறு மட்டும் அவளை வேறு படுத்தியது.

அவன் அருகில் வந்தான்.

"மன்னிக்கணும்" என்று ஆங்கிலத்தில் கூறினான்.

'நீ ஒரு மிருகம்' என்று பதிலுக்கு அவனைச் சாடினாள்.

"மறுபடியும் வா பார்த்துக் கொள்ளலாம்" என்று கனத்த குரலில் அவனுக்கு அழைப்பு விடுத்தாள்.

அவள் சென்றதும் அவனை விசாரித்தோம்.

"அவளை உனக்குத் தெரியுமா?" என்று வினவினோம்.

"தெரியும் ஒல்லிக் குச்சியாக இருந்தாள். இன்று தடித்தனம் ஆகி விட்டது" என்று விளக்கம் கூறினான்.

"நீ இடித்தது மடத்தனம்தானே" என்று கேட்டோம்.

"இதெல்லாம் வாலிப விளையாட்டு. நீங்கள் கண்டு கொள்ளாதீர்கள்" என்று அவன் அறிவுரை கூறினான்.

□ □ □